33

# பௌத்தம் -ஒரு சுருக்க வரலாறு

வெண. நாரத தேரர்.

294·3
நாரத

தம்மச் சக்கர வெளியீடு எண் - 2.

தம்மக்

ஒ

வெ

க

தம்மச் சக்கர வெளியீடு – 2.

# பௌத்தம்

## ஒரு சுருக்க வரலாறு

ஆங்கிலத்தில் எழுதியவர்:
வண. நாரத தேரர் அவர்கள்.

தமிழில் மொழிபெயர்த்தவர்:
செல்வி யசோதரா நடராசா

பௌத்த நூல் வெளியீட்டுக் கழகம்
கண்டி. இலங்கை.

*The WHEEL Publication Tamil Series No. 2.*

294.3
BAD
EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE
LIBRARY
46.
JAFFNA

# BUDDHISM IN A NUTSHELL

by
The Ven. NARADA THERA

*Tamil Translation by*
Miss YASODARA NADARAJAH

First Edition

*Published byt*
Buddhist Publication Society
KANDY 1971 CEYLON

இந்த மலர்

பேராசிரியர் கே. என். ஜயதிலகா அவர்கள்

மறைந்த

முதலாண்டு நினைவுத் தினத்தில்

வழங்கப்படுகின்றது.

23-7-1971.

---

OFFERED FOR DISTRIBUTION

IN MEMORY OF

**PROFESSOR K. N. JAYATILLEKA**

on the occasion of the

FIRST ANNIVERSARY OF HIS DEATH

23rd July 1971.

# பௌத்தம்

## ஒரு சுருக்க வரலாறு

"நமோ தஸ்ஸ பகவதோ அரகட்ட சம்மா சம்புத்தஸ்ஸ"

### அத்தியாயம் 1.

### புத்த ஞாயிற்றின் உதயம்

பரத கண்டத்திலே நேபாள தேசத்திலே பிற்காலத்தில் உலகத்தின் மாபெரும் சமயத் தலைவராக வரவிருந்த சித்தார்த்த கௌதமர் கி. மு. 623ம் ஆண்டு வைகாசி மாதத்தின் நிறைமதி நன்னாளாகிய புண்ணிய தினத்திலே, சாக்கிய குல இளவரசராகத் திருவவதாரஞ் செய்தார்.

சகல அரச சுகபோகங்களில் வளர்க்கப்பட்ட கௌதமர், இளவரசருக்குரிய கல்வி அறிவைப் பெற்றார்; உரிய பருவத்தில் மணம் முடித்து ஒரு மகனுக்கும் தந்தையானார்.

இவருடைய ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையும் எல்லையில்லாக் கருணையும், அரண்மனையின் நிலையற்ற இலௌகீக இன்பங்களை அநுபவிப்பதற்குத் தடையாயிருந்தன. இவர் ஒரு துன்பத்தையும் அநுபவிக்காவிட்டாலும் துன்பமுறும் மானுடரைக் கண்டு மிகவும் மனம் இரங்கினார். சகல சுக போகங்களின் நடுவே அவர் வாழ்ந்த உலகை வியாபித்த துன்பத்தின் தன்மையை நன்குணர்ந்தார்; கருணையுள்ளம் படைத்த இளவரசருக்கு அரச

மாளிகையும் அதன் போகங்களும் உகந்ததாகப்பட வில்லை. அவர் அரச வாழ்வைத் துறக்க வேண்டிய பருவம் அணுகிவிட்டது. புலனுகர் இன்பங்களின் பகட்டை உணர்ந்த கௌதமர், இலௌகீக இன்பங்களைத் துறந்து, தமது 29வது வயதில் துறவிகளின் எளிய உடையாகிய துவராடையைத் தரித்து, உண்மையையும் மன அமைதியையும் தேடித் தன்னந் தனியனாகப் புறப்பட்டார்.

இது வரலாறு கண்டறியாத ஒரு மாபெருந் தியாகம். ஏனெனில், அவர் தன்னைத் தியாகம் செய்தது, எல்லா நலன்களும் நிறைந்த இளமைப் பருவத்தேயல்லாமல், நரை திரை நிறைந்த முதுமையிலன்று; நிறைந்த செல்வச் செழிப்பிலேயல்லாமல் வரண்ட வறுமையிலன்று. பண்டைக் காலத்தில் துறவற வாழ்க்கையே வீடு பேற்றுக்கு வழி என நம்பப்பட்டது. அதற்கேற்பக் கௌதமரும் எல்லா விதமான கடும் தவங்களையும் நோன்புகளையும் மேற்கொண்டார். வழிபாட்டுக்கு மேல் வழிபாடும், நோன்புக்கு மேல் நோன்புமாக மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட முயற்சிகளில் ஆறு வருடங்கள் ஈடுபட்டார்.

இதனால் அவரது உடம்பு வற்றி யுலர்ந்து ஓர் எலும்புக் கூடாகியது. அவர் எவ்வளவுக்குத் தன் உடம்பை வருத்தினாரோ அவ்வளவுக்கு அவருடைய குறிக்கோள் அவரிடமிருந்து விலகியது. அவர் கடுமையாக வருந்தி அனுசரித்த நோன்புகள் எவ்வித பயனையும் அளிக்கத் தவறிவிட்டன. உடல் நலிவையும் மனத் தளர்ச்சியையும் கொடுக்கும் இந்த நோன்புகளினால் தம்மை வருத்துதல் எவ்வித பயனையும் தராதென்னும் உண்மையைத் தம் அநுபவவாயிலாகத் தெளிவாகக் கண்டுகொண்டார்.

இந்த அருமையான அநுபவத்தால் தெளிவடைந்த கௌதமர், முடிவாகத், தன் குறிக்கோளையடைய, புலனுகர்ச்சியில் திளைத்தல், தன்னை ஒறுத்தல் ஆகிய இரு அந்தங்களையும் தவிர்த்து ஒரு வழியைப் பின்பற்ற உறுதி

கொண்டார். முன்னர் கூறப்பட்ட புலனுகர்ச்சி ஆத்மீக வளர்ச்சியைத் தடை செய்யும்; பின்னர்க் கூறப்பட்ட தன்னை ஒறுத்தலாகிய வழி புத்தியை மந்தமாக்கும். கௌதமர் தாமாகவே கண்டுபிடித்த புதிய வழி நடுவழி அல்லது 'மஜ்ஜிமா பட்டிப்பதா' என்று பெயரிடப்பட்டது. இதுவே, பின்னர் அவர் செய்த போதனைகளின் முக்கியமான அம்சமாக இருந்தது.

ஒரு மங்களமான காலைப் பொழுதில், கௌதமர் ஆழ்ந்த நிஷ்டையில் மூழ்கியிருக்கும் போது, எந்தவிதமான தெய்வீக சத்தியின் வழிகாட்டலோ, உதவியோ இல்லாமல், தம் சுய முயற்சியினுலும் ஞானத்தினுலும் தம்மிடமிருந்த களங்கங்களை வேரறக் களைந்தெறிந்து தம்மைப் பரிசுத்தராக்கிக் கொண்டார். அத்தோடு இப் பிரபஞ்சத்தின் உண்மை நிலையை உணர்ந்து சித்தார்த்த கௌதம பிரான் தமது முப்பத்தைந்தாவது வயதில் எவராலும் இலகுவில் அடைய முடியாத பரிபூரண ஞானம் உதிக்கப் பெற்று ஒரு புத்தரானுர். கௌதமர் பிறக்கும்பொழுது புத்தராக, விளிப்படைந்த அல்லது ஞானம் பெற்ற ஒருவராக (அதாவது ஞானம் பெற்றவராக)ப் பிறக்கவில்லை. ஆனுல் அவர் தம் சொந்த முயற்சியினுலேயே ஒரு புத்தரானுர். எல்லா நற்குணங்களின் திருவுருவாக அமைந்த புத்ததேவர் தமக்கு இயற்கையில் அமைந்திருந்த ஆழ்ந்த அறிவோடும், அளவு கடந்திருந்த எல்லையற்ற கருணையோடும் அல்லலுற்ற மக்களுக்குத் தமது நற்போதனைகளை வாரி வழங்கி வந்தார். அவர் தமது விலைமதிப்பற்ற வாழ்நாளின் எஞ்சிய பகுதியை மனித குலத்துக்குத் தமது பெரிய போதனைகளாலும் அரிய சாதனைகளாலுஞ் சேவை புரிவதற்கென அர்ப்பணித்தார்.

தமது நலம் எதுவும் கருத்திலின்றி, இடையருது நாற்பத்தைந்து ஆண்டுகள் மிக வெற்றிகரமாகத் தொண்டாற்றித் தமது போதனையையே குருவாக ஏற்றுக் கொள்ளும்படி தம் சீடருக்குப் பணித்து, மனிதனுகப் பிறந்த எவரையும்போல் எண்பதாவது வயதில் நிலைபெற்ற உலக

வியலின்படி, இவ்வுலகை நீத்துப் பரிபூரண நிர்வாணப் பேற்றையெய்தினர்.

புத்தர் ஒரு மானுடப் பிறவி; அவர் மனிதனாகவே பிறந்தார்; மனிதனாகவே வாழ்ந்தார்; அவரது வாழ்வும் பிற மனிதருடைய வாழ்வைப் போலவே முற்றுப்பெற்றது. அவர் மனிதனாகப் பிறந்தாலும், உயர்வும் ஒப்பும் இல்லாத ஒரு தனிப் பெரும் மனிதனாக (ஆச்சரிய மனுசா) இருந்தார். ஆனால் அவர் ஒரு போதும் தம்மிடம் தெய்வீகம் இருந்ததாகக் கருதவில்லை. இந்த முக்கிய விஷயத்தை வலியுறுத்தித் தம்மை ஒரு மரணமில்லாத் தெய்வீகப் பிறவி என்று எவரும் தப்பெண்ணம் கொள்ளவும் அவர் இடங்கொடுக்கவில்லை. அதிட்டவசமாக, யாரும் புத்தரை என்றைக்கும் கடவுளாகப் போற்றவில்லை. எனினும் புத்தரைப் போலக் கடவுள் நம்பிக்கை இல்லாதவரும், ஆனால் அவரைப்போற் "கடவுட்டன்மையுடையவருமாகிய" ஒரு மதபோதகர் என்றைக்கும் இப் பூவுலகில் இருந்ததில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலர் எண்ணுவதுபோல், புத்தர் இந்துமதக் கடவுளான விஷ்ணுவின் அவதாரமோ அல்லது தமது சொந்தக் கடைத் தேறலினால் மற்றவரை இரட்சிக்கும் ஆண்டவரோ அல்லர். "ஒருவனின் தூய்மையும் களங்கமும் அவன் மேல் தான் தங்கியுள்ளன; ஆனபடியால், சீடர்களுடைய விடுதலை அவர்களிலேயே தங்கியுள்ளது;" எனப் புத்தர் தம் சீடர்களிடம் வற்புறுத்திக் கூறியுள்ளார். தன்னம்பிக்கையையும சுயமுயற்சியையும் வலியுறுத்திய அவர், தமக்கும் தம்மைப் பின்பற்றுவோருக்கும் உள்ள தொடர்பை விளக்கித் "ததாகதர்கள் ஆசிரியர்களாக மட்டுமே இருப்பார்கள்; எனவே நீங்களாகவே தான் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்" என்று விளக்கமாகக் கூறினர்.

புத்தர்கள் எமக்குப் பாதையை மாத்திரம் சுட்டிக் காட்டுகிறார்கள். அவ்வழியே சென்று பரிசுத்த நிலையைப்

பெறுவது எம்மைப் பொறுத்தது. "இரட்சிப்புக்காக இன்னொருவரை நம்புவது எதிர்மறைவழி; ஆனால் தன்னைத் தானே நம்புவது நேர்வழி. எதற்கும் இன்னொருவரை நம்பியிருப்பது ஒருவன் தன்னுடைய ஆற்றலை வேறொருவனிடம் கொடுப்பதை ஒக்கும்."

தங்களையே எதற்கும் ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்று தம்முடைய சீடர்களை வேண்டிக்கொண்ட புத்தர் பெருமான், பரி நிர்வாண சுத்தத்தில் இங்ஙனம் கூறினார்:- "உங்களுக்கு நீங்களே தீவுகளாக (புகலிடமாக) இருந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நீங்களே அடைக்கலமாக இருங்கள். மற்றவர்களிடம் அடைக்கலம் புக வேண்டாம்". இந்தப் பொருள் நிறைந்த வாக்கியங்கள் ஒருவனை உயர்த்துகின்றன. இவை, இலட்சியத்தை அடைய சுயமுயற்சி எத்துணை அத்தியாவசியமானதென்பதையும், இரட்சகர்கள் மூலம் மீட்சி பெறுவது எவ்வளவு பகட்டான பயனற்ற, செயல் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன; மேலும் அர்த்தமில்லாத தியாகங்களாலும், பயன்கிட்டா வழிபாடுகளாலும், கற்பனைத் தெய்வங்களின் சினமாற்றுதலாலும் பிற்பிறவியில் அநுபவிக்கவிரும்பும் கற்பனை யின்பங்களை நாடுவது எவ்வளவு பயனற்றது என்பதையும் விளக்குகின்றன.

மேலும் உண்மையில், திருவருள் கைக்கூடிய மனிதன் ஒருவனுக்கு மாத்திரமே உரிமையென்று அமையாத பௌத்த நிலையின் தனியுரிமையைப் புத்தர் பெருமான் என்றுமே கொண்டாடியது இல்லை. மனிதனாகப் பிறந்த எவனும் அடையக் கூடிய மிகவுயர்ந்த பரிபூரண நிலையை அவர் அடைந்தார். ஆசிரியரின் விரல்மடித்த கையினுதவி யில்லாமலே, அந்தப் பரிபூரண நிலையை யடையக் கூடிய ஒரேயொரு நேர்வழியை அவர் வெளிப்படுத்திக் காட்டினார். புத்ததேவரின் போதனை பின்படி ஏற்ற முயற்சி செய்பவர்கள் அந்த மிக மேன்மையான பரி பூரண நிலையை யடைய விரும்பலாம்.

புத்தர், மானுடரைக் கொடிய பாவிகள் எனக் கண்டிக்காது, அவர்கள் கருவிலே உளத்தூய்மை யுடையவர்கள் எனக் கூறி அவர்களை, மகிழ்ச்சியுறச் செய்தார். உலகம் கொடியதன்று; ஆனால் அறியாமை யால் மயக்கப்பட்டிருக்கின்றது; என்பதே அவரது அபிப் பிராயம். தம்மைப் பின்பற்றுவோரை மனந்தளரவிடா மலும், அம்மேலான நிலையைத் தமக்கென்று வைத்துக் கொள்ளாமலும் எல்லோரையும் உற்சாகப்படுத்தி, ஊக் கப்படுத்தி, தம்மைப் பின்பற்றி அவர்களும் உயர்ந்த புத்த நிலையை அடையவேண்டுமென ஆவல் கொண்டார். ஏனெனில் எல்லோரிடத்தும் புத்த தன்மை மறைந்துள் ளது; அதாவது எல்லோரும் புத்தராகும் உள்ளாற்றலை உடையவர்களே.

புத்தர் என்னும் நிலையை அடைய விரும்பும் ஒருவன் போதிசத்துவன் எனப்படுகிறான். போதிசத்துவன் என்றால் ஞானம் உள்ளவன் என்று அர்த்தம். இந்த ஆணவ முனைப்பு நிறைந்த உலகுக்கு எப்பொழுதாவது வழங் கப்பட்டவற்றுள், இப்போதிசத்துவ இலட்சியம், மிக அழகானதும் அதிக மேன்மையானதும் ஆகிய வாழ்க்கை நெறியாகும். ஏனெனில் சேவையும் தூய்மையும் நிறைந்த வாழ்வைவிட உயர்வானது வேறு எதுவுமில்லை.

புத்தபெருமான் மானுடனாகவே புத்த நிலையை அடைந்து, மனிதனுள் மறைந்திருக்கும் சிந்தனைக்கு அப் பாற்பட்ட தன்மைகளையும், மனிதனின் படைப்பாற்றலை யும் உலகுக்குப் பறை சாற்றினார். கண்ணுக்குப் புலப் படாதவரும் எல்லாம் வல்லவருமாகிய ஒரு கடவுளை மனித குலத்தின் விதியைக் கட்டுப்படுத்த அமர்த்தி, மனிதனை மேலானவொரு சத்திக்குக் கீழ்ப்படியச் செய் யாமல், மனிதகுல மேன்மையை மேம்படச் செய்தார். ஒருவன் தனக்குப் புறத்தேயுள்ள கடவுளாலேயோ, அல்லது தூதுசெல்லும் மதகுருமார்கள் மூலமாகவோ தன் ஆத்தும ஈடேற்றத்தையும், தூய்மையையும் அடைவதில்லை யென்றும், அவன் தன் சொந்த முயற்சியி

ளாலேயே அவற்றைப் பெறக்கூடும் என்றும் புத்தபிரான் கூறினார். அவர்தாம் இந்த ஆணவமுனைப்புடைய உலகுக்கு தன்னலமற்ற சேவையாகிய உத்தம இலட்சியத்தைக் கற்றுக் கொடுத்தார். அவர்தாம், மனிதகுலத்துக்கு இழிவு செய்யும் சாதிமுறையை எதிர்த்தெழுந்தார். மனித குலத்தின் சமத்துவத்தைப் போதித்து, எல்லோரும் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மேன்மை பெறச் சம வாய்ப்புக்களை அளித்தார்.

உயர்ந்தவனோ, தாழ்ந்தவனோ, ஞானியோ, கொலைகாரனோ என்ற பாகுபாடற்று எவரும், மனந்திரும்பி ஒரு புதிய வாழ்க்கையை நடாத்த பிரயத்தனம் செய்வார்களானால், அவர்களுக்கு வாழ்க்கையில் வெற்றியும் செழிப்பும் காத்திருக்கும் என்று அவர் கூறினார்.

பகவான் பக்குவ நிலை அடைந்த ஆண் பெண் ஆகிய இரு பாலாருக்கும் சாதி, வர்ண, வகுப்புப் பேதமில்லாத ஒரு பொதுவான பிரமச்சரிய சங்கத்தை ஜனநாயக முறையில் நிறுவினார். அவர் தன்னைச் சார்ந்த மக்களைத் தன் கொள்கைகளுக்கோ அல்லது தனக்கோ அடிமையாக்காமல் அவர்களின் சொந்தச் சிந்தனையின்படி நடக்க முழுச் சுதந்திரம் வழங்கினார். துன்பமுற்றோருக்கு ஆதரவான சொற்களால் ஆறுதலளித்தார். ஆதரவற்ற நோயாளிகளைப் பராமரித்தார். துறக்கப்பட்ட ஏழைகளுக்கு உற்றுழி உதவிசெய்தார். மாயையினால் பீடிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை மேன்மைப்படுத்தி, குற்றவாளிகளின் களங்கமான வாழ்க்கையைப் பரிசுத்தப் படுத்தினார்; பலவீனமானவர்களை ஊக்கப்படுத்தியும் பிரிந்தவர்களைச் சேர்த்து வைத்தும், அறிவில்லாதவருக்கு அறிவொளி தந்தும், மறைபொருள்களைத் தெளிவுபடுத்தியும், வழிதப்பினோரை நெறிப்படுத்தியும், சான்றோரைக் கௌரவித்தும் மானுட குலத்துக்குப் பெருஞ் சேவை புரிந்தார். செல்வரும், வறியவரும், ஞானிகளும், குற்றவாளிகளும் ஆகிய எல்லோரும் அவரை ஒரேமுகமாக நேசித்தனர். செங்கோல், கொடுங்கோல்

அரசர்கள், புகழ்பெற்ற, அறியப்படாத இளவரசரும், பட்டவர்த்தனரும், வள்ளல்களும், உலோபிகளும், கர்வமான அறிஞரும், பணிவான புலவரும், அநாதரும், ஏழைகளும், தாழ்த்தப்பட்ட தோட்டிகளும், கொடிய கொலைஞரும், வெறுக்கத்தக்க தாசிகளும் என்ற இவர்களெல்லோரும் புத்தரின் ஞானமும் கருணையும் நிறைந்த வார்த்தைகளால் நன்மையடைந்தனர்.

இவரின் உயரிய முன்மாதிரி, மற்றவர்களுக்கெல்லாம் ஊக்கமளித்தது. இவருடைய சாந்தமும் அமைதியும் நிறைந்த திருமுக மண்டலம் பத்தி நிறைந்த கண்களுக்கு ஆறுதலளிக்கும் காட்சியாக இருந்தது. சமாதானம் சகிப்புத்தன்மை பற்றிய புத்தருடைய செய்தி, எல்லோராலும், கூறுதற்கரிய ஆநந்தத்தோடு வரவேற்கப்பட்டது. இச்செய்தியைக் கேட்டுப் பின்பற்றி, நற்பயன் பெற்றவர் ஒவ்வொருவருக்கும் ஈறில்லாப் பயனளித்தது.

எங்கெங்கு அவருடைய போதனை ஊடுருவினவோ அங்கங்குள்ளோர் மனத்திலெல்லாம் அது ஒரு அழியா முத்திரையை விட்டுச் சென்றது. புத்தசமயம் பரவிய தேசங்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணம் இவருடைய உத்தம போதனைகளே. இலங்கை, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்னும், லாவோஸ், திபெத், சீனு, மங்கோலியா, கோரியா யப்பான் முதலிய பௌத்த நாடுகள் புத்த சமயத்தின் மடியிலே வளர்ந்தன. புத்த தேவர் மறைந்து 2500 ஆண்டுகளுக்கு மேல் கழிந்தாலும் அவரது ஈடும் எடுப்புமில்லா விசேட ஆளுமை இன்னும் அவரைப் பற்றி அறிவோரிடத்திலெல்லாம் பெரும்பயனை விளைவிக்கின்றது.

புத்ததேவரின் எஃகு அனைய உறுதிப்பாடு, ஆழ்ந்தகன்ற அறிவு, உலகை வியாபித்த அன்பு, எல்லையற்ற தன்னலமற்ற சேவை, வரலாற்றுப் புகழ்பெற்ற துறவு, பரிபூரண தூய்மை, பிறரைக் கவரும் ஆளுமை, தம்

போதனையைப் பரவச் செய்ய அவர் கையாண்ட உன்னத முறைகள், அவரது இறுதி வெற்றி ஆகிய இவைகளெல்லாம் இன்றைய உலகின் ஐந்தில் ஒரு பங்கு சனத்தொகை தங்களுடைய மேலான சமய போதகராகப் புத்த தேவரை ஏற்றுக்கொள்ளத் தூண்டின.

புத்தபிரானுக்குப் புகழ்மாலை சூட்டுகையில் பிரபல இந்தியத் தத்துவஞானி, சர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் பின்வருமாறு கூறினார்:—மனிதகுலத்தின் சிந்தனையிலும் வாழ்க்கையிலும் உண்டாக்கிய விளைவினைப் பொறுத்தவரையில், கீழ்த்திசையில் வேறெவருக்கும் குறையாத ஒரு மாபெரும் சிந்தனைச் சிற்பியாகக் கௌதம புத்தரை நாம் காண்கின்றோம். மேலும். அவர் மற்றெவரிலும் பார்க்க அகலத்திலும் ஆழத்திலும் குறைவில்லாத பற்றினையுடைய மதமரபு ஒன்றினை நிறுவியவராக மதிப்போடு கருதப்படுகின்றார். அவர் உலகின் சிந்தனை வரலாற்றிலும், நாகரிகமடைந்த மக்களின் முதுசொத்திலும் தனியொருவராக விளங்குகின்றார். ஏனெனில், அறிவாற்றலையும் மனமார்ந்த ஒழுக்கம், ஆத்மீக நுண்ணறிவு முதலிய அம்சங்களைக் கொண்டு மதிப்பிடும்போது, புத்த தேவர் வரலாற்றின் ஒரு மாபெரும் மனிதர் என்பதில் ஐயமில்லை.

தனது "வரலாற்றில் மாபெரும் மனிதர் மூவர்" என்ற நூலில் புகழ்பெற்ற ஆங்கிலப் பேரறிஞரும் எழுத்தாளருமாகிய எச். ஜி. வெல்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்:- "புத்தர் ஒரு புராணக் கதாபாத்திரம் அல்லர்; அவர் எளிமை பத்தி தனிமை ஆகிய பண்புகளுக்கு உறைவிடமாயிருந்து அறமாகிய ஒளியைப் பெறப் போராடும் ஒரு மனிதப்பிறவியாகவே காணப்படுகிறார். உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செய்தி ஒன்றையும் அவர் மனிதகுலத்துக்கு அருளினார். எங்கள் சிறந்த நவீன கருத்துக்கள் பல அதனோடு ஒத்திருக்கின்றன. எல்லாத் துயரங்களும் அதிருப்திகளும் சுயநலத்திலிருந்தே உற்பத்தியாகின்றன என புத்ததேவர் போதித்தார். ஒருவன்

மனச்சாந்தி யடையவேண்டுமானுல் அவன் தனக்காகவும் தனது ஐம்புல ஆசைகளுக்காகவும் வாழ்வதை முதல் நிறுத்திக்கொள்ளவேண்டும். அதன்பின் அவன் ஒரு உன்னத புருடராகத் தோன்றுகிருன். கிறீஸ்துவுக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னே, தன்னை மறத்தல்பற்றி பல்வேறு விதத்தில் கூறியுள்ளார். சில விதங்களில் புத்ததேவர் எமக்கும் எம்முடைய தேவைகளுக்கும் கிட்டியவராகிருர் எனக் கருதலாம். கிறீஸ்துவைவிட, எமது தனி முக்கியத்துவம், சேவைகள் ஆகியவை பற்றியும் சுயநித்தியவாழ்வின் பிரச்சினையைப்பற்றியும் மிகத் தெளிவான கொள்கையுடன் இருந்தார்".

"அவர் போதித்த எல்லா நற்குணங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருந்தார்...... அவரது தூய வாழ்க்கையில் ஒரு கறையேனும் படியவில்லை" என சாந்த ஹில்லாயர் குறிப்பிடுகின்றுர். பாஸ்போல், "அவரை எவ்வளவு அதிகமாக அறிகிறேனே அவ்வளவுக்கு அதிகமாக அவரிடம் பத்திகொள்கிறேன்" என்கிருர்.

"நான் எவ்வளவுக்கு அதிகமாக அவரை அறிகிறேனே அவ்வளவுக்கு அதிகமாக அவரிடம் பத்திகொள்கிறேன்: எவ்வளவு அதிகமாக அவரிடம் பத்தி செலுத்துகிறேனே அவ்வளவுக்கு அதிகமாக அவரை அறிந்துகொள்ளுகிறேன்" என்று புத்தரின் ஒரு பணிவான பத்தர் கூறினுர்.

அத்தியாயம் 2

# பௌத்த தம்மம்

## பௌத்தம் ஒரு தத்துவமா?

புத்தரால் விளக்கப்பட்ட கட்டாயமில்லாத, ஒழுக்க மான, தத்துவ ஒழுங்கமைப்பு அதனைப் பின்பற்றுவோ ரிடமிருந்து கண்மூடித்தனமான நம்பிக்கையை எதிர் பார்க்கவில்லை. இவ்வொழுங்கமைப்பு பிடிவாதக் கொள் கைகளை உருவாக்கவில்லை; மூடநம்பிக்கை நிறைந்த சடங் குகளுக்கும் ஆசாரங்களுக்கும் ஆதரவு அளிக்கவில்லை; அதற்குப் பதிலாக ஒரு சீடன் தூய வாழ்க்கையினுலும் தூய சிந்தனையினுலும மேலானவொரு ஞானத்தையும், எல்லாத் தீமைகளில்நின்று விடுதலைபெறும் நிலையையும் அடைய ஒரு பொன்னுன வழியை எடுத்துக் கூறுகிறது. இப்பொன்னுன வழியே பௌத்தம் என்று பொதுவாக கூறப்படும் தம்மம் ஆகும்.

அளவிலாக் கருணை நிறைந்த புத்ததேவர் மறைந்து விட்டாலும், அவர் மானுடவர்க்கத்திற்கு விட்டுச்சென்ற தெய்வீகக் கருத்துக்களைக்கொண்ட தம்மம் இன்றும் அதன் பழம்பெருந் தூய நிலையில் நிலவுகின்றது.

புத்தபெருமான் அவரது போதனைகளை எழுத்தில் வடிக்காவிட்டாலும், அவரது பெருமைவாய்ந்த சீடர்கள் அவற்றை மனப்பாடம்மூலம் பாதுகாத்து வாழையடி வாழையாக ஓதி ஒப்புவித்துவந்தனர். புத்தரின் மறை வுக்குப்பின் தம்மத்திலும் விநயத்திலும் புலமைசான்ற ஐந்நூறு அரகத்துக்கள் ஒன்றுசேர்ந்து புத்ததேவரின் சித்தாந்தத்தை அவர் முதன்முதலில் கூறியபடி நினைவுகூர ஒரு மகாநாடு கூட்டினர்.

புத்ததேவரின் போதனைகள் அனைத்தையும் நேரில் செவிமடுக்கும் பெரும் பாக்கியம்பெற்ற வணக்கத்துக்

குரிய ஆநந்த தேரர் தம்மவாசகத்தையம், வணக்கத்துக் குரிய உபாலி தேரர் விநயவாசகத்தையும் ஓதினர்கள்.

திரிபிடகம், இப்போது காணப்படுகிற உருவத்தில் பண்டைய அரகத்துக்களினுல் தொகுக்கப்பட்டதேயாகும். கி. மு. 83-ஆம் ஆண்டளவில் ஆட்சிசெய்த பக்திமிக்க சிங்கள அரசனுகிய வட்டகாமனி அபயனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பௌத்தமத வரலாற்றில் முதன் முறையாகத் திரிபிடகம் எழுத்துவடிவில் ஏட்டில் பதிக்கப் பட்டது.

புத்ததேவரின் போதனைகளின் சாரம் அடங்கிய மிகப் பாரிய நூலாகிய திரிபீடகம் விவிலிய நூலினும் பதினொரு மடங்கு பெரியது என மதிக்கப்பட்டிருக்கிறது. திரிபிடகத்துக்கும் விவிலியநூலுக்கு மிடையிலுள்ள முக்கிய வேற்றுமை விவிலியநூலைப்போல் திரிபிடகம் முறையாக எழுதப்பட்டு வளர்ச்சியும் நிறைவும் அடைய வில்லை.

திரிபிடகம் என்ற சொல் கருதுவதுபோல, அது மூன்று கூடைகள் கொண்டது. இம்மூன்று கூடைகளாவன: —

(1) ஒழுங்குக் கட்டுப்பாட்டுக் கூடை (விநய பிடகம்).

(2) அறவுரைக் கூடை (சுத்த பிடகம்).

(3) சித்தாந்தத்தின் எல்லைக் கூடை (அபித்தம்ம பிடகம்).

வரலாற்றிலே தொன்மை மிக்கது என்னும் புகழைப் பெற்ற பிரம்மசரிய துறவுக் குழுவான சங்கத்தின் அடிப் படை ஆதாரமாகக் கருதப்படுகின்ற விநயபிடகம், பிக்கு களும் பிக்குணிகளும் எதிர்காலத்தில் ஒழுக்கமாக வாழப் புத்ததேவர் காலத்துக்குக் காலம் சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுதெல்லாம் வெளிப்படுத்திய விதிகளையும் சட்டங் களையும் கொண்டுள்ளது. இது சாசனத்தின் படிப்படி யான வளர்ச்சியை மிக விபரமாக சித்தரிக்கின்றது.

மேலும் அது புத்ததேவரின் வாழ்வுபற்றியும் அவரது தொண்டுபற்றியும் செய்திகள் பலவற்றைத் தருகின்றது. விநயபிடகம் பண்டை வரலாறு, இந்தியப் பழக்கவழக்கங்கள், கலைகள், விஞ்ஞானம் முதலியவற்றையும் பற்றிச் சில முக்கியமான சுவையான தகவல்களையும் மறைமுகமாகத் தருகின்றது.

விநயபிடகம் பின் வரும் ஐந்து நூல்களைக் கொண்டுள்ளது:—

| | |
|---|---|
| (1) பாராஜீகபாலி—பெரிய குற்றங்கள்<br>(2) பாசிட்டியபாலி—சிறிய குற்றங்கள் | விபாங்கம் |
| (3) மகாவாக்கியபாலி—பெரிய பகுதி<br>(4) சுல்லவாக்கபாலி-சிறிய பகுதி | கந்தக்கம் |
| (5) பரிவாரபாலி—விநயத்தின் பொழிப்பு | |

கந்தபிடகம் முக்கியமாக, புத்ததேவர் தாமே பல சந்தர்ப்பங்களில் வழங்கிய அறவுரைகளைக் கொண்டது. அதோடு புத்ததேவரின் சிறந்த சீடர்களான சங்கைக்குரிய சாரிபுத்த, ஆநந்த, முகலானதேரர்கள் ஆகியோரின் அறவுரைகள் சிலவும் இதில்இடம்பெற்றுள்ளன. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு மக்களின் மனப்பாங்குக்கேற்ப இப்பிரசங்கங்கள் ஆற்றப்பட்டமையால் இது ஒரு அறிவுரை நூலை ஒத்திருக்கின்றது. ஒன்றுக்கொன்று முரணானவைபோன்ற வாசகங்கள் இருந்தாலும் அவற்றைப்பற்றித் தப்பான அபிப்பிராயங்கள் கொள்ளக்கூடாது. ஏனெனில் அவை புத்ததேவரால் சமயோசிதமாக ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை யடையக் கூறப்பட்டவையாகும். உதாரணமாகச் சிறிதேனும் புத்தியில்லாமல் அங்கலாய்க்கும் ஒருவன் கேட்ட கேள்விக்கு மௌனம் சாதித்தும், அதே கேள்விக்கு மெய்யான அக்கறையோடு கேட்பவன் கேட்டபோது மிக விபரமாகவும் பதிலளிப்பர். பெரும்பாலான அறவுரைகள் பிக்குகளின் நன்மைக்காகவே வழங்கப்பட்டவை யாதலால், அவை தூய வாழ்க்கை,

சித்தாந்த விளக்கம் முதலியவற்றோடு சம்பந்தப்பட்டதாக உள்ளன. மேலும் பொதுமக்களாகிய உபாசகர்களின் இலௌகீக ஆத்மீக வளர்ச்சிக் கேதுவான வேறு பல அறவுரைகளும் காணப்படுகின்றன.

சுத்தபிடகம் ஐந்து நிகாயங்களை அல்லது தொகுப்புக்களைக் கொண்டுள்ளது, அவை: —

(1) தீகநிகாயம் (நீண்ட அறவுரைகளின் தொகுப்பு)

(2) மஜ்ஜிம நிகாயம் (நடுத்தர அறவுரைகளின் தொகுப்பு)

(3) சன்யுத்த நிகாயம் (தொடர்பான பழமொழிகளின் தொகுப்பு)

(4) அங்குத்தர நிகாயம் (எண்வரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட அறவுரைகளின் தொகுப்பு)

(5) குத்தக நிகாயம் (சிறிய தொகுப்பு)

ஐந்தாவது தொகுப்பான குத்தக நிகாயம் மேலும் 15 நூல்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:—

(1) குத்தகபாதா (சிறிய மூலவாசகம்)

(2) தம்மபாத (வாய்மைவழி)

(3) உதானம் (ஆநந்தத்தின் வெற்றிப் பாடல்கள்)

(4) இதிவுத்தக ("இப்படிச் சொல்லப்பட்டது" அறவுரைகள்)

(5) சுத்தநிபாத (தொகுக்கப்பட்ட அறவுரைகள்)

(6) விமானவத்து (மோட்சத்தைப்பற்றிய கதைகள்)

(7) பேதவத்து (பேதர்கள் பற்றிய கதைகள்)

(8) தேரகாதா (சகோதரர்களின் இசைப்பாக்கள்)

(9) தேரிகாதா (சகோதரிகளின் இசைப்பாக்கள்)

(10) ஜாதக (பிறப்புப் பற்றிய கதைகள்)

(11) நிதேச (விளக்கவுரைகள்)

(12) பட்டிசம்பிதாமாக (நுண்ணறிவின் ஆராய்ச்சி)

(13) அபதான (அரகத்துக்களின் வாழ்க்கை)

(14) புத்தவம்சம் (புத்தரின் வரலாறு)

(15) சரியாபிடகம் (ஒழுக்க முறைகள்)

மூன்று பிடகங்களில் அபித்தம்ம பிடகம்தான் மிக முக்கியமானதும் சுவையுள்ளதும் ஆகும். எளிமையும் தெளிவும் செறிந்த அறவுரைகளைக் கொண்ட சுத்த பிடகத்துக்கு எதிர்மாறாக இது புத்தபோதனையின் ஆழ்ந்த தத்துவங்களைக் கொண்டுள்ளது.

பாரம்பரியமான போதனைகள் (வோகார தேசனு) சுத்த பிடகத்திலும் முடிந்த முடிவான போதனைகள் (பரமத்த தேசனு) அபித்தம்ம பிடகத்திலும் காணப்படுகின்றன.

அபித்தம்மம் ஞானிகளுக்கு இன்றியமையா வழிகாட்டியாகவும், ஆன்மஈடேற்றம் பெற்றவரின் அறிவுக்கு விருந்தாகவும், ஆராய்ச்சியாளரின் சிந்தனைக்கு விருந்தாகவும் இருக்கின்றது.

அபித்தம்மத்தில் உணர்ச்சிக்கு வரைவிலக்கணம் தரப்பட்டுள்ளது. சிந்தனைகள் பெரும்பாலும் ஒழுக்கநெறி பற்றியே பகுத்து வகுக்கப்பட்டுள்ளன. மனநிலைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொருவகை உணர்ச்சியின் அமைப்பும் விபரமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சிந்தனைகள் எப்படி எழுகின்றன என்பது மிக நுட்பமாக அபித்தம்மத்திலே விரித்துரைக்கப்படுகின்றது. இந்நூலிலிருந்து மனிதனைத் தூய்மைப்படுத்துவதற்கு உப

காரமாயில்லாமல் அவனுடைய மனதைக் கவரும் பொருத்தமில்லா வாழ்க்கைச் சிக்கல்கள் மிக்க கவனத்துடன் ஓதுக்கப்பட்டுள்ளன.

சடப்பொருள்பற்றிச் சுருக்கமாக அபித்தம்மத்தில் விவாதிக்கப்படுகின்றது. சடப்பொருளின் அடிப்படை அலகுகளும், இயல்புகளும், தோற்றுமிடம் போன்றவையும் சடப்பொருளுக்கும மனதுக்கும் உள்ள தொடர்புகளும் விளக்கப்பட்டுள்ளன.

உருவம் என்ற அமைப்பை உண்டாக்கும் மனம் பொருள் என்னும் இரு கூட்டுப் பொருள்பற்றியும் இந்த அபித்தம்மம் அலசியாராய்ந்து, உலக நிகழ்ச்சிகளின் உண்மைத் தன்மைகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இவ்வடிப்படையில் ஒரு தத்துவதரிசனமே தோன்றி வளர்ந்துள்ளது. இத்தத்துவதரிசனத்தை ஆதாரமாகக்கொண்டு, மேலான இலட்சியமாகிய நிர்வாண நிலையை அடைய ஒரு அறநெறி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அபித்தம்ம பிடகம் ஏழு நூல்களைக் கொண்டுள்ளது. அவையாவன:—

(1) தம்மசங்கணி (தம்மங்களின் வகைகள்)

(2) விபங்கம் (பிரிவுகள் பற்றிய நூல்)

(3) கதா வத்து (கருத்து மாறுபாட்டு வகைகள்)

(4) புக்கல பஞ்ஞத்தி (தனியாள்கள் பற்றிய விளக்கவுரை)

(5) தாது கதா (மூலகங்களைப்பற்றிய உரையாடல்)

(6) யமக (சோடிகள் பற்றிய நூல்)

(7) பட்டான (உறவு பற்றிய நூல்)

புத்தர் தமது சித்தாந்தத்தை பொதுமக்களுக்கும் கற்றோருக்கும் ஏற்ப போதித்தபடியால் திரிபிடகத்தில்

பாலர்க்குப் பாலும் புலவர்க்குப் புலமையும் உண்டு. திரிபிடகத்தின் புனித வாசகங்களில் பதிக்கப்பட்டுள்ள உயரிய தெய்வீக தம்மத்தில், சத்து சித்து ஆகியன விளக்கப்பட்டுள்ளன. இன்று ஆழ்ந்த உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு நாளை தூக்கியெறியப்படும் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் பற்றித் தம்மம் அக்கறைப்படவில்லை. புத்தர் எங்களுக்கு ஆச்சரியப்படத் தக்க தத்துவக் கோட்பாடுகளைத் தரவில்லை. ஏதும் புதிய சடப்பொருள் விஞ்ஞானத்தையும் உருவாக்க முன்வரவில்லை. எங்கள் ஆன்ம ஈடேற்றத்தைப் பொறுத்த வரையில் அகத்தும் புறத்தும் உள்ளவற்றை விளக்கி, பிறப்பிறப்புகளுக்கு அப்பாற்பட்ட சாந்நித்திய நிலையை அடைய ஏற்றவொரு பாதையை வகுத்து விளக்கியுரைத்தார். இது இணையற்ற, உன்னதமான ஒரு தனிச்செயலாகும். இதனால் அவர் பல நவீன விஞ்ஞானிகளுக்கும், தத்துவஞானிகளுக்கும் ஒரு முன்னோடியாக விளங்கினார்.

ஷொப்பினோர் துன்பத்தின் உண்மையையும் அதன் காரணத்தையும் மேனாட்டுப் போர்வையிற் கொண்ட தன் "சித்தமும் கருத்துமாகிய உலகம்" என்னும் நூலில் தந்துள்ளார். இஸ்பினோசா, ஒரு நிரந்தரமான சத்துப் பொருளின் உளதாம் தன்மையை மறுக்காவிட்டாலும் எல்லாச் சடப்பொருளும் நிலைபேறில்லாதன என்று உறுதியாகக் கூறியுள்ளார். "நிலையுள்ள, மாருத, நிரந்தரமான, நிலைபெற்ற, முடிவில்லாத ஓர் அறிவுப் பொருளைக் கண்டடைவதன் மூலம் துயரத்தை வெல்ல முடியும், என்பது அவர் கருத்து.

பிரிக்கமுடியாதது என்று சொல்லப்படும் அணு ஒரு புலனறிவுக்கப்பாற்பட்ட கற்பனைப் பொருள் என்று பெர்க்லி நிரூபித்தார். மனதைப் பற்றிய கடுமையான பகுப்பாராய்ச்சிக்குப் பின் ஹியூமும் விழிப்புணர்ச்சி, மின்வேகத்தில் தோன்றி மறையும் மனநிலைகளைக் கொண்டது என்று முடிவு செய்தார். மாறுதல் பற்றிய சித்தாந்

த்தைப் பெர்க்சன் ஆதரித்தார். விழிப்புணர்ச்சியென்பது ஒரு சிற்ருறு என்ற கருத்தைப் பேராசிரியர் ஜேம்ஸ் குறிப்பிட்டிருக்கிருர்.

புத்ததேவர் மாறுதல் (அநித்தம்), துயரம் (துக்கம்), ஆன்மாவற்ற நிலை (அனத்தா) என்ற மூன்று சித்தாந்தங்களையும் 2500 ஆண்டுகளுக்கு முன் கங்கை நதிப் பள்ளப் பிரதேசத்தில் சுற்றித் திரிந்த காலத்தில் விளக்கிநிறுவினர்.

பகவான் புத்தர் தாம் அறிந்துகொண்ட அனைத்தையும் மக்கட்குப் போதிக்கவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு சமயம், அவர் ஒரு வனத்துக்கூடாகச் செல்லும்போது ஒரு கையளவு இலைகளை எடுத்துத் தன் சீடர்களைப் பார்த்து, "பிக்குகளே! நான் உங்களுக்குக் கற்றுக் கொடுத்திருப்பது என் கையிலிருக்கும் இவ்விலைகளுக்கு ஒப்பானதே. நான் கற்றுக் கொடுக்காதது இந்த வனத்திலிருக்கும் இலைகளின் தொகைக்குச் சமமானது" என்று சொன்னர்.

ஒருவனின் உளத் தூய்மைக்கு மிக அத்தியாவசியமானது என்று தாம் கருதியவைகளை மட்டுமே பகவான் போதித்தார். அவரது போதனைகளில் மறையுரை அல்லது ஒளிவு மறைவற்ற உரை என்று வித்தியாசம் காண முடியாது. அவருடைய உயரிய வாழ்க்கைப் பணியோடு தொடர்பில்லாத விஷயங்களில் அவர் மௌனத்தையே அநுசரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்தம் விஞ்ஞானத்தோடு இணக்கமுடையது என்பதில் ஐயமில்லாவிட்டாலும், இவ்விரண்டையும் ஒத்த போதனைகளெனக் கருதுதல்வேண்டும். ஏனெனில் விஞ்ஞானம் உலகவியல் உண்மைகளைப் பற்றியது. பௌத்தம், ஒழுக்க ஆத்மீக உண்மைகளை ஆராய்கின்றது. இவையிரண்டினதும் பொருள்கள் வேறுபடுகின்றன.

புத்தபிரான் கற்றுக்கொடுத்த தம்மம் ஏட்டில்மட்டும் பாதுகாக்கப்படவேண்டிய போதனையன்று; வரலாற்று அல்லது இலக்கிய நோக்குடன் பயிலவேண்டிய பாடமு மன்று; இதற்கு மாருகப் பௌத்ததம்மம் கற்கப்பட்டு, ஒருவனின் அன்ருட வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்ருகும்; ஏனெனில் நாளாந்த வாழ்க்கையில் சாதனை செய்தாலன்றி உண்மை புலப்படமாட்டாது; ஆகவே தம்மம் ஓதப்படுதல் வேண்டும்; ஓதலினின் சிறந்தது அதனை அநுட்டித்தல்; அதனினும் சிறந்தது அதனைத் தெளிதல். தெளிந்து நிட்டைகூடுதலே அதன் முடிவான குறிக்கோளாகும். பிறப்பு இறப்புக்களைக் கொண்ட சம் சார சாகரத்திலிருந்து கடைத்தேறும் ஒரே நோக்கத்துக் காகவேதான் பௌத்த தம்மம் ஒரு படகுக்கு உவமிக்கப் பட்டுள்ளது.

ஆகவே பௌத்தம் ஒரு தத்துவம் என்று திட்டவட்ட மாகக் கூற இயலாது. ஏனெனில், பௌத்த மெய்ஞ் ஞானத்தை நாடிப் பின்செல்லத் தூண்டும் ஒரு பத்தி மார்க்கம் மாத்திரமன்று; பௌத்தம் ஒரு தத்துவத்தை ஒத்திருக்கலாம். ஆனல், அது தத்துவத்தினும் பார்க்க விரிவாகப் பல விஷயங்களை உள்ளடக்கியுள்ளது.

தத்துவம் சாதனைகளில் அதிகம் ஈடுபாடுகொள்ளாது, பெரும்பாலும் அறிவோடு மட்டுமே சம்பந்தப்பட்டுள் ளது; ஆனல் பௌத்தமோ சாதனை, நிட்டை கூடுதல் என்பவற்றைச் சிறப்பாக வலியுறுத்துகின்றது.

அத்தியாயம் 3

# பௌத்தம் ஒரு சமயமா?

மதம் என்ற சொல்லின் பொதுவான கருத்துக்கு இயைந்ததாகப் பௌத்தமதம் இல்லை. ஏனெனில் "அது எந்தவிதப் பரம் பொருளுக்குங் கட்டுப்பட்டு நம்பிக்கை வைத்தும் வழிபாடு செய்துகொண்டுமிருக்க வில்லை."

அதனைச் சார்ந்தவரிடமிருந்து பௌத்தம் கண்மூடித் தனமான நம்பிக்கையை எதிர்பார்க்கவில்லை. இதில் மனிதனின் நம்பிக்கை அகற்றப்பட்டு அறிவினை அடிப்படையாகக் கொண்ட பூரண நம்பிக்கையினால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. இது பாளிமொழியில் 'சத்தா' எனப்படும். புத்த தேவரிடம் அவரைப் பின்பற்றுமொருவன் கொண்டுள்ள பூரண நம்பிக்கையை, ஒரு பிரசித்த வைத்தியனிடம் ஒரு நோயாளி வைத்திருக்கும் நம்பிக்கையை அல்லது ஆசானிடம் மாணாக்கன் வைத்துள்ள நம்பிக்கையைப் போன்றதாகும். பௌத்த சமயத்தைச் சேர்ந்த ஒருவன் புத்ததேவரிடம் அடைக்கலம் புகுவதற்குக் காரணம் அவரே விடுதலைக்கு வழியைக் கண்டு பிடித்தவராவர்.

ஒரு பௌத்தன் தான் புத்ததேவரின் பரிசுத்த தன்மையால் காக்கப்படலாம் என்று நம்பி அவரிடம் அடைக்கலம் புகுவதில்லை. அப்படிப்பட்ட ஓர் உத்தரவாதத்தைப் புத்தபிரான் எவருக்கும் தரவில்லை. பிறருடைய களங்கத்தை அகற்ற உதவுவது புத்த தேவரின் சத்திக்கு அப்பாற்பட்டது. ஒருவனைப் பரிசுத்தப் படுத்தவோ களங்கப் படுத்தவோ இன்னொருவனால் முடியாது.

புத்ததேவர் எமக்கு ஓர் ஆசானகப் போதிப்பார். ஆனால் எமது பரிசுத்தத்துக்கு நாமே நேரிடைப் பொறுப்பாளிகளாகின்றோம்.

பௌத்தன் ஒருவன் புத்த பகவானிடம் அடைக்கலம் புகுந்தாலும் அவன் அவரிடத்தில் தன்னை முற்றும் சமர்ப்பித்துச் சரணாகதியடைவதில்லை. புத்தரைப் பின் பற்றுவோனாக மாறிய பின்பும், தனது சிந்தனையின் சுதந்திரத்தைத் தியாகஞ் செய்வதில்லை. தன் சுய விருப்பத்தை உபயோகித்து ஒருவன் வித்தராகும் அளவுக்குத் தனது அறிவை விருத்தி செய்ய முடியும்.

பௌத்தத்தின் ஆரம்ப நிலை சம்மாதிட்டி எனப்படும். பகுத்தறிதல் அல்லது விளங்கிக் கொள்ளல் என்னும் நிலை ஆகும.

உண்மையை நாடுபவர்களுக்கு புத்ததேவர் கூறுகின்றார்:— "கேள்விப்பட்டு எதையும் ஏற்றுக்கொள்ளாதே. (அதாவது நீண்டகாலமாக இதைக் கேட்டுக் கொண்டிருந்தோம் என்ற நினைப்பில்) வெறும் பாரம்பரியத்துக்காக எதையும ஏற்றுக்கொள்ளாதே. (அதாவது பரம்பரை பரம்பரையாக இவை வந்தவை என்ற நினைப்பில்); வெறும் வதந்திகளை ஆதாரமாகக் கொண்டு எதையும் ஏற்றுக் கொள்ளாதே (அதாவது எவ்வித விசாரணையுமின்றி வேத வாக்கு என்று எதையும் ஏற்றுக்கொள்ளாதே); வெறும் அநுமானத்தினால் எதையும் எற்றுக்கொள்ளாதே. வெறுமனே காரணங்களை எண்ணிப் பார்த்து எதையும் ஏற்றுக் கொள்ளாதே. வெறும் தீர்மானத்தால் எதையும் ஏற்றுக் கொள்ளாதே. உன்னுடைய முன் கற்பனை செய்யப்பட்ட எண்ணங்களோடு ஒத்துப்போகின்றது என்று எதையும் ஏற்றுக் கொள்ளாதே. ஏற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றது என்று எதையும் ஏற்றுக் கொள்ளாதே. (அதாவது, இதைச் சொல்பவர் நல்லவர், அதனால் அவர் கூற்றை நம்பலாம், என்ற நினைப்பில்); துறவிகள் எம்மால் மதிக்கப்படுகின்றவர்கள்; ஆனபடியால் அவர்கள் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்று எதையும் ஏற்றுக் கொள்ளாதே".

"ஆனால் இக் காரியங்கள் நெறியற்றவை; இவை குற்றத்துக்குரியவை; இவை பெரியோர்களினால் கண்டிக்கப்

பட்டவை; இவற்றை மேற்கொண்டால் அல்லது செய்தால் இவை அழிவையும் துயரத்தையும் விளைவிப்பன என்று நீங்களே அறியும் பொழுது இக்காரியங்களை விலக்கிவிட வேண்டும்''.

''இக் காரியங்கள் ஒழுக்கமானவை, குற்றமற்றவை, பெரியோர்களினுல் போற்றப்பட்டவை; இவற்றைச் செய்தால் அல்லது மேற்கொண்டால் இவை நற்கதியையும் மகிழ்ச்சியையும் விளைவிப்பன என்று நீங்களே அறியும் போது நீஙகள் அவற்றுக்கேற்ப நடந்து கொள்ளல் வேண்டும்''.

புத்ததேவரின் இத் தெய்விக உணர்ச்சி நிறைந்த வார்த்தைகள் இன்னும் அவற்றின் பழைய ஆற்றலையும் பசுமையையும் கொண்டுள்ளன.

கண்மூடித்தனமான நம்பிக்கை இல்லாவிடினும், உருவச் சிலைகளின் வழிபாடு பௌத்தத்தில் இல்லையா? என்று ஒருவர் தர்க்கம் புரியலாம்.

இலௌகீக அல்லது ஆத்மீக வரங்களை எதிர்பார்த்து உருவச் சிலைகளைப் பௌத்தர் வழிபடுவதில்லை. ஆனுல் அவை எதற்கு அறிகுறியாக இருக்கின்றனவோ அதற்கு மரியாதையும் வணக்கமும் செலுத்துகின்றனர்.

நறிய மலர்களையும் சுகந்த தூபத்தையும் ஒரு உருவச் சிலைக்கு முன்னுல் சமர்ப்பிப்பதன் மூலம் ஒரு பௌத்தன் புத்ததேவரின் முன்னிலையில் இருப்பதாக உணர்ந்து கொள்ளுகிருன். அதனுல் புத்தபகவானின் உயரிய மாட்சிமை மிகுந்த பண்பிலிருந்து உணர்வூக்கம் பெற்று அவருடைய எல்லையில்லாக் கருணையையும் ஆழ்ந்து அநுபவிக்கின்ருன். புத்த தேவரின் உயரிய முன் மாதிரியைப் பின்பற்றி நடக்க முற்படுகின்ருன்.

அரசமரம் பூரண ஞானேதயத்தின் சின்னமாகும். வணக்கத்துக்குரிய இப்புறப்பொருள்கள் மிக அத்தி

யாவசிய மானவையல்ல. ஆனால் அவை ஒருவனுடைய கவனத்தை ஒருமுகப்படுத்தித் தியான நிலைக்கு உபகாரமாக இருக்கும்.

ஆனால் சிந்தனாசத்தியுள்ள ஒருவன் இவற்றின் துணை இல்லாமல் தன் சிந்தனைகளை ஒருமுகப்படுத்திப் புத்த தேவரை அகக்கண்ணால் தரிசனஞ் செய்வான்.

எமது சொந்த நலத்துக்காகவும் நாம் இவ்வளவு வெளி மரியாதையைச் செலுத்துகிறோம். ஆனால் புத்த தேவர் தமது சீடரிடமிருந்து எதிர்பார்ப்பது வெளிய நுட்டானங்களிலும் பார்க்கத் தமது போதனைகளைச் சாதனையில் பின்பற்றுவதையேயாம். ''எனது போதனைகளைச் சிறப்பாகக் கடைப்பிடிப்பவனே எனக்கு மிகுந்த மதிப்பைத் தருபவனாவான். தம்மத்தைப் புரிந்து கொள்பவனாவான்'' என்று புத்ததேவரே கூறியுள்ளார்.

''புத்தபெருமானின் உருவச்சிலையைப் போலக் கண்ணையும் கருத்தையுங் கவரக்கூடிய வேறு எதனையும் இவ்வுலகில் நான் கண்டதில்லை. அது நாம் கண்ணாற்காணும் உலகினில், ஆன்மீகத்தின் மிகப்பரிபூரண நிலையை விளக்கும் திருவுருவாகும்.'' என்று கேசலிங் பெருமான் கூறியுள்ளார்.

மேலும், மன்றாடி அல்லது பரிந்து வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனைகள் பௌத்தத்தில் இல்லை என்பது குறிப்பிடப்படவேண்டிய விஷயமாகும். நாம் எவ்வளவுதான் புத்தபகவானை வழிபட்டாலும், நாம் காக்கப்படமாட்டோம். தம்மை வழிபடுவோருக்குப் புத்தபிரான் வரமளிப்பதில்லை. பௌத்தம் மன்றாடிப் பரிந்து வேண்டும் வழிபாட்டுக்குப் பதிலாகத் தன்னடக்கம், சுத்தி, ஞானம் ஆகியவற்றைத் தரும் தியான மார்க்கத்தைக் கொண்டது: தியானம் என்பது ஒரு கற்பனையோ அல்லது மனத்தை வெறிதாக்கும் முறையோ அன்று. அது ஒரு சுறுசுறுப்பான முயற்சியாம். அது இகபரத்துக்கும் மனதுக்

கும் வலிமைதரும் ஒரு அமிர்த சஞ்சீவியாகும். புத்த தேவர் பிரார்த்தனைகளை மேற்கொள்வதின் பயனற்றதன்மையை மட்டுமல்லாமல் அடிமை மனப்பான்மையையும் இழித்துரைத்தார். மீட்கப்படுவதற்காக ஒரு பௌத்தன் பிரார்த்தனை செய்யக்கூடாது. ஆனால் அவன் தன்னையே நம்பித்தான் தன் சுதந்தரத்தைப் பெறவேண்டும்.

"பிரார்த்தனைகள் கடவுளுடன் சுயநலமான பண்டமாற்று அல்லது அந்தரங்க தொடர்புகளைப் போன்றவையாகும். அவை உலகப்பேராசைமிக்க நோக்கங்களைத் தேடவும், நான் என்ற ஆணவமுனைப்பை மிதவிக்கவும் செய்கின்றன. அதற்குப் பதிலாகத் தியானம் சுயமாற்றமாகும்", என்று திரு. இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மற்றச் சமயங்களில் இருப்பது போலப், பௌத்த சமயத்திலும் ஒரு பயப்பாட்டுக்கும் கீழ்ப்படிவுக்கும் உரிய ஒரு சர்வவல்லமையுள்ள இறைவன் இல்லை. புத்த தேவர் எங்கும் வியாபித்த முற்றுமுணர்ந்த ஒரு அண்ட சராசரப்பொருளில் நம்பிக்கை வைக்கவில்லை. பௌத்தத்தில் தேவரோ தேவதூதர்களோ இல்லை. ஆகவே ஒருவனின் விதியை நிர்ணயித்துத் தண்டனைகளையும் பரிசில்களையும் வழங்கும் ஒரு உயர்ந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திக்கு ஒரு பௌத்தன் அடிமையல்லன். புத்தசமயத்தவர் தெய்வீக தரிசனங்களில் நம்பிக்கை வைக்காததால், உண்மை தங்களது தனியுரிமை யென்று கோரவில்லை. மற்றச்சமயங்களையும் குறைகூறுவதில்லை. ஆனால் பௌத்தம் மனிதனுள் மறைந்திருக்கும் அளவிலா உள்ளாற்றலை ஏற்றுக்கொள்கின்றது. திருப்பவும் அது, தெய்வத்தின் அல்லது மதகுருக்களின் உதவி எதுவுமின்றித் தன்சுயமுயற்சியின் மூலம் துக்கத்தினின்றும் நிவாரணம் பெற முடியுமெனப் போதிக்கின்றது.

பௌத்தத்தில் நம்பிக்கையும் வழிபாடும் பிரார்த்தனையும் இல்லாததினாலும் "மனிதன் தங்கள் வெளியரங்கமான செயல்களினால், தமது விதியை நிர்ணயிக்கும்

கீழ்ப்படிவு, சேவை, மகிமை, இவற்றிற்குரிய ஒரு தெய்வம் அல்லது தெய்வங்கள் இருக்கின்றன'' என்று நிரூபிக்கும் தன்மை இல்லாமையாலும், இது ஒரு சமயம் அன்று.

சமயம் என்பது "வாழ்க்கையை மேலெழுந்த வாரியாக நோக்குவதிலும் அதனை ஊடுருவி அவதானிப்பதாகவும், வாழ்க்கையைச் சும்மா பார்த்துக்கொண்டிருப்பதிலும் அதன் ஏற்றத்தாழ்வுகளை அவதானிப்பதாகவும், போதனைகளின்படி வாழ்க்கையை நடத்த மக்கட்கு ஒரு வழிகாட்டியாகவும், சிக்கல்கள் நிறைந்த வாழ்க்கையைத் துணிவோடும் மனவுறுதியோடும் நடாத்த அச்சமயிகளுக்கு நம்பிக்கை தருவதாகவும், மரணத்தை அமைதியோடு ஏற்றுக்கொள்ளும் மனவுறுதியை உதவுவதாகவும், வாழ்க்கைத் துன்பங்களை நீக்கக்கூடிய வழிகளைக் கொண்டுள்ளதாகவும்'' இருக்குமாளுல் அதுவே உண்மையான சமயமாகும் என்று உறுதியாகக் கூறலாம்.

---

அத்தியாயம் 4

# பௌத்தம் ஓர் அறநெறி அமைப்பா ?

பௌத்த மதம் பொதுநலப் பண்பிலும், பரிபூரணத்திலும் இணையற்ற ஒரு சிறந்த அறநெறியைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இது மதகுருமார்களுக்கும் சாதாரண மக்களுக்கும் வெவ்வேருன நெறியை விளக்குகின்றது. ஆனல் பௌத்தம் ஒரு சாதாரண தார்மீகப் போதனையைவிட உயர்வானது. தூய்மைப் பாதையில் இந்த அறநெறி தொடக்க நிலையேயாம். இது இலட்சியத்தை அடைய ஒரு வழியேயல்லாமல் இலட்சியமன்று. ஒழுக்கம், முக்கியமானதேயாளுலும் ஒருவனின் விடுதலைக்கு

அது மாத்திரம் போதாது. ஒழுக்கம், ஞானம் அல்லது அறிவோடு (பஞ்ஞா) இணைய வேண்டும். பௌத்தத்தின் அடித்தளம் ஒழுக்க நெறியாயும், அதன் சிகரம் ஞானமாயும் உள்ளன.

நன்னெறிக் கொள்கைகளை அநுசரிக்கும்போது, ஒரு பௌத்தன், தன்னை மாத்திரம் கருதாது விலங்குகள் உட்பட மற்ற உயிர்களனைத்தையும் நினைவிலிருத்த வேண்டும். பௌத்தம் போதிக்கும் நன்னெறி ஐயப்பாட்டான கருத்து வெளிப்பாடு எதனையும் ஆதாரமாகக் கொள்ளவில்லை. மேலும், அது ஒரு தனிச்சிறப்பான சிந்தனையில் தோன்றிய திறமை மிக்க வெளிப்பாடுமன்று. அதற்கு மாருக அது நிரூபிக்கக்கூடிய உண்மைகளையும், தனிப்பட்டவர்களுடைய ஆதாரங்களையும் ஆதாரமாகக் கொண்ட ஒரு பகுத்தறிவுள்ள சாதனைத் தொகுப்பாகும்.

ஒரு பௌத்தனின் குணவியல்பை உருவாக்குவதில் வெளிப்புற இயற்கைக்கு மேலான ஏதுக்கள் எவையேனும் பங்கு பெறுவதில்லை என்பதை இங்கே குறிப்பிடல் வேண்டும். உபகாரங்களையோ அல்லது தண்டனைகளையோ தருவதற்குப் பௌத்தத்தில் யாருமில்லை. துன்பமும் இன்பமும் ஒருவனுடைய செய்கைகளின் தவிர்க்க முடியாத விளைவுகள். ஒரு கடவுளின் ஆதரவையோ அல்லது வெறுப்பையோ பெற்றுக்கொள்ளும் எண்ணம் ஒரு பௌத்தனின் மனதில் எழுவதில்லை. உபகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் தண்டனை கிடைக்கும் என்ற பயமும் அவனுக்கு நல்லனவற்றைச் செய்யவோ, அல்லது தீயனவற்றிலிருந்து விலகவோ தூண்டுதலாகப் பயன்படுவதில்லை. ஒரு பௌத்தன் எதிர்கால விளைவுகளைப்பற்றி அறிந்து, முன்னேற்றத்தைத் தடைசெய்யும் தீய செயல்களைத் தவிர்த்து ஞானத்தை (போதியை) வளர்க்கும் நல்ல செயல்களைச் செய்கின்ருன். நல்லது என்று நன்மையைச் செய்பவரும் தீயது என்று தீமையை விலக்குபவரும் உளர்.

தமது சிறந்த சீடரிடமிருந்து புத்தர் எதிர்பார்க்கும் தனிச்சிறப்பான நன்னெறித் தரத்தைப் புரிந்துகொள்ள

ஒருவன் தம்மபதம், சிகாலவாத சுத்தம், வியாக்கபாத சுத்தம், மங்கள சுத்தம், கரணிய சுத்தம், பராபவ சுத்தம், வசல சுத்தம், தம்மிக்க சுத்தம் முதலியவற்றைக் கவனமாகப் படித்தல் வேண்டும்.

ஒழுக்க போதனையில், மற்ற நன்னெறித் தொகுதிகளைவிடப் பௌத்தம் மிக மேலானது. ஆனால் ஒழுக்க நெறி பௌத்தத்தின் ஆரம்ப நிலையே தவிர அதன் முடிவு அன்று.

ஒரு விதத்தில், பௌத்தம் ஒரு தத்துவ மன்று. ஆனால் இன்னொரு விதத்தில் அது தத்துவங்களுட் சிறந்த தத்துவமாகும்.

ஒரு விதத்தில் பௌத்தம் ஒரு சமயமன்று. ஆனால் இன்னொரு விதத்தில் அது சமயங்களுட் சிறந்த சமயமாகும்.

பௌத்தம் புலன்கடந்த அல்லது கிரியைகள் நிறைந்த நெறியன்று.

அது ஐயப்பாடுடையதோ அல்லது பிடிவாத கொள்கையுடையதோ அன்று.

அது சுயதுன்புறுத்தலோ அல்லது சுயநல ஈடுபாடோ கொண்டது அன்று.

அது நம்பிக்கையற்றதோ அல்லது நன்மையுடையதோ அன்று

அது நித்தியதன்மை வாதமோ அல்லது சூனியவாதமோ அன்று.

அது முழுவதும் இம்மைபற்றியதோ அல்லது அம்மை பற்றியதோ அன்று.

அது ஓர் இணையற்ற ஞானவழி ஆகும்.

பௌத்தத்துக்கு முதன்முதல் வழங்கப்பட்ட சொல் "ஏந்துவது எதுவோ அது" எனப் பொருள்படும்

"தம்மம்" ஆகும். இந்தக் கருத்தைக் கொண்ட பாளிப் பதத்தை விளக்க ஆங்கிலத்தில் ஒரு சமமான சொல் கிடையாது.

உண்மையாயிருப்பது எதுவோ அதுதான் "தம்மம்". அது உண்மையாயிருக்கும் சித்தாந்தம் ஆகும். அது துன்பத்திலிருந்து விடுதலையளிக்கும் மார்க்கமும், விடுதலையுமாகும். புத்தர்கள் தோன்றினாலும் தோன்றாவிட்டாலும் "தம்மம்" நிலைத்திருக்கும். ஒரு புத்தரோ அல்லது மெய்ஞ்ஞானம் பெற்ற ஒருவரோ அதை உணர்ந்து, கருணையோடு உலகுக்கு வெளிப்படுத்தும் வரை அது அறியாமை நிறைந்த மக்களின் கண்களினின்றும் மறைந்திருக்கும்.

இத் தம்மம் ஒருவனின்றும் வேறாக நிலைபெற்றிருக்காது அவனோடு நெருங்கி இணைந்திருப்ப தொன்றாகும்.

இதனை நினைவுறுத்த, "தன்னை ஒரு தீவாக நினைத்துத் தானே அதில் ஒரு அடைக்கலம் என்று எண்ணிக்கொள். தம்மத்தையே தீவாகவும் அடைக்கலமாகவும் நினைத்துக்கொள்; வேறு புறம்பான அடைக்கலத்தைத் தேடாதே" என்று புத்தர் கூறினார், (பரிநிபாண சுத்தம்).

---

அத்தியாயம் 5

## பௌத்தத்தின் சில முக்கிய அம்சங்கள்

பௌத்த மதத்தின் அடிக்கல்லாக அமைந்தவை புனிதமான நால்வகை வாய்மைகளாம்—அவையாவன, துக்கம், துக்க உற்பத்தி (அஃதாவது அவா அல்லது வேட்கை), துக்க நிவாரணம் (அஃதாவது நிர்வாணம்), துக்க நிவாரண மார்க்கம் (மஜ்ஜிம மார்க்கம்) ஆகிய இவை.

துக்கம் என்ற புனித வாய்மை யாது?

பிறத்தல் துன்பம், முதுமை துன்பம், பிணிநோக்காடு துன்பம், மரணம் துன்பம், இன்னாதவற்ருேடு இணைந்திருப்பது துன்பம், இனியவற்றினின்றும் பிரிந்திருப்பது துன்பம், விரும்பியதை அடையாமை துன்பம் — சுருங்கக் கூறின் பஞ்சஸ்கந்தங்களும் துன்பமேயாம்.

துக்க உற்பத்தி என்ற புனித வாய்மை யாது?

இப்போ இங்கும் பின்பு அங்குமாக அற்ப இன்பத்தைதருகின்ற காமலோகங்களோடு சேர்ந்து, ஒரு பிறவியிலிருந்து இன்னுமொரு பிறவிக்கு இட்டுச் செல்லுகின்ற அவாஅல்லது வேட்கை என்னும் திருஷ்ணை ஆகும். இது புலனுகர்ச்சியை விரும்பும் காமத்தன்கா, வையத்தில் உயிருடன் வாழ்வதை விரும்பும் பவத்தன்கா, அழிவுத் தன்மையை விரும்பும் விபவத்தன்கா என மூவகையினதாம்.

துக்க நிவாரணம் என்ற புனித வாய்மை யாது?

இந்த வேட்கையை அல்லது ஆசையை முற்ருக ஒழித்து, அது தன்னை மேலும் பற்றிக்கொள்ளாமல் அதனை வலிந்து நீக்கி, தன்னை அதனின்றும் விடுவித்துக் கொண்டு, அதனை முற்றும் அழித்தலினுல் உண்டாகும் வேட்கை அழிவேயாம்.

துக்க நிவார மார்க்கமாகிய புனித வாய்மை யாது?

இது தூய்மையான அட்டாங்க மார்க்கமாகும். அஃதாவது:- நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு, என்னும் இவ்வெட்டுமாம்.

புத்தர்கள் தோன்றினுலென்ன, அல்லாவிட்டாலென்ன இந் நால்வகை வாய்மையும் இப்பூமண்டலங்களில் நிலைபேறுடையன. காலம் என்னும் காரிருளிற் கரந்து கிடக்கும் இவ்வாய்மைகளை வெளிப்படுத்தவே புத்தர்கள் தோன்றுகிருர்கள்,

இதனை விஞ்ஞானரீதியாக விளக்கினல், தர்மம் ஒரு காரண காரியத் தொடர்பு விதி எனப் பெயர்பெறலாம். இவையிரண்டும் புத்ததேவரின் போதனை முழுவதையும் அணைத்து வியாபித்திருப்பதைக் காணலாம்.

முதன் மூன்று வாய்மைகளும் பௌத்த தத்துவத்தைக் குறிக்கின்றன. நான்காவது வாய்மை, அப் பௌத்த தத்துவத்தின் மேல் எழுப்பப்பட்ட அறநெறியைக் குறிக்கின்றது. "இந் நான்கு வாய்மைகளும் இவ்வுடலையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. புலனுணர் அறிவையும் சேர்ந்த இந்த எண்சாண் உடம்பிலேயே உலகமும் உலக உற்பத்தியும், உலக அழிவும், உலக அழிவுக்கு வழிகாட்டும் மார்க்கமும் ஆகிய இவை உள்ளன என்று பிரகடனப்படுத்துகின்றேன்." என்று பகவான் புத்தர் கூறினர். இங்கு அவர் உலகம் என்றது துக்கத்தை.

பௌத்த மதம் துன்பம் என்னும் அச்சாணியிலேயே நிற்கின்றது. ஆகவே பௌத்தம் கேட்டு மனப்பான்மையுடையது எனக் கூறமுடியாது. அது பூரணமாகக் கேட்டு மனப்பான்மையுடையதுமன்று. மாருக, அது இருவழிகட்கும் நடுவழியேயுள்ள ஒருண்மையைப் போதிக்கின்றது. புத்ததேவர் துக்கமாகிய வாய்மையை எடுத்துரைத்து அதனை ஒழித்துக் கட்டுவதற்குரிய வழியைப்பற்றிக் கூருது விட்டால், அவர் ஒரு கேட்டு மனப்பான்மையுடையவர் என்று கூறுவதில் பொருத்தம் உண்டு. துன்பம் உலகெங்கணும் வியாபித்திருக்கும் தன்மையை உணர்ந்த புத்த பகவான் மனித குலத்தையே பீடித்திருக்கும் இந்த வியாபகமான பிணியை மாற்றும் சஞ்சீவி மருந்தையும் விதித்தார். புத்த தேவரின் கருத்தின்படி, மனதினுற் கற்பனை செய்யக்கூடிய மிகவுயர்ந்த பேரின்பமானது துக்கத்தின் முழுப்பரிகாரமாகிய நிர்வாணமாகும்.

கேட்டு மனப்பான்மைக் கொள்கை பற்றி ஆங்கிலக் கலைக் களஞ்சியம் எழுதியவர் "கெடுதலை

எதிர்பார்க்கும் கொள்கை, வாழ்வை நோக்கி ஒரு நம்பிக்கையில்லாத் தோரணையையும், மானிட விஷயங்களில், துன்பமும் கெடுதலுமே அதிக ஆட்சி என்ற ஒரு தெளிவற்ற பொது அபிப்பிராயத்தையும் குறிக்கும். பௌத்தத்தின் ஆரம்ப சித்தாந்தம் மேலைத்தேயத்தில் காணப்படும் எந்தவித நம்பிக்கையையும் ஒத்திருக்கிறது. அது கெடுதலை எதிர்பார்க்கும் தன்மையுடையது எனக் கூறுவது, மேலைத்தேயக் கொள்கையான, தனி மனிதப் பண்பில்லாவிடில் மகிழ்ச்சியில்லை, என்றதை ஒத்திருக்கின்றது. நிலையான பேரின்பத்தோடு ஒன்ற, உண்மையான பௌத்தன் ஊக்கத்தோடு எதிர்பார்க்கிறான்.'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாகப் பொது மனிதனின் ஒரேயொரு மேலான இன்பம் சிற்றின்ப நுகர்ச்சியாகக் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட விரைவில் தோன்றி மறைந்திடும் உலக இன்பங்களை எதிர்பார்த்தலிலும், நுகர்தல் பின் நினைத்துப் பார்த்தல் ஆகியவற்றால் ஒருவகையான கணப்பொழுது மகிழ்ச்சி உண்டென்பதில் ஐயமில்லை. ஆனால் அவை மயக்கம் நிறைந்த தற்காலிகமான இன்பங்களாகும். பற்றற்ற தன்மையே புத்த தேவரின் கொள்கைப்படி மேலான பேரின்பமாகும்.

புத்தர் தமது சீடர்களை எந்நேரமும் துன்பத்தையே எண்ணியெண்ணி சதா துயரமிகுந்த வாழ்வை மேற்கொள்ளவேண்டுமென எதிர்பார்ப்பதில்லை. புத்தர் அவர்களை எந்நேரமும் மகிழ்ச்சியுடனும் புன்னகையுடனும் இருக்கவே விரும்புகிறார். ஏனெனில் மகிழ்ச்சி (பிரிதி) ஞானத்தின் ஒரு காரணக் கூறாகும்.

உண்மையான இன்பம் அகத்திலேதான் காணப்படுகின்றது. ஒருவனுடைய செல்வம் மக்கள் மதிப்பு புகழ் முதலியவற்றைக் கொண்டு அவனுடைய இன்பத்தை அளவிடமுடியாது. இம்மாதிரியான உடைமைகள் தவறான வழியிற் கொண்டு செல்லப்பட்டால், பலாத்காரமாக அல்லது அநியாயமாகப் பெறப்பட்டால், மோசடி

செய்யப்பட்டால் அல்லது பற்ருேடு கருதப்பட்டால், அவை துன்பத்தையும் துயரத்தையும் தருவதற்கு ஏது வாவன.

துன்பத்துக்குக் காரண விளக்கம் தர முயற்சிக்காமல், பௌத்தம் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டு, அதை வேருடன் களைந்தெறியும் வழியைத் தேடுகின்றது. ஆசையிருக்கும்வரை துன்பமிருக்கும். உயரிய அட்டாங்க மார்க்கத்தின் வழியே சென்று மேலான பேரின்பச் சுகவாரியான நிர்வாணத்தை அடைவதன் மூலம் மட்டுமே அத்துக்கத்தை அழிக்கமுடியும்.

இந்நான்கு உண்மைகளை அநுபவத்தினுல் நிரூபிக்க முடியும். ஆகவே பௌத்த தம்மம் அறியாத பரம் பொருளைப் பற்றிய அச்சத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதன்று. அதற்கு மாருக எம்மால் சோதிக்கப்பட்டு அநுபவத்தால் நிரூபிக்கப்படக் கூடிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே பௌத்தம், பகுத்தறிவுள்ளதும் அதிகம் சாதனைக் குரியதுமாகும்.

இப்படிப்பட்ட பகுத்தறிவான சாதனை செய்யக் கூடிய ஒழுங்கு, மர்மமாயும் மறைபொருளாயும் உள்ள சித்தாந்தத்தைக் கொண்டிருக்க முடியாது. ஆகையால் குருட்டு நம்பிக்கை பௌத்தத்துக்கு அந்நியமானது: எங்கு குருட்டு நம்பிக்கை இல்லையோ அங்கு கட்டாயப் படுத்தல் அல்லது சமயத்தின் பேரில் துன்புறுத்தல், அல்லது விடாப்பிடிக் கொள்கை இருக்கமாட்டாது. பௌத்தத்தின் இணையற்ற நன்மதிப்புக்கு அதன் 2500 வருட அமைதியான முன்னேற்ற வளர்ச்சியில் புத்தரின் பேரில் ஒரு துளி இரத்தமும் சிந்தப்படவில்லை என்பதனையும் புத்த மதத்தைப் பரப்ப எந்த பராக்கிரமம் வாய்ந்த மன்னனும் தனது சக்தி மிக்க ஆயுதத்தை உபயோகிக்கவில்லை என்பதனையும், பலாத்காரமாக அல்லது வெறுக்கத்தக்க முறையில் ஒரு மதமாற்றமும் நடைபெறவில்லை என்பதனையும் கூறிவைக்க வேண்டும். எனினும் பூமியில்

வாழ்ந்த மிகச் சிறந்தவரும் முதன்மையானவருமாகிய சமயதூதர் புத்தரேயாவர்.

"உலகப் பெரும் மதங்களில் பௌத்தம் மட்டுமே சமயத் துன்புறுத்தல்கள் தொல்லைகள் தணிக்கைகள் தீவிர விசாரணைகள் முதலியன இல்லாமல் தான் தனக்கென வகுத்துக்கொண்ட பாதைவழியே முன்னேறிவந்துள்ளது" என்று ஆல்டஸ் ஹக்சிலி என்ற மேதை கூறுகின்றார்.

"வரலாற்றிலுள்ள பெருஞ் சமயங்களில் பௌத்தத்தைச் சிறப்பாக அதன் ஆதி உருவத்தையே நான் ஏனைய மதங்களிலும் அதிகம் விரும்புகின்றேன். ஏனெனில் பௌத்தமதத்தில்தான் சமயத் துன்புறுத்தல்கள் மிகக் குறைந்த அளவில் உள்ளன," என்று ரசல் பிரபு குறிப்பிட்டுள்ளார்.

பௌத்தத்தின் பேரில் ஒரு கைப்பேசியாவின் இரத்தத்தால் பரிசுத்த பலிபீடமும் சிவப்பேறவில்லை; புறுனோவைப்போல் யாவரும் உயிரோடு எரிக்கப்படவுமில்லை.

பௌத்தம் உணர்ச்சியைவிட அறிவாற்றலுக்கே விருந்தாகும். அது புத்தர்களின் எண்ணிக்கைப் பலத்தைவிட அவர்களின் குணவியல்பைப்பற்றியே மனங்கொள்கிறது.

நிகந்தநாதபுத்தரைப் பின்பற்றிய உபாலி என்பவர் ஒரு சமயம் புத்ததேவரிடஞ் சென்று அவர் வழங்கிய தம்ம விளக்கவுரையைக் கேட்டு அகமிக மகிழ்ந்து, அவரின் சீடனாக வரவிருந்த விருப்பத்தை வெளிப்படுத்தினன். ஆனால் புத்ததேவர் "குடும்பஸ்தனே, உண்மையைப்பற்றி முழு விசாரணை செய். உன்போன்ற சிறந்த மனிதன் ஒருவன் முதலாக முழுவிசாரணை செய்வது நல்லது" என்று எச்சரித்தார்.

இந்த எதிர்பாராத குறிப்பைக் கேட்ட உபாலி மகிழ்ச்சி மிக்குப் "பிரபுவே நான் இன்னொரு சமயத்

யைதச் சேர்ந்தவனாக இருந்தால், அச்சமயத்தார் என்னை ஒரு ஊர்வலமாக அழைத்துச் சென்று, இப்படிப்பட்ட ஒரு கோடீஸ்வரன் தனது முந்திய சமயத்தை விட்டு எமது சமயத்தைத் தழுவியுள்ளார் என்று பறைசாற்றியிருப்பர். ஆனால் மேன்மை தங்கிய நீங்கள் என்னை மேலும் விசாரணை செய்ய அறிவுறுத்துகிறீர்கள். தங்களது இந்தப் பேச்சினால் நான் மேலும் மகிழ்ச்சியுறுகின்றேன். ஆகவே, பிரபு, நான் இரண்டாம் முறையாகப் புத்தர், தம்மம், சங்கம் முதலியவற்றில் அடைக்கலம் புகுகின்றேன்.'' எனக் கூறினான்.

பௌத்தம் இவ்விதமான சுதந்திர விசாரணையாலும் முழுச் சகிப்புத்தன்மையாலும் நிரம்பியிருக்கின்றது. விரிந்த மனப்பான்மையையும் பரிவுமிக்க இதயத்தையும் கொண்ட போதனையான இது விவேகம், கருணை என்ற இரு ஒளிக் கதிர்களால் சப்சாரசாகரத்தில் தத்தளிக்கும் ஒவ்வொருவருக்கும் தனது நல்லொளியைச் சொரிந்து அகில உலகையும் மகிழ்விக்கும்.

புத்ததேவர் தமது மனதைச் சார்ந்த உபாசகர்களுக்குக் கட்டளையிடக்கூடிய அளவுக்குத் தமது உரிமையை உபயோகிக்காத சகிப்புத் தன்மையையுடையவர் அவர், ஆணையிடுவதற்குப் பதிலாக ''இதைச் செய்ய உனக்குத் தகுதியிருக்கிறது. இதைச் செய்ய உனக்குத் தகுதியில்லை'' என்று தூண்டினார்.

இச்சகிப்புத்தன்மையைப் புத்தர், ஆண், பெண் எல்லா உயிரினங்களிலும் காட்டினார்.

அடிமைத்தளையை அறுத்தெறிய புத்ததேவர் தாம் முதன் முதல் முயற்சி செய்தார். அவர் இந்திய மண்ணில் உறுதியாக வேரூன்றியிருந்த இழிவான சாதி முறையைத் தீவிரமாக எதிர்த்தார். புத்த தேவர் வாக்கின்படி ஒருவன் ஒதுக்கப்பட்டவனாகவோ அல்லது பெருமகனாகவோ ஆவது அவனுடைய செயல்களினாலேயல்லாமல்

பிறப்பினாலன்று. ஒருவன் பௌத்தனாக விரும்பினால் அல்லது துறவிகளின் சங்கத்திற் சேர விரும்பினால், அவனுடைய சாதியோ, நிறமோ, தடையாக விருக்கமாட்டாது. மீனவர், தோட்டிகள், தாசியர், முதலியவர்கள் போர் வீரர், பிராமணர் முதலியவர்களோடு, பௌத்த சந்நியாசிகள் சங்கத்தில் எவ்வித தங்குதடையுமின்றி அநுமதிக்கப்பட்டுச் சமமான உரிமைகளைப் பெற்று, உயர்பதவிகளில் நியமிக்கப்பட்டனர். உதாரணமாக, மற்ற எல்லோரையும் தவிர்த்து நாவிதனான உபாலி என்பவன் விநயக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். பயந்த சுபாவமுடைய சுனித்தன் என்ற தோட்டி புத்ததேவராலேயே துறவுக்குழுவுக்கு அநுமதிக்கப்பட்டபின் அரகத்து நிலையை அடைந்தான். திருடனும் கொலைகாரனுமான அங்குலிமாலா என்பவன் புத்ததேவரிடம் அடைக்கலம் புகுந்து ஒரு கருணைமிகுந்த புனிதனானான். மூர்க்கனான ஆலவக்கன் புத்ததேவரிடம் அடைக்கலம் புகுந்து ஒரு பரிசுத்தனானான். தாசியான அம்பபாலி என்பவள் சந்நியாசினி சங்கத்தைச் சேர்ந்து அரகத்துத் தன்மையை அடைந்தாள். சாதி, நிற, பதவி பேதமின்றி எல்லோருக்கும் பௌத்தத்தின் திருக்கோயில் வாயில்கள் திறக்கப்பட்டுள்ளன; எனக் காட்டுவதற்கு இப்படிப்பட்ட சான்றுகள் பலவற்றைத் திரிபிடகத்தில் பரக்கக்காணலாம்.

சமூகத்தில் தாழ்த்தப்பட்ட பெண்களின் அந்தஸ்தை உயர்த்தி சமூகத்துக்கு அவர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தியதோடமையாது முதன் முதல் பெண்களுக்காக ஒரு பிரமச்சரிய சமயசங்கத்தைச் சட்டதிட்டங்களுடன் உருவாக்கியவரும் பகவான் புத்தரேயாவர்.

பெண்களை இயற்கையில் மென்மையுடையவர்கள் என்று கருதினரே தவிர அவர்களைத் தாழ்த்திப் பேசவில்லை. ஆண், பெண் என்ற இருபாலாரினதும் உடன் பிறந்த நற்குணத்தைக் கண்டு அவர் தமது போதனைக

ளில் இருவருக்கும் தகுந்த இடங்களையளித்தார். அரகத்து நிலையையடைவதற்குப் பாலினம் ஒரு தடையன்று.

மாதுகாம் என்ற பெண்ணைக் குறிக்கும் பாளிச்சொல் "தாய்க்குலம்" அல்லது "தாய்ச்சமுகம்" என்று சிலவேளைகளில் பொருள்படும். பௌத்தத்தில் ஒரு பெண் தாய் என்ற மேம்பட்ட நிலையை வகிக்கின்ருள். பௌத்தத்தில் மனைவி கூட கணவனின் "உற்ற சிநேகிதி" (பரமசகா) எனக் கருதப்படுகின்ருள்.

பௌத்தம் பெண் சமுகத்தைப் பகையாகக் கருதுகிறது என்று குற்றங் கூறுவோரின் வாக்குப் பாரபட்சமானதாகும். புத்தர் முதலில் பெண்களைச் சங்கத்தில் காரணத்தோடு அநுமதிக்க மறுத்தாலும், பின் தம்மை வளர்த்த சிற்றன்னை பிரஜாபதி கோதமித்தாயின் வேண்டுதலுக்கிணங்கி பிக்குணிச் சங்கத்தை ஏற்படுத்திஞர். பிக்குச் சங்கத்துக்குத் தலைமைச் சீடர்களாக எப்படி அரகத்துக்களாகிய சாரிபுத்தரும் முகல்லானரும் நியமிக்கப்பட்டார்களோ அவ்வாறே அரகத்துக்களாகிய கேமாவும் உலவண்ணியும் இரு தலைமைப் பெண் சீடர்களாக்கப்பட்டனர். வேறு பெண் சீடர்கள் பலரையும் சிறந்தவர், பக்தி நிறைந்தவர்கள் எனப் புத்ததேவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு முறை தனக்குப் பெண்குழந்தை பிறந்திருப்பதைக் கேள்வியுற்று விசனமடைந்த கோசல மன்னனைப் பார்த்து, பகவான் புத்தர்: "வேந்தே! ஒரு ஆண்குழவியினும் பெண்குழவி சிறந்த குழந்தையாக வரலாமல்லவா?" என்று கூறிஞர்.

அநேக பெண்கள் தம்மத்தைப் பின்பற்றிப் பிக்குணிச் சங்கத்திற் சேராதிருந்தால் உலகத்தில் மறைந்திருந்து மறக்கப்பட்டவராய்ப் போயிருப்பார். ஆஞல் புத்த மதத்தைப் பின்பற்றியதிஞல் அவர்கள் விடுதலை பெற்றுப் பலதுறைகளில் புகழ்பெற்று விடுதலையடைந்த

னர். இப்புதிய பிக்குணிச் சங்கம் பின்னர் மகாராணி களுக்கும் இளவரசிகளுக்கும் பிரபுக்களின் புதல்விகளுக் கும், விதவைகளுக்கும், துயரமுற்ற தாய்மாருக்கும், அநா தப் பெண்களுக்கும், பரிதாபமிக்க தாசிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்த இவர்கள் தங்கள் சாதி, பதவி முதலிய வேறுபாடில்லாமல் ஒரு பொது மேடை யிற் கூடி, கோட்டைகளிலும் குடிசைகளிலும் வாழ்வோ ருக்கும் கிட்டாத சுதந்திரச் சூழ்நிலையில் வாழ்ந்து பரி பூரண சாந்தியையும் மனம் நிறைந்த திருத்தியையும் அநுபவிக்க உதவி வருகிறது.

வாயில்லாப் பிராணிகளைப் பலியிடுவதைத் தடை செய்து தம் காலடியில் ஊர்ந்து செல்லும் மிகச் சிறிய பிராணி உட்பட எல்லா உயிரினங்களுக்கும் தமது அன் பான கருணையை (மெத்தா) காட்டும்படி புத்தர் தமது சீடர்களுக்கு அறிவுறுத்தினார். வாழ்க்கை எல்லோருக்கும் ஒரு விலை மதிப்பற்ற பொருளாதலின் இன்னோர் உயிரின் வாழ்க்கையை அழிக்கும் சத்தியோ உரிமையோ எந்த வொரு மனிதனுக்கும் இல்லை.

சாதி, நிற, பாலின பேதமின்றி எல்லாவற்றோடும் தன்னையும் ஈடுபடுத்தி எல்லா உயிரினங்கள் மீதிலும் இவ்வன்புக் கருணையைச் செலுத்துபவனே ஒரு உண்மை யான பௌத்தனாவன்.

ஒன்றை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்தும் தடை களை உடைத்தெறிய இந்தப் பௌத்த மெத்தா பாவனை முயற்சிக்கின்றது. மற்றவர்கள் இன்னொரு சமயத்தை அல் லது இன்னொரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று நினைத்து அவர்களிடமிருந்து பிரிந்து நிற்கக் காரணம் எதுவுமில்லை. சுள-வியூக, மகா-வியூக சுத்தங்களை ஆதாரமாகக் கொண்ட உயரிய சகிப்புப் பிரமாணத்தில் அசோகன் பின்வருமாறு சொல்லுகின்றார்: "மக்கள் ஒருமை மட்டுமே சிறந்தது. அதாவது எல்லோரும் மற்றவர் போதிக்கும் சித்தாந்தங் களை மனமுவந்து கவனமாக உற்றுக் கேட்க வேண்டும்."

பௌத்தம் ஒரு தேசத்துக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட சாதிக்கோ சொந்தமானதன்று. அது அனைத்துலகுக்கும் உரியது. தேசியம் வேறுவிதமாகக்கூறின் ஒரு பரந்த அடிப்படையிலமைந்த சாதிமுறையாதலின் அது தேசியமன்று. பௌத்தம் ஒரு உத்தம தேசியமாகும்.

அகிலம் வியாபித்த அன்பு ஒவ்வொன்றையும் சரியாகப் புரிந்து கொள்வதன் மூலமாக நிறுவியபடியினுல், ஒரு பௌத்தனுக்குச் சேய்மையோ அண்மையோ, பகைவனே, அந்நியனே, துரோகியோ, தீண்டத்தகாதவனே என்ற வேறுபாடு இல்லை.

ஒரு உண்மையான பௌத்தன் உலகப்பிரஜையானவன். அவன் முழு உலகையும் தனது தாய் நாடாகவும் எல்லோரையும் தனது சகோதரர்களாகவும் கருதுகிறுன்.

ஆகவே சகிப்புத்தன்மை, பலாத்காரமின்மை, பகுத்தறிவு, சாதனைத்தன்மை, பயனிறைவு, உலக வியாபகத் தன்மை, முதலியவற்றுல் பௌத்தம் இணையற்ற ஒரு மதமாகத் திகழ்கின்றது. எல்லாவற்றையும் இணைத்து ஒன்றுபடுத்தும் செல்வாக்கு நிறைந்த சாதனங்களில் உயர்ந்தது பௌத்தமேயாகும். அது உலகை உயர்த்தக் கூடிய ஒரு நெம்புக் கோலுமாகும்.

இவை பௌத்தத்தின் சில முக்கிய அம்சங்களாகும். கன்மம் அல்லது காரண காரிய விதி மறுபிறப்புச் சித்தாந்தம், அநாத்மா, நிபாணம், முதலியவற்றைப் பௌத்தத்தின் அடிப்படைச் சித்தாந்தங்களுட் சில எனக் கூறலாம்.

அத்தியாயம் 6

# கன்மம் அல்லது காரண காரிய ஞானம்

நாம் ஒரு சமநிலையற்ற உலகை நம் எதிரில் காண்கின்றோம். உலகில் வாழும் உயிர்களின் பலதரப்பட்ட தன்மை மனிதரின் சமத்துவமின்மை. அவனது பல்வித மான இலக்குகள் முதலியவற்றை நாம் உணர்ந்தறிகிறோம். ஒருவன் சிறந்த மனப்பண்பு, உடற்பண்பு கொண்டு செல்வச் சூழ்நிலையில் பிறப்பதையும், இன்னொருவன் வறுமை நிறைந்த துயரமான சூழ்நிலையில் பிறப்பதையும் நாம் கண்ணாரக் காண்கிறோம். நற்குணங்களையும் தூய்மையையும் உடைய ஒருவனுக்கு அவன் எதிர்பாரா வகையில் துரதிர்ஷ்டம் எந்நேரமும் காத்திருக்கின்றது. அவனுடைய இலட்சியங்களுக்கும் ஆசைகளுக்கும் இந்த நயவஞ்சக உலகம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. அவனுடைய செய்கைகளில் நேர்மையும் பக்தியும் இருந்தாலும், அவன் வறுமையிலும் துயரத்திலும் வாடுகிறான். கெட்டவனும் முட்டாளுமான இன்னொருவன் நற்பேறுகளின் அணைப்பிலிருக்கிறான். அவன் குறைபாடுகளையும் கெட்டவழக்கங்களையும் உடையவனாயிருந்தாலும் எல்லாவிதமான அனுகூலங்களும் அவனுக்குக் கிடைக்கின்றன.

ஏன் ஒருவன் உயர்ந்த நிலையிலும் இன்னொருவன் தாழ்ந்த நிலையிலும் இருக்க வேண்டும்? எனக் கேட்கப்படலாம். ஒருவன் குழந்தைப் பருவத்திலும், இன்னொருவன் நிறை வாலிபத்திலும், மற்றொருவன் முதிர்ந்த வயதிலும் ஏன் சாக வேண்டும்? ஏன் ஒருவன் நோயுற்றும், பலவீனமாகவும், இன்னொருவன் உடல்நலத்தோடும், பலசாலியாகவும் இருக்கவேண்டும்? ஏன் ஒருவன் அழகாகவும், இன்னொருவன் அருவருக்கத்தக்க கோரரூபங் கொண்டவனாகவும் இருக்கவேண்டும்? ஏன் ஒருவன், செல்வத்தின் மடியிலும், இன்னொருவன் துயர் மிகுந்த வறுமையிலும் வளர வேண்டும்? ஏன் ஒருவன் கோடீஸ்வரனாக

வும், இன்னொருவன் ஆண்டியாகவும் இருத்தல் வேண்டும்? ஏன் ஒருவன் மேதாவியாகவும், இன்னொருவன் அறிவிலியாகவும் இருக்கவேண்டும்? ஏன் ஒருவன் ஞானிக்குரிய பண்புகளோடும், இன்னொருவன் குற்றமான மனப்போக்கோடும் பிறக்க வேண்டும்? ஏன் சிலர் மட்டும் தொட்டிலிலிருந்தே பன்மொழிப் புலவராகவும், ஓவியராகவும், கணக்கறிஞராகவும், இசைக்கலைஞராகவும் திகழ வேண்டும்? ஏன் சிலர் மட்டும் பிறப்பிலேயே குருடாகவும், செவிடாகவும், அங்கவீனராகவும் இருக்க வேண்டும்? ஏன் சிலர் மட்டும் பிறப்பிலிருந்து வாழ்த்தப்பட்டும், மற்றவர் சபிக்கப்பட்டும் இருக்கிறார்கள்?

இவை சிந்தனை செய்யும் மனிதரின் மனத்தைக் குழப்பும் சில பிரச்சனைகளாகும். இந்த சமநிலையற்ற தன்மையை, மனிதனின் சமத்துவமின்மையை எப்படி விளக்குவது?

இது ஒரு தற்செயல் நிகழ்ச்சியா அல்லது விபத்தா?

இவ்வுலகில் எதுவும், தற்செயலாகவோ அல்லது விபத்தாகவோ நடப்பதில்லை. தற்செயலாகக் காரியங்கள் நடைபெறும் எனக் கூறுவது, இந்தப் புத்தகம் இந்தக் கையில் தானாக வந்து சேர்ந்துள்ளது என்று கூறுவதற்கு ஒப்பாகும். தீர்க்கமாகச் சொன்னால், மனிதன், எக்காரணத்தினாலோ தனக்கு வரவேண்டியதையே அவன் பெறுகிறான்.

இது ஒரு பொறுப்பில்லாத கடவுளின் கட்டளையாகுமா?

யாரோ இவ்வற்புதமான உலகை திட்டமிட்டுப்படைத்தார் என்று எடுத்துக்கொண்டால், அவர் முழுதும் நன்மையான அல்லது முழுதும் தீமையான குணத்தையுடையவரல்லர் என்பது தெள்ளத் தெளிவாகிறது, என ஹக்ஸ்லி எழுதுகிறார்.

ஐன்ஸ்டைன் "இக் கடவுள் எல்லாம் வல்லவரானால் எல்லா மனித செயலும் எல்லா மனித எண்ணமும் எல்லா

மனித உணர்வும் ஆர்வமும் அவருடைய வேலையேயாகும். இப்படிப்பட்ட சர்வ வல்லமை வாய்ந்த கடவுளின் முன் நாம் எப்படி மனிதனை அவனுடைய செயல்களுக்கு பொறுப்பாளியாக்கமுடியும்?"

"தண்டனைகளையும் வரங்களையும் தருவதன் மூலம் அவர் ஓரளவுக்குத் தனக்கே தீர்ப்பளித்துக் கொள்ளுகிறார். இது எங்ஙனம் அவரைக் குறிக்கும் நற்குணத்தோடும் நேர்மையோடும் பொருந்தும்" என்று கூறுகின்றார்.

"சமய சித்தாந்தக் கொள்கைகளின்படி மனிதன் ஒரு தலைபட்சமாக அவனது விருப்பமின்றிப் படைக்கப்படுகின்றான். படைப்பின்போது அவன் என்றும் ஆசீர்வதிக்கப்படுகிறான். அல்லது முற்றாகச் சபிக்கப்படுகிறான். ஆகவே மனிதன் அவனது தனிப்பட்ட விருப்பங்கள், நம்பிக்கைகள், இலட்சியங்கள், போராட்டங்கள், பக்தி நிறைந்த வழிபாடுகள் முதலியவற்றுக்கு மதிப்புத் தராமல் அவனது படைப்பின் முதலடியிலிருந்து கடைசி மூச்சுவரை நல்லவனாகவோ அல்லது கெட்டவனாகவோ, நற்பேறு பெற்றவனாகவோ அல்லது அவப்பேறு பெற்றவனாகவோ, உயர்ந்தவனாகவோ அல்லது தாழ்ந்தவனாகவோ இருக்கவேண்டும். சமய சித்தாந்தத்தின்படி ஊழ்வினை இப்படிப்பட்டது" என்று ஸ்பென்சர் லுயிஸ் கூறியுள்ளார்.

கடவுள் என்றும் நல்லவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர் என்ற கூற்றையும், கடவுள் நிலையான நன்மையைக் கொடுப்பவர் என்ற நம்பிக்கையையும், பிணி துயரம், பாதகம் வறுமை என்பன பதிலளிக்க முடியாத பலத்தோடு சவால் விடுகின்றன என்பதையும் சார்வஸ் பிராட்லோ கூறியுள்ளார்.

"தாம் ஒன்றுமில்லாததிலிருந்து (சூன்யத்திலிருந்து) வந்ததாக நினைப்பவர் தாம் மீண்டும் ஒன்றுமில்லாததாக (சூன்யமாக) ஆவார் என்பதை மறக்கக் கூடாது; ஏனெனில் அவன் தோன்றுமுன் ஒரு ஈறில் காலம் கழிந்துவிட்டது. அவன் தான் தோன்றியதன்பின் இரண்டாவது முடி

விலியில் அழியாமலிருப்பான் என்ற எண்ணம் ஒரு மிகக் கொடிய எண்ணமாகும்'' என்று சோபன்கேவர் கூறியுள்ளார்.

"பிறப்புத்தான் முழுமுதல் ஆரம்பமானல் அப்போது இறப்புத்தான் முழுமுடிவாகவேண்டும்; மனிதன் ஒன்று மில்லாததிலிருந்து உருவாக்கப்பட்டான் என்ற மேற்கோள் இறப்பு முழுமுடிவாக இருக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறுகின்றது.''

பேராசிரியர் ஜே. பி. எஸ். ஹல்தேன் கடவுளையும் மனித துன்பங்களையும் பற்றிக் குறிப்பிடும்போது "மனிதனின் குணவியல்பை முழுமையாக்கத் துன்பம் தேவைப் படுகின்றது; அப்படியில்லையாயின் கடவள் எல்லாம் வல்லவரல்ல. அதிக துன்பத்தை அனுபவிக்காத, ஆனல் நல்ல மூதாதையரையுடைய, கல்வியறிவுடைய சிலர் மிகச் சிறப்பான குணவியல்புகளைக் கொண்டுள்ளனர், என்ற உண்மை முதற்கோட்பாட்டைத் தகர்க்கின்றது. இரண்டாவது கோட்பாட்டுக்குரிய மறுப்பு யாதெனில், அது அகில உலகைப் பொறுத்தமட்டில் அறிவினல் விளக்க முடியாத வெற்றிடங்களை நிரப்ப அவற்றைத் தெய்வத்தின் செயலென்ற கருத்தாகும். படைக்க வல்லவர் அல்லது படைக்க வல்லது விரும்பிய எதையும்தான் படைக்கக் கூடும் எனக் கூறினர்.

"நல்லவரும் எல்லாம் வல்லவருமான இறைவனல் இவ்வுலகம் படைக்கப்பட்டுள்ளது என்று'' எமக்கு கூறப் பட்டுள்ளது. உலகைப் படைக்குமுன் அது உள்ளடக்கிய துன்பத்தையும் துயரத்தையும் அவர் முன்னறிந்தார். ஆகவே அவர் படைத்த எல்லாவற்றுக்கும் அவரே பொறுப்பாளி. உலகிலுள்ள துன்பத்துக்குக் காரணம் தீவினையாகும் என்று விவாதிப்பது பயனற்றது.... மனிதனின் வருந்தக்கூடிய தீவினைகளைக் கடவுள் முன்னரே அறிந்திருந்தால், அவனைப் படைக்க நினைத்த தருணத்திலிருந்து அவரே (கடவுள்) அதன் விளைவுகளுக்குப் பொறுப்பாளியாவார்'' என்கிறர் ரஸ்ஸல் பிரபு.

டெனிசன் பிரபு, தமது முதுமையில் இயற்றிய "நம்பிக் கையிழத்தல்" என்னும் கவிதையில் ஏசாயாத் தீர்க்கதரி சியின் புத்தகத்தில் கூறப்படுவதுபோல "நான் சமாதா னத்தை உண்டுபண்ணித் தீவினையைப் படைக்கிறேன்" (ஏசாயா XIV: 7) என்று கூறி கடவுளைப் பின்வருமாறு துணிவுடன் தாக்குகிறார்: "எம்மை இவ்வளவு நன்றாகச் சேவித்த அந்த எல்லையில்லா அன்பை நான் என்னவென்று அழைப்பது, என்றும் நீடிக்கும் நரகத்தையமைத்த எல்லை யில்லாத கொடுமை என்றோ — எம்மைப் படைத்து, எம்மை முன்னறிந்து, முன் எமக்குத் தீர்ப்பளித்து தனக்கு உரிமையானவற்றைத் தன் இஷ்டப்படி செய்பவனைப் பார்க்கிலும், எம் புலம்பலைக் கேட்டறியா எம் இறந்த ஈவிரக்கமற்ற தாய் பெரியவளே."

"எல்லா மனிதரும் பாவிகள், ஆதாமின் தீவினையின் முக்கியமானவற்றையுடையவர் என்ற சித்தாந்தம், நீதிக் கும், கருணைக்கும், அன்பிற்கும் ஒரு காவலாகும்."

தன் சொந்த உருவிலேதான், கடவுள் மனிதனை உரு வாக்கினார் என்று சில முதிய எழுத்தாளர்கள் அதிகார பூர்வமாக தெரிவித்தனர். அதற்கு மாறாக சில நவயுக சிந்தனையாளர், மனிதன் கடவுளை தன் சொந்த உருவிலே உருவாக்கினான் எனக் கூறுகின்றனர். நாகரீக வளர்ச்சி யோடு மனிதனின் கடவுள் பற்றிய கருத்து மேலும், பண்பட்டுள்ளது.

ஆயினும் இப்படிப்பட்ட ஒரு உருவை (கடவுளை) உலகினுள்ளோ அல்லது உலகிற்கு வெளியிலோ இருப்ப தாக எண்ணிப்பார்ப்பது முடியாத காரியமாகும்.

மனிதருள் காணப்படும் இவ்வேறுபாட்டுக்கு வம்சா வழியும் சூழ்நிலையும் காரணமாகுமா? விஞ்ஞானிகளினால் காரணிகள் விளக்கப்படும். இரசாயன — பௌதீக தோற் றப்பாடுகள் மானிடவர்க்கத்தில் காணப்படும் நுண்ணிய

வேறுபாடுகளை விளக்கப் போதுமானதன்று என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆயினும் ஒரே வம்சாவழி, ஒரே வளர்ப்புரிமை, ஒரே மாதிரியான உடலமைப்பு இவற்றைப் பெற்ற இரட்டையர் பெரும்பாலும் முற்றிலும் வேறுபட்ட மனப்பாங்கையும் நடத்தையையும் அறிவாற்றலையும் கொண்டவராயிருப்பதேன்?

இப்பெரிய வேறுபாடுகளை வம்சாவழியின் மூலமாக மட்டும் விளக்கமுடியாது. திட்டமாகக் கூறினால், வம்சாவழி வேறுபாடுகளைவிட, ஒத்த பண்புகளையே, நம்பக்கூடிய வகையில் விளக்குகிறது. பெற்றோரிடமிருந்து பெறப்படும், ஒரு அங்குலத்தின் 30 மில்லியனின் ஒரு பகுதியளவு அகலமுள்ள, மிக நுண்ணிய இரசாயன—பௌதிகக் கரு, மனிதனின் ஒரு பகுதியான உடல் அமைப்பின் அடிப்படையை மாத்திரமே விளக்குகின்றது.

மிகச் சிக்கலானதும் நுட்பமானதுமான மன அறிவாற்றல், ஒழுக்கவேறுபாடுகள் என்பனவற்றைப் பொறுத்தவரையில் நம் அறிவு மேலும் விருத்தியடைய வேண்டும். மதிப்புமிகுந்த மூதாதையரை நெடுங்காலமாகக் கொண்ட ஒரு மரபில் ஒரு குற்றவாளி பிறப்பதையும், ஒரு இழிவான குடும்பத்தில் ஒரு ஞானி பிறப்பதையும் குழந்தைப் பருவத்தில் அருந்திறன் பெற்றவர், சிறப்புத்திறன் வாய்ந்தவர், மாபெரும் சமயத் தலைவர் முதலியோரின் தோன்றலையும் பற்றி மரபுரிமைத் தத்துவம் ஒரு திருப்திகரமான விளக்கத்தை தரமுடிவதில்லை. பௌத்தத்தின்படி இம்மாறுபாட்டுக்கு மரபுரிமை, சூழ்நிலை, இயற்கை, வளர்ப்பு, முதலியவை மட்டுமல்லாமல் எமது சொந்த கன்மமும் காரணமாகும். அதாவது, எம்முடைய சொந்த இறந்தகால, நிகழ்கால வினைகளின் விளைவாகும்—எமது செய்கைகளுக்கும் சந்தோஷத்திற்கும் துயரத்திற்கும் நாமே பொறுப்புடையவர். எம்முடைய நாகத்தை நாமே அமைக்கிறோம். எமது மோட்சங்களை நாமே உருவாக்கி

ரோம். நாமே எமது விதியின் சிற்பிகள். சுருக்கமாகச் சொன்னால், நாமே நமது கன்மம்.

ஒரு சமயம் சுபன் என்ற ஒரு இளைஞன் புத்தரை அணுகி "ஏன், எதற்காத மனிதரிடையே உயர்வு,தாழ்வு என்ற பேதமிருக்கின்றன? மனித குலத்திடையே குறுகிய வாழ்வுடையவரையும், நீண்ட வாழ்வுடையவரையும், நோயாளிகளையும், பலசாலிகளையும், அழகானவர்களையும், அழகற்றவர்களையும், சக்தி வாய்ந்தவர்களையும், சக்தி இல்லாதவரையும், ஏழையையும், செல்வந்தரையும், உயர்ந்த பிறப்புடையோரையும், தாழ்ந்த பிறப்புடையோரையும், அறிவாளிகளையும் முட்டாள்களையும் நாம் காண்கிறோம்" எனக் கூறினான். இதைச் செவிமடுத்த புத்தர் ஒவ்வொரு உயிருக்கும் அதனதன் கன்மம் பிறப்புரிமையாகவும், காரணமாகவும் உறவாகவும், அடைக்கலமாகவும் உள்ளது. உயர்ந்தது, தாழ்ந்தது என்று உயிரினங்களை வேறுபடுத்துவதும் கன்மமே" என்று சுருக்கமாக விடையளித்தார்.

அதன்பின் வினைப்பயன் விதிப்படி அவ்வேறுபாடுகளின் காரணத்தை விளக்கினார்.

ஆகவே பௌத்த நிலையிலிருந்து பார்த்தால், எமது மனம், அறிவாற்றல், ஒழுக்கம், உணர்வின் வேறுபாடு முதலியவை எல்லாம் எம்முடைய இறந்த கால, நிகழ் கால செய்கைகளினதும் மனப்போக்கினதும் விளைவுகளாகும்.

கன்மம், செயல் என்று பொதுவாக அர்த்தப்படும். ஆனால் அதன் ஆழ்ந்த கருத்தில் தகுதியானதும் தகுதியற்றதுமான விருப்பச் செயலை (குசல—அகுசல சேதனா) குறிக்கும். கன்மம் நல்லதையும் கெட்டதையும் உள்ளடக்கியது. நல்லது நல்லதை தோற்றுவிக்கும். கெட்டது கெட்டதைத் தோற்றுவிக்கும். இனம் இனத்தை விரும்பும். இதுவே கன்மத்தின் விதியாகும்.

சில மேலைநாட்டவர் கன்மாவைச் செயலின் செல்வாக்கு எனப் பெயரிட விரும்புகின்றனர்.

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்; நாம் விதைத்ததை எங்காவது, எப்படியாவது அறுப்போம். ஒரு வகையில் நாம் முன்னிருந்த நிலையின் விளைவாகிறோம். சில வேளையில் இப்போதிருக்கும் நிலையின் விளைவாக இனிமேல் இருப்போம். இன்னொருவகையில் இன்று தீயவனாக இருப்பவன் நாளை ஞானியாக மாறலாம்.

இம்மாறுபாட்டுக்குக் கன்மமே காரணம் என்று பௌத்தம் கொள்கிறது. எல்லாம் கன்மத்தால் விளைபவை என வலியுறுத்தவில்லை.

எல்லாம் கன்மத்தின் காரணமாக நடைபெற்றால், ஒருவனது கன்மம் கெட்டதாக இருந்தால் அவன் என்றும் கெட்டவனாகவே இருக்கவேண்டும். ஒருவனின் வியாதியை கன்மம் குணப்படுத்த முடியுமானால் அவன் வைத்தியனை நாடவேண்டிய அவசியமில்லை. பௌத்தத்தின்படி உடலுக்குரிய ஆட்சியிலும் மனதுக்குரிய ஆட்சியிலும் 5 செய்முறைகள் (நியாமங்கள்) இருக்கின்றன.

1. கன்மம் நியாமம்—செயலும் விளைவும் என்ற நிரனிறை; நல்ல செயல்கள் நன்மையை விளைவிக்கும். தீச்செயல்கள் தீமையை விளைவிக்கும்.

2. உத்துநியாம—பௌதிக (அசேதன) செய்முறை. உ-ம் காற்று, மழை முதலிய பருவகாலத் தோற்றப்பாடுகள்.

3. பீஜநியாம—முளை அல்லது விதைகள் (பௌதிக சேதன). உ-ம்: அரிசி விதையிலிருந்து அரிசியின் உற்பத்தி, கரும்பிலிருக்கும் இனிப்புத் தன்மை முதலியன... கலங்கள் பிறப்புரிமை அலகு என்பனவற்றின் விஞ்ஞானக்கொள்கையையும், இரட்டைக் குழந்தைகளின் ஒத்த உடற்பண்பையும் இச்செயல் முறையின் கீழ் சேர்க்கலாம்.

4. சித்தநியாம—மனம் அல்லது உளவியல் பற்றிய செய்முறை உ-ம் விழிர்ப்புணர்ச்சியின் செய்முறை (சித்தவித்தி) மனவலிமை முதலியன.

5. தம்ம நியாயம் — மாதிரிச் சட்டச் செய்முறையும், போதிசத்துவரின் வருகை குறித்து அவரது இறுதிப் பிறப்பில் நிகழும் தோற்றப்பாடுகள்; புவியீர்ப்பு முதலியன.

தம் முன்னேயே விதிகளான, எல்லாம் தழுவும் இவ் ஐந்து செய்முறைகளினுல் மனம், உடல்பற்றிய எல்லாத் தோற்றப்பாடுகளையும் விளக்கமுடியும்.

ஆகவே, கன்மம், இவ்வுலகில் நிலவும் ஐந்து செய்முறைகளில் ஒன்று மட்டுமே. தானே ஒரு விதியாயமைந்த கன்மம், விதிகளை உருவாக்கும் ஒருவரைக் கொள்ளத் தேவையில்லை. சாதாரண இயற்கை விதிகளான புவியீர்ப்பு முதலியவற்றுக்கு, ஒரு விதியமைப்பாளன் தேவையில்லை. இவற்றிற்குப் புறம்பான ஆட்சி செலுத்தும் தனிப்பட்ட ஏதுக்களின் குறுக்கீடின்றி, தமது சுயமண்டலத்திலேயே செயற்படமுடியும்.

உதாரணமாக, நெருப்பு எரியவேண்டும் என்று யாரும் ஆணையிடவில்லை. நீர் அதனுடைய நீர்மட்ட அளவை அடைய வேண்டுமென யாரும் கட்டளையிடவில்லை. நீரின் அமைப்பு $H_2O$ ஆகவும், அதன் தன்மை குளிர்மையாகவும் இருக்கவேண்டுமென ஒரு விஞ்ஞானியும் உத்தரவிடவில்லை. இவையெல்லாம் அவற்றின் இயற்கைத் தன்மைகளாகும்; கன்மம் நாம் கதியற்று அடங்கவேண்டிய ஒரு மர்மமான, புலப்படாத சத்தியினுல் எம்மேற் சுமத்தப்பட்ட விதியல்ல. ஒருவனது சொந்தச்செயலே அவன் மீது தாக்கமுறும். எனவே ஒருவன் தன் கன்மாவின் போக்கை ஓரளவுக்கு மாற்றக் கூடியதாயுள்ளது. அதை எவ்வளவுக்கு மாற்றலாம் என்பது அவரவரிலேயே தங்கியுள்ளது.

கன்மம் என்ற பிரச்சினையைப் பற்றிய உரையாடலின் போது தண்டனை, வெகுமதி போன்ற சொற்றொடர்களை உபயோகிக்கக் கூடாது. ஏனெனில், தண்டனைகளையும், வெகுமதிகளையும் அளிக்கும் ஒரு எல்லாம் வல்ல இறைவனைப் பௌத்தமதம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே ஒருவனின் நல்ல, தீய செயல்களின் இயற்கை விளைவே அவனநுபவிக்கும் மகிழ்ச்சியும் துயரமும் என்று பௌத்தர் நம்புகின்றனர். கன்மம் தொடரத்தக்கதும் பழிவாங்கத் தக்கதுமான தன்மைகள் இரண்டையும் உடையது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

கன்மத்தோடு ஒன்றியிருக்கும் உள்ளாற்றல், தகுந்த விளைவை உண்டாக்குவதேயாகும். காரணம் காரியத்தை ஏற்படுத்தும்; காரியம் காரணத்தை விளக்கும். விதை பழத்தைக் கொடுக்கும்; பழம் விதையை விளக்குகிறது. ஏனெனில், பழமும் விதையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அதுபோலவே கன்மமும் அதன் விளைவும் ஒன்றோடொன்று தொடர்புடையன. "காரியம் ஏற்கனவே காரணத்தில் மலர்கிறது".

கன்ம சித்தாந்தத்தைத் தீர்க்கமாக நம்பும் ஒரு பௌத்தன், தன்னை மீட்டுக்கொள்ள இன்னொன்றை வழிபடுவதில்லை. மாறாக, அது தனிப்பட்ட பொறுப்பைப் போதிப்பதால், தனது சுத்திக்குத் தன்னையே முழுக்க முழுக்க நம்புகின்றான்.

அவனுக்கு ஆறுதல், ஆர்வம், தன்னம்பிக்கை, நீதியான துணிவு முதலியவற்றைத் தருவது இந்த 'கன்ம சித்தாந்தமே'. 'எது அவனுடைய முயற்சியை உறுதிப்படுத்துகின்றதோ, அதுவே அவனது உற்சாகத்தையும் தூண்டுகிறது.' என்ற கன்ம நம்பிக்கையே ஒரு பௌத்தனைக் கனிவான, சகிப்புத்தன்மை மிகுந்த, தன்னலமற்ற மனிதனுக்குகிறது. இவ் வலுவான நம்பிக்கையே அவனைத் தீமையானவற்றிலிருந்து விலகவும், நன்மையைச் செய்யவும் தூண்டுகிறது. மேலும் தண்டனை பற்றிய பயமும்,

வெகுமதி கிடைக்கும் என்ற சபலமும் இல்லாமல் நல்ல வனுக இருக்கவும், நல்லதைச் செய்யவும் ஆர்வமளிக்கின் றது.

இக் கன்மச் சித்தாந்தமே, துன்பம் பற்றிய பிரச் சினையையும், மற்றச் சமயங்களில் கூறப்படும் விதி பற் றிய மர்மத்தையும், அதற்கும மேலாக மனித குலத்தின் சமத்துவமின்மையையும் விளக்கக் கூடியதாக உள்ளது.

கன்மமும் மறுபிறப்பும் தாமே விளங்கும் தன்மை யுடையவை, என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

---

அத்தியாயம் 7

# மறுபிறப்பு

கன்மவிசை இருக்கும்வரை மறுபிறப்பும் இருக்கும். ஏனெனில் கண்ணுக்குப் புலப்படாத இந்த விசையின் காணக்கூடிய விளக்கமே உயிர்கள் ஆகும். மரணம் என் பது இந்தத் தற்காலிக தோற்றப்பாட்டின் தற்காலிக முடிவே. அது உயிர் உள்ளன எனப்படுவனவற்றின் முழு அழிவன்று. சடப்பொருளின் வாழ்க்கை முடிவடைந்தா லும் அதை இதுவரை செயல்பட வைத்த கன்மவிசை அழிக்கப்படுவதில்லை. நிலையற்ற ஊனுடம்பின் சிதைவி னல் சிறிதும் கலைக்கப்படாதிருக்கும் இந்தக் கன்மவிசை இப் பிறப்பின் சாகும் தறுவாயில் நினைக்கும் நினைவு இன்னொரு பிறப்பின் புதிய விழிப்புணர்ச்சிக்கு அடிகோ லுகிறது.

அறியாமையிலும் இச்சையிலும் வேரூன்றிய கன் மமே மறுபிறப்பைத் தோற்றுவிக்கிறது. முற்பிறப்பின் கன்மம் இப்பிறப்பை வரையறுக்கும். இப்பிறப்பின் கன் மம் முற்பிறப்பின் கன்மத்தோடு சேர்ந்து மறுபிறப்பை நிர்ணயிக்கும். நிகழ்காலம், இறந்த காலத்தின் குழந்தை; அது மீண்டும் வருங்காலத்தின் தாயாகும்.

EVELYN RUTNAM INSTI. U.
46
REFERENCE
LIBRARY
JAFFNA



இறந்த கால, நிகழ் கால, எதிர்கால வாழ்வுகள் உண்டு என்று நாம் கருதினல், அப்போ, "உயிரின் மூலமுதல் உற்பத்தி எது" என்ற, மர்மமெனக் கருதப்படும் பிரச்சினை எம்மிடம் தோன்றும். உயிருக்கு ஒரு ஆரம்பம் உண்டு அல்லது அதற்கு ஆரம்பமில்லை என்று இருக்க வேண்டும்.

இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சாரார், எல்லாம் வல்லவராக அல்லது ஒரு சக்தியாகக் கடவுள் என்பவரை முதற்காரணராகக் கொள்கின்றனர்.

இன்னொரு சாரார், முதற்காரணம் என்ற ஒன்றை ஏற்கமறுக்கின்றனர். ஏனெனில் காரியம் என்றும் காரணமாகவும், காரணம் காரியமாகவும் மாறுவதைப் பொது அநுபவத்தால் அறியலாம். காரண காரியம் என்ற வட்டத்தில் ஒரு முதற் காரணத்தைத் தேடுவது என்பதை நினைக்கவும் முடியாது. முதற் சாராரின்படி உயிருக்கு ஒரு ஆரம்பம் இருந்திருக்கின்றது. மற்றச் சாராரின்படி உயிருக்கு ஒரு ஆரம்பமில்லை.

விஞ்ஞான ரீதியாக, நாங்கள், எமது பெற்ருேரிடமிருந்து பெறப்பட்ட விந்துவினதும் முட்டையினதும் நேரடி விளைவுகள். அதன்படி, உயிர் உயிருக்கு முன்னுண்டு. முதலுருவின் மூலத்தைப் பற்றி விஞ்ஞானிகள் தமது அறியாமையை ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

பௌத்தத்தின்படி, நாம் செய்கைகளின் வார்ப்படத்திலிருந்து (கன்மயோனி) பிறக்கிறேம். பெற்ருேர்கள் ஒரு நுண்ணிய கலத்தை மட்டுமே அளிக்கின்றனர். அதனுல் உயிரை உயிர் முந்துகிறது. கருக்கொள்ளலின் போது முற்பிறப்பின் கன்மமே கருவை உயிர்ப்பூட்டி, அதற்கு ஆரம்ப விழிப்புணர்ச்சியை அளிக்கின்றது. முற்பிறப்பிலிருந்து பெறப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத இந்தக் கர்மச் சக்திதான் ஏற்கனவே உள்ள உடல் சார்ந்த தோற்றப்பாடில் மனதுக்குரிய தோற்றப்பாட்டையும் உருவாக்குகிறது. இம் மூன்று தோற்றப்பாடுகளின் அமைப்பே மனிதன்.

ஒரு உயிர் இங்கு பிறப்பதற்கு, வேறெங்கோ இன்னொரு உயிர் இறக்கவேண்டும். இப்பிறப்பில் உள — உடல் தோற்றப்பாடுகளின் அல்லது பஞ்சஸ்கந்தகளின் எழுச்சியைத் திட்டமாகக் குறிக்கும் ஒரு உயிரின் பிறப்பு, முற்பிறப்பிலுள்ள ஒரு உயிரின் இறப்போடு ஒத்துள்ளது. அதாவது ஒரு இடத்தின் சூரியோதயம் இன்னொரு இடத்தின் சூரிய அஸ்தமனத்தைக் குறிப்பது போன்றது. இப்புதிரான கூற்றை நன்ருகப் புரிந்துகொள்ள, வாழ்வை ஒரு நேர்கோடாகவன்றி ஒரு வளைகோடாக எடுத்துக் கொள்ளல் வேண்டும். பிறப்பும் இறப்பும் ஒரு செய்முறையின் இரு தோற்றங்கள் மட்டுமே. பிறப்பு இறப்பை முந்துகிறது. திரும்ப இறப்பு பிறப்பை முந்துகிறது. மாறிமாறித் தொடர்ந்து நிகழும் பிறப்பு இறப்புக்கள் [illegible] மனித வாழ்வின் சுழற்சியோடு இணைந்து சம்சாரம் எனப் படுகின்றது. இது திரும்பத் திரும்ப நிகழுகின்ற அலைந்து திரிதலை உருவாக்குகின்றது.

INSTITUTE REFERENCE LIBRARY 46. JAFFNA

உயிரின் முழுமுதல் மூலம் எது? "சம்சாரம் தெரிந்துகொள்ளக் கூடிய முடிவை உடையதல்ல. அறியாமையால் தடுக்கப்பட்டு வேட்கையால் விலங்கிடப்பட்டு அலைந்து திரியும் உயிர்களுக்கு இந்த முழு முதல் ஆரம்பத்தை உணர்ந்தறிய முடியாது" என்று புத்ததேவர் கூறினர். அறியாமை, வேட்கை என்ற சேற்று நீரினல் ஊட்டப்படும் வரை, உயிர் என்ற ஓடை முடிவற்று ஓடிக்கொண்டிருக்கும். இவையிரண்டும் களைந்தெறியப் பட்டால் தான், ஒருவன் விரும்பும்போது அந்த ஓடையானது பிரவாகிக்காது நிற்கும்; அப்பொழுது புத்தர்களைப் போலவும், அரகத்துக்களைப் போலவும் மறு பிறப்பு வராதொழியும். அறியாமையினலும் வேட்கையினலும் பீடிக்கப்படாத உயிர்களையுடைய ஒரு நிலையை நாம் உணர்ந்தறிய முடியாததால், உயிரோடையின் தொடக்க நிலையைத் தீர்மானிக்கமுடியாது.

உயிர் வர்க்கத்தின் உயிரோடையின் ஆரம்பத்தைப் பற்றி மட்டுமே புத்ததேவர் குறிப்பிட்டார். உலகின்

ஆரம்பத்தையும் கூர்ப்பையும் பற்றி ஆழ்ந்தாராய்வது விஞ்ஞானிகளின் பொறுப்பாகும். மனிதனைக் குழப்பும் ஒழுக்கத் தத்துவச் சிக்கல்களையெல்லாம் விளக்கப் புத்த தேவர் முற்படவில்லை. மெய்யறிவு, அறிவூட்டல் முதலியவற்றை நாடாத கோட்பாடுகளோடும், ஆராய்ச்சிகளோடும் அவர் சம்பந்தப்படவில்லை. அவர் தம்மத்தைப் பின்பற்றுவோரிடமிருந்து குருட்டு நம்பிக்கையை ஒரு முதற் காரணமாகக் காத்திருக்கவில்லை. அவர் துன்பத்தையும் அதன் அழிவையும் பற்றியே முக்கிய அக்கறை கொண்டார். இந்த ஒரு குறிப்பிட்ட, செயல்படத் தக்க நோக்கத்தைத் தவிர்ந்த மற்றைய தேவையில்லா விஷயங்கள் அவரால் புறக்கணிக்கப்படுகின்றன.

முற்பிறப்பு என்று ஒன்று உள்ளது என்பதை நாம் எப்படி நம்புவது?

மறுபிறப்புக்கு ஆதரவாகப் பௌத்தர், புத்தரையே ஒரு முக்கிய சாட்சியாகக் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் அவர் இறந்த கால, எதிர் கால வாழ்வுகளைப் பற்றிப் புரிந்துகொள்ளக்கூடிய அறிவை அபிவிருத்தி செய்திருந்தார். அவருடைய போதனைகளைப் பின்பற்றி அவரது சீடர்களும் இவ்வறிவை அபிவிருத்தி செய்து, தம்முடைய முந்திய வாழ்வைப்பற்றி நன்முக அறிந்துகொண்டனர்.

புத்தரின் வருகைக்கு முன், சில இந்திய இருடிகள் கூட, உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட சேய்மையில் நடப்பவற்றைக் காண்டல், கேட்டல் மற்றையோரின் மனதை அறிதல், முற்பிறப்பறிதல் போன்றவற்றில் புகழ்பெற்றிருந்தார்கள். தொடர்பு விதிகளுக்கிணங்கத் தமது முற்பிறப்புப் பற்றிய நினைவுகளை எளிதிற் தாமாகவே அபிவிருத்தி செய்து, அதன் சிறு சிறு பகுதிகளை நினைவுகூர்கின்றனர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மிக அருமை; மதிக்கத்தக்க, நற்சான்று அளிக்கப்பட்ட இந் நிகழ்ச்சிகளிற் சில, மறுபிறப்புப் பற்றிய கருத்தைத் தெளிவாக விளக்க உதவியுள்ளன. சில நம்பகமான நவீன மனோதத்

துவ நிபுணர்களின் அநுபவங்களும், மாறி மாறி வரும் பலவிதமான இயல்புடைய மனிதர்களின் அநுபவங்களும் இவ்வாறே உதவியுள்ளன.

சிலர் மானத வசீகர (hypnotic) நிலையில் தமது முற்பிறப்பின் அநுபவங்களை விவரிக்கின்றனர். சிலர் மற்றவர்களின் கடந்தகால வாழ்வை நினைவுற்றுக் கூறி வியாதிகளைக்கூடக் குணப்படுத்துகின்றனர்.

மறுபிறப்பினால் மாத்திரம் விளக்கக்கூடிய சில புதுமையான அநுபவங்களை நாம் சிலவேளைகளில் அடைகிறோம்.

எத்தனை தடவை நாம் முன்பின் கண்டு அறியாத சிலரை சந்திக்கும்போது நாம் அவர்களை நன்கறிந்துள்ளோம் என்ற உணர்வு எமக்கு ஏற்பட்டுள்ளது? எத்தனை தடவை, முன்பு பார்த்திராத இடங்களைக் காணும்போது இவ்விடங்கள் எமக்கு முன்பு நன்கு பழக்கப்பட்டவை என்ற நினைவு மனதில் எழுகின்றது?

"முந்திய தொடர்புகள் அல்லது இப்போதைய நற்பயன் மூலமாகவே தான், பழைய அன்பு மீண்டும் நீரில் தாமரை போன்று மேலெழுகின்றது," என்று புத்ததேவர் எமக்குக் கூறுகிறார். நம்பகமான நவீன மனோதத்தவ நிபுணர்களின் அநுபவங்கள், பேய், பிசாசு உருப்பற்றிய தோற்றப்பாடு, ஆவித் தொடர்புகள், புதுமையான மாறிவரும் பலவித மனிதப் பண்புகள் முதலியவை மறுபிறப்புப் பற்றிய பிரச்சினைகளை விளக்க உதவுகின்றன.

இவ்வுலகத்தில், புத்தர் போன்ற பரிபூரண மகான்களும், உயர்ந்த பண்புடையோர்களும் வருகை தந்துள்ளனர். இவர்கள் திடீரென்று தோன்றியவர்களா? இவர்கள் ஒரே ஒரு வாழ்வின் விளைவுகளா?

புத்தகோசர், பாணினி, காளிதாசர், ஹோமர், பிளேட்டோ ஆகிய உயர்ந்த பண்புடையோரையும், பல்

கால், மோட்சாட், போநோவன், ரபெயீல், ராமானுஜன் போன்ற சிறுவயதில் அருந்திறனடைந்த மேதாவிகளையும், ஷேக்ஸ்பியர் போன்ற தனித்திறமையாளரையும் நாம் எப்படிக் காரணம் கூறி விளக்குவது?

பாரம்பரியத்தை மாத்திரம் இவர்களுக்குக் காரணமாகக் கூறமுடியாது. "அப்படியானல் அவர்களது முன்னோர்கள் அதை வெளிப்படுத்தியிருப்பர்; அவர்களை விடச் சிறப்பாக அவரது வழித்தோன்றல் அதைச் செயலில் விளக்கஞ் செய்து காட்டியிருக்கும்".

உம்மையில் மேன்மையான வாழ்வுகளையும் இம் மாதிரியான அநுபவங்களையும் பெருமல், இம்மையில் இவ்வளவு உயர்ந்தவராகத் திகழ முடியுமா? அக் குறிப்பிட்ட பெற்ரோரிடம் பிறப்பதும், அச் சாதகமான சூழ்நிலையில் அமர்த்தப்படுவதும் தற்செயலானவையா?

நாம் இங்கு கழிப்பதற்குப் புண்ணியஞ் செய்த சில வருடங்கள் அல்லது மிகக் கூடிய நூறு வருடங்கள், ஈறில் காலத்துக்குப் போதாத ஒரு முன்னேற்பாடாக இருக்க வேண்டும்.

ஒருவன் நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் நம்பிக்கை கொண்டால் கடந்த காலத்தை நம்புவது நியாயமானதே. நிகழ்காலம் கடந்த காலத்தின் குழந்தையாகவும், எதிர்காலத்தின் பெற்ரோராகவும் உள்ளது.

நாம் கடந்த காலத்தில் வாழ்ந்திருந்தோம் என்று நம்புவதற்குக் காரணங்கள் இருந்தால், நாம் இவ்வாழ்வு முடிந்த பின்பும் தொடர்ந்து வாழ்ந்திருப்போம் என்று நம்பாமலிப்பதற்கு எவ்வித காரணமும் நிச்சயமாக இல்லை. "இவ்வுலகில் நல்லவன் அதிர்ஷ்டம் இல்லாதவனுயும், தீயவன் செல்வனுகவும் இருக்கின்ருர்களே" என்பது முற்பிறப்புக்கும் மறுபிறப்புக்கும் ஆதரவளிக்கும் ஒரு மிகச் சிறந்த காரணமாகும்.

மேலைத்தேய எழுத்தாளர் ஒருவர் "நாம் முற்பிறப்பைப் பற்றி நம்புகிறேமோ இல்லையோ, அது தான், ஏற்படும் அன்றாட வாழ்வின் உண்மைகளைப் பற்றிய மனித அறிவில் இடைவெளிகளை நிரப்பும் நியாயமான தற்கோள்களாகும். உலகம் முழுவதும் அவதானிக்கக் கூடியதாக நிலவியுள்ள நிலைபரங்கள், சுற்றாடல்கள், சூழல்கள் அனைத்திலும் உள்ள இரட்டையரில் காணப்படும் வேறுபாடுகளையும் ஷேக்ஸ்பியர் போன்று ஓரளவுக்கு மட்டான அநுபவமுள்ள மனிதர் வெவ்வேறுபட்ட மனித கதாபாத்திரங்களையும், முன்பின் கண்டறியாத காட்சிகளையும் வியக்கத்தக்க நுட்பமான வகையில் சித்தரிக்க முடிவதையும் ஒரு சிறப்புத் திறமையாளரின் அநுபவங்களைவிட அவரது படைப்புக்கள் உன்னதமாக உயர்ந்தெழுவதையும். குழந்தைகளின் வயதுக்கு மீறிய அறிவையும், உலகமெங்கும் காணப்படக்கூடிய மனம், ஒழுக்கம், மூளை, உடலமைப்பு, நிலைமை, சூழ்நிலைகள், சுற்றுப்புறங்கள் உடம்பு முதலியவற்றின் பெரிய வேறுபாடுகளையும் முற்பிறப்பு, கன்மம், என்ற இரண்டும் மாத்திரமே விளக்கக் கூடியதாக உள்ளன" என எழுதியுள்ளார்.

பரிசோதனையின் மூலம் மறுபிறப்புப் பற்றிய சித்தாந்தத்தை நிரூபிக்கவோ தவறென்று காண்பிக்கவோ முடியாதென்பதைக் கூறவேண்டும். ஆனால் அது சாட்சி மூலமாக நிரூபிக்கக்கூடிய ஒரு உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

நான்கு உயரிய உண்மைகளைப் பற்றிய அறியாமையே (அவிஜ்ஜை) கன்மத்தின் காரணம் என்று புத்ததேவர் கூறியுள்ளார். எனவே அறியாமையே பிறப்புக்கும் இறப்புக்கும் காரணம். அது அறிவுடைமையாக மாறுதலடைவதே பிறப்பு இறப்பின் முடிவாகும்.

இந்த வகுப்பு நுண்ணாராய்ச்சியின் முடிவுகள் பிரதீத்திய சமுப்பாதம் என்ற பகுதியில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

அத்தியாயம் 8

# பிரதீத்திய சமுப்பாதம்

"பிரதீத்திய" என்ருல் காரணமாக அல்லது சார்பாக என்றும், "சமுப்பாதம்" என்ருல் காரியம் அல்லது தொடக்கம் அல்லது தொடக்கம் உண்டாகுதல் என்றும் பொருள்படும். ஆகவே பிரதீத்திய சமுப்பாதம் என்ருல், 'இதன் சார்பாக இது உண்டாகிறது' என்று அர்த்தப்படும்.

பிரதீத்திய சமுப்பாதம், பிறப்பு இறப்புக்களைப் பற்றிய ஒரு உரையாடலே தவிர, உயிரின் முழுமுதல் மூலத்தை விளக்கும் ஒரு கோட்பாடல்ல, என்பதை மனத்திலிருத்த வேண்டும். அது மறுபிறப்பினதும், துன்பத்தினதும் வினைகளைப்பற்றி ஆராய்கிறதேயன்றித் தொடக்கத்திலிருந்து உலகின் கூர்ப்பைச் சித்தரிக்கச் சிறிதும் முயலவில்லை.

அவித்யை—அறியாமை அல்லது பேதமைதான் வாழ்வு எனும் சக்கரத்தின் முதல் அலகு அல்லது வினையாக உள்ளது. அது எல்லா வாய்மைகளையும், விளக்கங்களையும் மறைக்கிறது.

நால்வகை உயரிய வாய்மைகளைப் பற்றிய அறியாமையின் சார்பாக நல்வினை தீவினையாகிய செய்கைகள் (சம்சாரா) எழுகின்றன. இச் செய்கைகள் நல்லவையாகவும் தீயவையாகவும் இருக்கலாம். அறியாமையில் வேரூன்றிய இச் செய்கைகளின் வினைப்பயன்கள், உயிரின் தொடர்ச்சியை இன்னும் நீடிக்கும். ஆயினும் வாழ்வின் குறைபாடுகளைக் களைந்தெறிய நல்ல செய்கைகள் அவசியம்.

செய்கைகளில் இருந்து மறுபிறப்பு உணர்ச்சி (விஞ்ஞான) எழுகிறது. இது கடந்த காலத்தை நிகழ் காலத்

தோடு தொடர்பு படுத்துகிறது. மறுபிறப்பு உணர்ச்சியோடு உடன் தோன்றுவன மனமும் உடம்பும் (அருவும் உருவும்; நாம+ரூபம்). ஆறு புலன்களும் (சலாயதன) அருவுருவின் தவிர்க்க முடியாத விளைவுகளாகும்.

இவ் ஆறு புலன்களிலுமிருந்து ஊறு (ஸ்பரிசம்—பாஸ்ஸ) ஏற்படுகின்றது. ஊறு உணர்ச்சியை (உணர்வு—வேதனு) ஏற்படுத்தும். உணர்ச்சி, அரு, உரு, ஆறு புலன்கள், நுகர்வு என்ற ஐந்தும் முந்திய வினைகளின் பயனாகவிருப்பதால் அவை வாழ்வின் செயலற்ற பகுதி எனப்படும். உணர்ச்சியிலிருந்து பெறப்படுவது வேட்கை அல்லது அவா (தன்கா). வேட்கை, பற்றை (உபாதான) விளைவிக்கும். பற்று கன்மத் தொகுதியைத் (பவ) தோற்றுவிக்கும். கன்மம் அடுத்த பிறப்பை (ஜாதி) நிர்ணயிக்கும். பிறப்பு, மூப்பையும் மரணத்தையும் பிறப்பிக்கும் தவிர்க்க முடியாத காரணம் (ஜரா மரண).

வினை காரணமாகப் பயன் ஏற்பட்டால், வினை முடிவுற்றால் பயனும் முடிவுற வேண்டும். பிரதித்திய சமுப்பாதத்தின் நேர்மாறான முறை இவ் விடயத்தை இன்னும் தெளிவாக்கும்

மூப்பும் மரணமும் ஒரு மன - உடல் சார்ந்த ஒரு உயிரினத்துக்கு நடக்கக் கூடியவை. அப்படிப்பட்ட உயிரினம் பிறக்க வேண்டும். ஆகவே பிறப்பை அது முன்னறிவிக்கின்றது. ஆனால் பிறப்பு கன்மத்தின் விளைவாக உள்ளது. கன்மம் பற்றினாலும் பற்று வேட்கையினாலும் ஏற்படுகின்றது. இப்படியான வேட்கை, உணர்ச்சி நிலைத்திருக்கும் இடத்தில் தான் காணப்படும். உணர்ச்சி பொருள்களுக்கும் புலன்களுக்கும் இடையிலுள்ள ஊறு என்பதின் விளைவாகும். ஆகவே அது புலனறியும் உறுப்புக்களை முன்னறிவிக்கின்றது. ஆனால் இவ்வுறுப்புக்கள் மனமும் மெய்யுமின்றி நிலைத்திருக்க முடியாது. எங்கே மனம் என்று ஒன்றுள்ளதோ, அங்கே விழிப்புணர்ச்சி இருக்கும். இது முற்பிறப்பின் நன்மை, தீமை முதலிய

வற்றின் விளைவாகும். பொருள்களின் உண்மை நிலை பற்றிய அறியாமை காரணமாகவே, நன்மையும் தீமையும் ஈட்டப்படுகின்றன. பிரதீத்திய சமுப்பாதத்தின் முழுச் சூத்திரத்தையும் பின்வருமாறு சுருக்கமாகக் குறிக்கலாம்.

அறியாமையின் சார்பாக

| | | | |
|---|---|---|---|
| | | செய்கைகள்(நல்ல,தீய)எழுகின்றன. | |
| செய்கைகளின் | ,, | உணர்ச்சி எழுகின்றது. (மறுபிறப்பு [ணர்ச்சி) | |
| உணர்ச்சியின் | ,, | அருவுரு எழுகின்றது. | |
| அருவுரு | ,, | ஆறு புலன்கள் எழுகின்றன. | |
| ஆறு புலன்களின் | ,, | ஊறு | எழுகின்றது |
| ஊறின் | ,, | உணர்ச்சி | ,, |
| உணர்ச்சியின் | ,, | வேட்கை | ,, |
| வேட்கையின் | ,, | பற்று | ,, |
| பற்றின் | ,, | கன்மா (செய்வினை) | ,, |
| கன்மத்தின் | ,, | மறு பிறப்பு | ,, |
| பிறப்பின் | ,, | அழிவு, மரணம், கவலை, அரற்றல், பிணி, அவலம், முதலியன எழுகின்றன. | |

இப்படியாகத்தான் துன்பத்தின் முழுத்தொகுதியும் எழுகின்றது. இப்பன்னிரண்டில் முதல் இரண்டும் சென்ற காலத்துக்கும், நடு எட்டும் நிகழ் காலத்துக்கும் இறுதி இரண்டும் எதிர் காலத்துக்கும் உரியன.

அறியாமையின் முழு முடிவு செய்கைகளின் முழு முடிவைக் கொண்டு வரும்.

| | | | |
|---|---|---|---|
| செய்கைகளின் | முடிவு | உணர்ச்சியின் முடிவாகும். | |
| உணர்ச்சியின் | ,, | மனமெய்யின் | ,, |
| மனமெய்யின் | ,, | ஆறு புலன்களின் | ,, |
| ஆறு புலன்களின் | ,, | ஊறின் | ,, |
| ஊறின் | ,, | உணர்ச்சியின் | ,, |

| | | | |
|---|---|---|---|
| உணர்ச்சியின் | முடிவு | வேட்கையின் முடிவாகும் | |
| வேட்கையின் | ,, | பற்றின் | ,, |
| பற்றின் | ,, | செயலின் | ,, |
| செயலின் | ,, | மறு பிறப்பின் | ,, |
| மறுபிறப்பின் | ,, | அழிவு, மரணம், கவலை, அரற்றல், பிணி, அவலம் முதலியவற்றின் முடிவாகும். | |

இப்படியாகத்தான் துன்பத்தின் முழுத்தொகுதியும் முடிவடைகிறது. இக்காரண காரியத் தொடர்பு முடிவில்லாமல் தொடரும் இச்செய்முறையின் ஆரம்பத்தை தீர்மானிக்க முடியாது, ஏனெனில், வாழ்வின் சுழற்சி எப்போது அறியாமையால் சூழப்பட்டது என்பதை தீர்மானிக்க முடியாது; ஆனால் இவ்வறியாமை அறிவாக மாறும்போதும், வாழ்வின் சுழற்சி நிர்வாண — தாதுவை நோக்கி திசை திருப்பப்படும் போதும், சம்சாரம் என்ற உயிரின் தொடர்ச்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்.

அத்தியாயம் 9

## அநாத்ம வாதம்

புத்த சித்தாந்தமான மறுபிறப்பை, உயிரின் கூடு விட்டுக் கூடுபாயும் தன்மையைக் குறிக்கும் அவதார தத்துவத்திலிருந்து, வேறுபடுத்த வேண்டும். ஒரு பரமாத்மாவிலிருந்து வெளிப்படும் அல்லது கடவுளால் படைக்கப்பட்ட மாற்றமில்லா அல்லது என்றும் நிலைக்கும் ஆத்துமாவின் உண்மையைப் பௌத்தம் ஏற்க மறுக்கிறது.

மனிதனின் சாரம் எனப்படும் அழிவில்லா ஆன்மா என்றும் நிலைத்திருந்தால், அதில் எவ்வித எழுச்சியோ, வீழ்ச்சியோ ஏற்படாது. அதோடு "ஏன் வித்தியாசமான ஆன்மாக்கள் வெவ்வேருகத் தொடக்கத்தில் அமைக்கப்பட்டன என்பதையும் புரிந்துகொள்ள முடியவில்லை"

நிலையான சொர்க்கத்தில் முடிவில்லாப் பேரின்பமும் நிலையான நரகத்தில் முடிவில்லாத் துன்புறுத்தலும் உள்ளன என்பதை நிரூபிக்க ஒரு அழிவில்லா ஆன்மா அத்தியாவசியப்படுகின்றது. அல்லாவிட்டால் நரகத்தில் தண்டிக்கப்படுவதும் சொர்க்கத்தில் வெகுமதியளிக்கப்படுவதும் ஏதுவாக இருக்க முடியும்?

பெட்ரண்ட் ரஸ்ஸல், "ஆன்மா உடம்பு என்ற பழைய வேறுபாடு இன்று ஏறக்குறைய மறைந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் பொருள் என்பது அதன் திண்மத்தையும், மனம் என்பது அதன் ஆன்மீக ஆற்றலையும் இழந்துவிட்டன. மனோதத்துவம் இப்போதுதான் விஞ்ஞான ரீதியாக ஆராயப்படுகின்றது. இன்றைய மனோதத்துவத்தின் நிலைமையில் அழியாத் தன்மை பற்றிய நம்பிக்கைக்கு விஞ்ஞானத்திடமிருந்து எவ்வித ஆதரவையும் பெறமுடியாது" என்று எழுதுகிருர்.

நான் நேற்றிருந்த மனிதனுகவே இன்றுமிருக்கிறேன், என்பதற்கு ஒரு காரணம் கட்டாயமிருக்கிறது. நான் ஒரே சமயத்தில் ஒருவனைப் பார்த்து அவன் பேசுவதைக் கேட்கும்போது அந்தப் பார்க்கும் 'நான்' கேட்கும் 'நான்' என்ற இரண்டும் ஒருவரே என்று சொல்லுவதில் அர்த்தமிருக்கிறது" என்று ரஸ்ஸல் சொல்லுவதைப் பௌத்தர்களும் ஆமோதிக்கின்றனர்.

சமீபகாலம் வரை விஞ்ஞானிகள் அணுக்கள், பிரிக்கவும் அழிக்கவும் முடியாதவை என நம்பினர். "போது

மான காரணங்களினுல் பௌதீகவியல் நிபுணர், அணுவை விளைவுகளின் தொடர்ச்சியென குறிப்பிட்டனர். அதே மாதிரியான தகுந்த காரணங்களுக்கு மனே தத்துவ நிபுணர் மனம் என்பது தொடர்ச்சியான ஒரு பொருளின் அடையாளமல்ல. அது குறிப்பிட்ட நெருங்கிய உறவுகளினுல் கட்டுண்ட நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியெனக் கண்டனர். ஆகவே அழியாத தன்மை பற்றிய கேள்வி, ஒரு உயிருள்ள உடம்பின் இந்த நெருங்கிய உறவு நிகழ்ச்சிகளுக்கும், இறந்தபின் அவ்வுடம்போடு சம்பந்தப்பட்ட மற்ற நிகழ்ச்சிகளுக்கும் இடையே உள்ளதா? என மாறியுள்ளது.

'வாழ்க்கையின் அர்த்தம்'' என்ற நூலில் சி. ஈ. எம். ஜோட் ''சடப்பொருள் என்பது எம் கண்முன்னுலேயே சிதைவுற்று விட்டது.'' என்று எழுதியுள்ளார். ''அது இனிமேல் திண்மமாகவும், நீடித்திருப்பதாகவும் காணப்படவில்லை. அது இனிமேல் கட்டாய காரண விதிகளினுல் தீர்மானிக்கப்படுவதில்லை; எல்லாவற்றையும் விட முக்கியமான அது இனிமேல் அறியப்படவில்லை''.

''அணு எனப்படுவது 'பிரிக்கக்கூடியதாகவும், அழிக்கக்கூடியதாகவும்' காணப்படுகின்றது. அணுக்களை உருவாக்கும் புரோத்தனும் இலத்திரனும் சந்தித்து, ஒன்றையொன்று அழிக்கக்கூடிய அதேநேரத்தில், அவற்றின் நிலைத்திருக்கும் தன்மை நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளில்லா ஒரு அலையாக உள்ளது. ஒரு பொருளிலும் பார்க்க உருவம், இடம் என்பதைப் பொறுத்தவரை செய்முறையில் தொடர்ச்சியான மாற்றங்களையும் உடையது''. (Meaning of Life – C. E. M. Joad)

அணு என்பது ஒரு மறைபொருளான கற்பனை எனக் காண்பித்த பெர்க்லி மேற்றிராணியார் ஆன்மா என்ற ஒரு ஆன்மீகப் பொருள் இருக்கிறதெனக் கருதினுர்.

றியும், விழிப்புணர்ச்சிக்குள் நோக்கி, அங்கு விரைந்தோடும் மன நிலைகள் மட்டுமே உள்ளன என்பதை உணர்ந்தறிந்து நிலையான 'தான்' என்ற ஆணவம் என்று ஒன்றில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

'நாம்' எம்மை ஒவ்வொரு கணமும் உணர்ந்து கொண்டிருக்கிறோம் எனவும், அதன் காரணமாக அதன் இருப்பையும், அதன் இருப்பின் தொடர்ச்சியையும் உணர்ந்து, அதன் பரிபூரணமான அடையாளத்தையும், அதன் எளிமையையும் திட்டவட்டமாக அறிகிறோம், எனவும் சில தத்துவ ஞானிகள் எண்ணுகிறார்கள். என்னைப் பொறுத்த மட்டில் நான் 'என்னை' மிக நெருங்கி ஆராயும் போது, வெப்பம் அல்லது குளுமை, ஒளி அல்லது நிழல், அன்பு அல்லது வெறுப்பு, வேதனை அல்லது இன்பம் என்ற ஏதாவது ஒரு குறிப்பிட்ட உணர்வையே பெறுகிறேன். நான் 'என்னை' என்றும் பற்றிப் பிடித்ததில்லை. உணர்வைத் தவிர வேறெதையும் கவனிக்கமுடிவதில்லை. என்னை முற்றாக இராத ஒன்றாக ஆக்குவதற்கு வேறு என்ன தேவைப்படுகிறது என்பதை நான் நினைத்துப்பார்க்க முடிவதில்லை.'' என்கிறார் அவர்.

பெர்க்ஸன் ''எல்லா உணர்ச்சிகளும் காலமுடையவை. உணர்வுள்ள நிலை என்பது மாற்றமில்லாமல் நீடிக்கும் ஒரு நிலையல்ல. அது ஒரு முடிவற்ற மாற்றம்; மாற்றம் முடிவுறும்போது, அதுவும் முடிவுறும்; அது மாற்றமன்றி வேறெதுவுமில்லை.'' என்று கூறியுள்ளார்.

இப் பிரச்சனையைப்பற்றிப் பேராசிரியர் ஜேம்ஸ் ''ஆத்துமம் பற்றிய தத்துவம் உண்மையான, நிரூபிக்கப்பட்ட உணர்வு அநுபவங்களை விளக்குவதற்கு, தேவைக்கு மேற்பட்டது. திட்டமான விஞ்ஞான காரணங்களுக்காக அதற்கு இணக்கம் தெரிவிக்க யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.'' என்று கூறுகிறார்; இச் சுவாரசியமான புத்தகத்தின் முடிவில் ''நாம் அடைந்திருக்கும் முன்னேற்பாடான முடிவு என்னவென்றால், சிந்தனைகளே சிந்திப்பவர்கள்''.

புகழ்பெற்ற மனோதத்துவ நிபுணரான வாட்சன் "அன்றுட வாழ்க்கையில் வரும் மற்றச் செயல்களைப் போலன்றி, இன்று வரை, ஒருவராவது ஆத்துமாவைத் தொடரவோ, அதை பரிசோதனைக் குழாயில் பார்க்கவோ, அதனோடு தொடர்பு கொள்ளவோ இல்லை. ஆயினும் அதைப்பற்றி ஐயமுறுவது ஒருவனை சமய விரோதியாக்கி, ஒரு காலத்தில் அவனது உயிருக்குச் சேதமாகவும் இருந்திருக்கும். இக்காலத்திலும் உயர் பதவி வகிக்கும் ஒருவன் கூட இதற்கெதிராகக் கேள்வி கேட்க முற்படமாட்டான் என்று கூறுகிருர்.

இவ்வுண்மைகளை 2500 ஆண்டுகளுக்கு முன்பே புத்தர் முன்னறிந்திருந்தார்.

பௌத்தத்தின்படி, மனம் ஒரு நிலையற்ற விரைந்தோடும், மனநிலைகளின் ஒரு சிக்கலான சேர்வையாகும். உணர்ச்சியின் ஒரு அலகு மூன்று நிலைகளை உடையது. அவையாவன, எழுச்சி அல்லது தோன்றல் (உப்பாத) நிலையமைதி அல்லது வளர்ச்சி (தித்தி) முடிவுறல் அல்லது கலைதல் (பங்க). ஒரு சிந்தனைக் கணத்தின் முடிவுறும் போது உடனே அடுத்த சிந்தனையின் தோன்றல் நிலை உருவாகும். என்றும் மாறிக்கொண்டிருக்கும் இந்த வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையற்ற சிந்தனையும் மறையும் போது அதன் முழு விசையையும், மனப்பதிவுகளையும் தொடர்ந்து வரும் சிந்தனைகளுக்குக் கொடுக்கின்றது.

ஒவ்வொரு புதிய உணர்ச்சியும் அதன் முன்னோடிகளின் உள்ளாற்றலையும் இன்னும் எதையோ அதிகமாகவும் கொண்டிருக்கும். ஆகவே உணர்ச்சி ஒரு அருவியைப் போல் தொடர்ந்து தங்கு தடையின்றி ஓடிக்கொண்டிருக்கும். அடுத்து வரும் சிந்தனை கணம் முந்தியதை முற்றிலும் ஒத்திருக்கவோ அல்லது முற்றிலும் வேறுபட்டதாகவோ இருப்பதில்லை. இது கன்மச் சத்தியின் தொடர்ச்சியைப் போன்றது. ஆகவே இங்கு ஒரே மாதிரியான செய்முறை உள்ளதே தவிர ஒரேமாதிரியான உருவம் இல்லை.

ஒவ்வொரு கணமும் பிறப்பும் இறப்பும் நடைபெறு கின்றன. ஒரு சிந்தனைக் கணத்தின் எழுச்சி இன்னொன் றின் முடிவைக் குறிக்கும். ஒரு கணத்தின் முடிவு இன் னொன்றின் எழுச்சியைக் குறிக்கும். ஒரு வாழ்வின் காலத் தில் ஆத்துமாவின்றித் தற்காலிக மறுபிறப்பு நடை பெறுகிறது,

ஒரு புகையிரதத்தை அல்லது சங்கிலியைப் போன்று உணர்ச்சிகள் துண்டு துண்டானவற்றின் தொகுப்பு என்று நினைக்கக்கூடாது. அதற்கு மாறாக அது புலன்கள் எனும் கிளையாறுகளினால் ஊட்டப்பட்டு, அது சேர்த்துக் கொண்டு வரும் சிந்தனைகளை வெளியுலகிற்குப் பகிர்ந்து கொடுக்கும், ஆறாக உள்ளது. அந்த ஆற்றின் உற்பத்தி பிறப்பாகவும், அதன் முடிவு இறப்பாகவும் உள்ளன. அதன் ஓடும் விசையை, கிட்டத்தட்டக் கூட நிர்ணயிக்க முடியாத அளவுக்கு அதிவேகமானது. ஒரு சிந்தனை அசை வின் நிலைக்கும் காலம், ஒரு மின்னொளி நிலைத்திருக்கும் காலத்தை விட நூறுகோடி மடங்கு சிறியது.

சிலர் நம்புவதுபோல் உணர்ச்சிகள் ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்கி வருவதல்லாமல், உணர்ச்சியின் மன நிலைகள் ஒன்றை ஒன்று அடுத்தடுத்து நிகழ்கின்றன. ஒரு முறை நிகழும் நிலை மீண்டும் நிகழ்வதில்லை. மேலும் அது முந்தியதை ஒத்துமிருப்பதில்லை. ஆனால் மானுட ராகிய நாம் மாயை எனும் வலையினால் மூடப்பட்டு' இத் தொடர்ச்சி நிலையானது என்றும், தொடர்ந்து ஒரு மாற்றமில்லாத ஆத்துமாவையும், அதாவது அத்தா எனப்படும் செய்பவரையும் செய்கைகளின் கொள்கலத் தையும் இந்த மாற்றமுள்ள உணர்ச்சிகளை புகுத்துகிறோம். மானிட விழித்திரையினால் பார்க்க முடியாததும், பண் பாடெய்தாதவர்களினால் எண்ணிப் பார்க்க முடியாதது மான, மின்னொளியின் பகுப்படைந்து, ஒன்றையொன்று அடுத்தடுத்து அதிவிரைவாகத் தொடரும் தீப்பொறிக ளைப் போன்றது உயிர் வண்டிச் சக்கரத்தின் ஒரு முனை

மட்டுமே தரையில் பதிந்திருப்பதைப் போல உயிர் ஒரு சிந்தனைக் கணத்துக்கு மாத்திரம்தான் சீவிக்கும். எப்போதும் அது நிகழ்காலத்திலிருந்து இறந்தகாலத்தை நோக்கி மீட்கமுடியாதபடி வழுக்கிச் சென்றுகொண்டிருக்கும். இந்த நிகழ்காலத்துச் சிந்தனைக்கணம்தான் நாம் எப்படி உருவாகுவோம் என்பதை நிர்ணயிக்கின்றது.

"ஆத்துமா என்று ஒன்று இல்லையாயின் மீண்டும் மீண்டும் பிறப்பது என்ன?" என ஒருவன் கேட்கலாம்.

மீண்டும் பிறப்பதற்கு எதுவுமில்லை. உயிர் முடிவடையும்போது கன்மச் சத்தி இன்னொரு விதமாக மீண்டும் உருவெடுக்கிறது. பிக்கு சிலாச்சாரர் கூறுவதுபோல இந்நிலையற்ற கன்மவிசையானது மறைமுகமாகச் சென்று தனக்கேற்ற குழுவில் காட்சி கொடுக்கும்.

அது இங்கே ஒரு சிறிய பூச்சியாக அல்லது புழுவாகவும், அங்கே ஒரு கண்ணைப் பறிக்கும் தேவனாகவும் காணப்படுகின்றது. அதன், ஒரு உருவான வாழ்வு முடிவடைந்ததும் அது வெறுமனே விலகிச் சென்று தகுந்த சூழ்நிலையில் இன்னொரு உருவில் தன்னை வெளிப்படுத்துகிறது. பிறப்பு, மன-உடல் சார்ந்த தோற்றப்பாட்டின் எழுச்சியாகும். மரணம், ஒரு தற்காலிக தோற்றப்பாட்டின் தற்காலிக முடிவாகும்.

ஒரு உடல்நிலையின் எழுச்சி அதன் முந்திய நிலையின் காரணமாக விருப்பதைப்போல், மன-உடல் சார்ந்த தோற்றப்பாடும் அதன் முந்திய அமைப்பினால் வரையறுக்கப்படுகிறது. ஒரு வாழ்வின் சீவியகாலம் ஒரு சிந்தனைக் கணத்திலிருந்து இன்னொன்றுக்கு ஒரு நிலையான பொருளின்றிச் செல்ல முடிவதைப்போல, பல வரிசையான உயிர்ச்செய்முறைகள், ஒரு அழிவில்லா ஆத்துமாவின் துணையில்லாமலே ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலையை எடுக்க வல்லன.

செயலறிவு சார்ந்த வகையில் பௌத்தம் தனி மனிதப் பண்பின் இருப்பை முற்றாக மறுக்கவில்லை. அது ஒரு முடிவான வகையில் இல்லை என்பதைக் காட்டவே பௌத்தம் முயலுகின்றது. தனிப்பட்டவனுக்குத் தரப் படும் பௌத்த சித்தாந்தச் சொல் 'சந்தான' என்பதாகும்; அது தொடர்ச்சி அல்லது சுழற்சி என்று அர்த்தப்படும். அது மன-உடல் சார்ந்த மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொருவரினதும் கன்மவிசை இம் மூலக்கூறுகளை ஒன்று சேர்க்கின்றது. கன்மத்தினால் கட்டுப்படுத்தப்பட்டது, தற்பிறப்புக்கு மட்டும் உட்பட்டது. ஆனால் ஆரம்பமில்லா முற்காலத்தில் தொடக்கத்தை உடையதும், பின் எதிர்காலத்தில் தொடரும் இந்தத் தங்குதடையின்றிய மன-உடல் சார்ந்த தோற்றப்பாட்டைத் தான் பௌத்தம் மற்றச்சமயங்களின் அறிவில்லா ஆத்துமாவுக்குப் பிரதியீடாகத் தருகிறது.

---

அத்தியாயம் 10

# நிர்வாணம்

இறப்பு, பிறப்பு என்ற செய்முறையைக் கொண்ட இவ்வாழ்வுச் சுழற்சி, பௌத்தர்களின் இறுதிக் குறிக்கோளான நிர்வாண தாதுவுக்கு உருமாற்றமடைந்தாலொழிய, முடிவின்றி நடந்து கொண்டேயிருக்கும்.

பாளிச் சொல்லான நிப்பான, 'நி', 'பான' என்ற இரு உறுப்புக்கள் கொண்டது. 'நி' என்றால் இல்லை என்றும் 'பான' என்றால் வேட்கை என்றும் அர்த்தப்படும். ஆகவே, நிப்பாணம், (நிப்பான) வேட்கையினின்று விலகுதலைக்குறிக்கும். இன்னும் நேரடியாகக் கூறவேண்டுமானால், நிர்வாணம் பற்றற்ற தன்மையைக் குறிக்கும்.

வேட்கை, வெறுப்பு, அறியாமை முதலியவற்றின் அழிவு என்றும் அதற்கு வரைவிலக்கணம் கூறலாம். "உலகம் முழுவதும் நெருப்புச் சுவாலை பற்றிக்கொண்டது" என்றார் புத்தர். அது எந்தத் தீயினல் மூண்டது? வேட்கை, வெறுப்பினலும், அறியாமை என்னும் நெருப்பினலும், பிறப்பு ,மூப்பு, மரணம், பிணி, அரற்றல், அவலம் என்ற தீயினலும் மூட்டப்பட்டு எரிகிறது.

எமது உலக அறிவுக்கு எட்டாததனல், நிர்வாணத்தை ஒன்றுமில்லாத அல்லது அழிவான ஒரு நிலை என்று விளங்கிக் கொள்ளக்கூடாது. குருடனுக்கு வெளிச்சம் தெரியவில்லை என்பதற்காக இவ்வுலகில் வெளிச்சம் இல்லை எனக் கூறமுடியுமா? அதாவது மீன் கடலாமையுடன் விவாதித்துத் தரை என்று, ஒன்றில்லை எனப் பெருமிதத்தோடு ஒரு முடிவுக்கு வந்த கதையைப் போன்றது.

பௌத்தத்தின் நிர்வாணம் வெறுமையான அல்லது அழிவான ஒரு நிலையே அன்று. ஆனல் அதை வார்த்தைகளினல் தெளிவாக விவரிக்கவும் முடியாது. "பிறவாத, மூலமற்ற, படைக்கப்படாத, உருவாகாத தம்மமே நிர்வாணம். ஆகவே அது நிலையானது (துவம்); விரும்பத்தக்கது (சுபம்); மகிழ்ச்சியானது (சுகம்).

துன்பத்தைத் தவிர, நிர்வாணத்தில், நிலையாக்கப்படுவதோ, அழிக்கப்படுவதோ இல்லை.

சில நூல்களின்படி நிர்வாணம் சோபாதிசேசம், அநுபாதிசேசம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இருவிதமான நிர்வாணத்தைக் குறிக்கவில்லை. ஒரே நிர்வாணத்துக்கு, அது மரணத்திற்கு முன் அல்லது மரணத்தின் பின் அநுபவிக்கப்பட்டதா என்பதைக்கொண்டே இப்பெயர்கள் தரப்பட்டன.

நிர்வாணம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைக்கப்படவில்லை; மேன்மையடைந்த அகங்காரமான உயிர்கள்

வாழும் ஒரு சொர்க்கமுமல்ல. அது இவ்வுடம்பிலேயே தங்கியுள்ள ஒரு நிலையாகும். எல்லோருக்கும் எட்டக்கூடிய தம்மப்பேறு அது. நிர்வாணம் இப்பிறவியிலே அடையக்கூடிய, இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட தன்மையாகும். மரணத்தின்பின் மட்டுமே இந்நிலையை அடைய முடியுமெனப் பௌத்தம் கூறவில்லை. இதில்தான் பௌத்தத்துக்கும் மற்றைய சமயங்களுக்கும் இடையேயுள்ள முக்கிய வித்தியாசம் இருக்கிறது. இறப்புக்குப் பின் அல்லது மறுமையில் ஒன்றிய பின்னே நிலையான சொர்க்கத்தை அடையமுடியும் எனப் பிற (அன்னிய) சமயங்கள் கூறுகின்றன. இம்மையில் நிர்வாணத்தை அடைந்தால் அது சோபாதிசேச நிர்வாண-தாது எனப்படும். உடம்பு சிதைவுற்றபின், உடம்பற்ற நிலையில் ஒரு அரகத்து பரிநிர்வாணத்தை அடையும்போது அநுபாதிசேச நிர்வாண-தாது எனப்படும்.

சேர் எட்வின் ஆர்னல்டின்படி,

> "நிர்வாணம் என்பது முடிவைக் குறிக்கும் என்று யாராவது கூறினால் அவருக்கு அது பொய்யெனக் கூறு".
>
> "நிர்வாணம் என்பது வாழ்வைக் குறிக்கும் என்று யாராவது கூறினால் அவருக்கு அது பிழையெனக் கூறு".

மறைபொருளாராய்ச்சி ரீதியாக நிர்வாணம், துன்பத்திலிருந்து நிவாரணம் பெறுவதைக் குறிக்கும். மனோதத்துவ ரீதியாக அது வேட்கை, வெறுப்பு, அறியாமை என்பவற்றின் அழிவைக் குறிக்கும்.

இறப்புக்குப்பின் அரகத்து நிலைத்திருப்பாரா, இல்லையா? "பஞ்சஸ்கந்தங்களாகிய ஐந்தொகுதிகளிலிருந்து விடுபட்ட அரகத்து அளவிடமுடியாத கடலின் ஆழத்தையுடையவர். அவர் மீண்டும் பிறந்தார் எனக் கூறுவது

தருந்ததாக இராது. ஆனால் அவர் மீண்டும் பிறந்தார் அல்லது பிறக்கவில்லை என்று சொல்வதும் தப்பாகும்'', எனப் புத்தர் பதிலளிக்கிறார்.

மறுபிறப்பை நிர்ணயிக்கும் எல்லா வேட்கைகளும் களையப்பட்டபடியினால், அரகத்துத் திரும்பவும் பிறக்கிறார் என்று சொல்லமுடியாது; அழிவுறுவதற்கு ஒன்றும் இல்லாதபடியால், அவர் அழிவுற்றார் என்று சொல்லவும் முடியாது.

ராபர்ட் ஒபன் ஹேமர் என்ற விஞ்ஞானி, "மின்னணு அதே மாதிரியாக இருக்குமா எனக் கேட்டால் இல்லையென்றே கூறவேண்டும்; காலத்தோடு மின்னணுவின் நிலையும் மாறுமா எனக் கேட்டால் அதற்கும் இல்லையென்றே கூறவேண்டும். மின்னணு தரித்து இருக்குமா எனக் கேட்டால் இல்லையென்றே கூறவேண்டும். மின்னணு அசைந்து கொண்டிருக்கிறதா எனக் கேட்டால் அதற்கும் இல்லையென்றே கூறவேண்டும்'', என்று எழுதியுள்ளார்.

மனிதனின் மரணத்திற்குப்பின் வாழ்வு பற்றிக் கேட்கப்பட்டபோது இப்படிப்பட்ட பதில்களையே புத்தர் கொடுத்தார்.[1]

ஆனால் இப்பதில்கள் 17 ம், 18 ம் நூற்றாண்டின் விஞ்ஞான முறைக்குப் பழக்கப்பட்டவையாக இருக்கவில்லை.

---

[1] இந்த இடத்தில் ஆசிரியர் ஒரு அரகத்தின் மரணத்தின் பின் இருக்கும் நிலையையே கருதுகிறார்.

அத்தியாயம் 11

# நிர்வாணத்தை அடையும் வழி

*நிர்வாணத்தை அடைவது எப்படி?*

நற்காட்சி (சம்மா-திட்டி), நல்லூற்றம் (சம்மா-சங்கப்ப), நல்வாய்மை (சம்மா-வாசா), நற்செய்கை (சம்மா-கம்மதா), நல்வாழ்க்கை (சம்மா-சஜீவ), நன்முயற்சி (சம்மா-வாயாம), நற்கடைப்பிடி (சமமா-சதி), நல்லுளத்தோர் தலைப்பாடு (சம்மா-சமாதி), என்ற அட்டாங்க மார்க்கத்தின் வழி ஒழுகுவதன் மூலமே அதனை அடையலாம்.

1. நற்காட்சி - பௌத்தத்தின் அடிப்படைக் கருத்தான இது, நால்வகை வாய்மைகளைப் பற்றிய அறிவென விளக்கப்படுகிறது, நற்காட்சியென்றால் வெளித்தோற்றத்தை விட்டுப் பொருள்களின் உண்மைத்தன்மையை அறிவதேயாகும். அதோடு முதலாவதாக ஒருவன் தன்னைத் தானே சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும், என்பதையும் குறிக்கிறது. ரோகித சுத்ர கூறுவதுபோல், உணர்ச்சியுடைய ஆறடி நீளமான இவ்வுடம்பில்தான் நால்வகை வாய்மைகளும் தங்கியுள்ளன. இந்தச் சிறந்த எண்சாண் உடம்பில் முதலிலும் கடையிலும் நற்காட்சி இருக்கிறது. இவ்வுயரிய பாதையின் நடைமுறையில் குறைந்த அளவிலாவது நற்காட்சி இருக்கவேண்டும். ஏனென்ல் அதுதான் இவ்வுயரிய பாதையின் மற்ற ஏழுவகை அம்சங்களுக்கும் சரியான குறிக்கோளையும், சரியான வழியையும் காட்டுகிறது. இவ்வுயரிய பாதையைக் கைக்கொள்ளும்போது முடிவில் இந்த நற்காட்சி பரிபூரணமான, நுண்புல விவேகமாக (விப்பஸ்ஸனா-பஞ்ஞா), முதிர்ச்சி பெறும். இவ்விவேகம் பரிபூரண நிலைக்கு நேரடியாகக் கொண்டு செல்லும்.

2. நல்லூற்றம் — நற்காட்சி நல்லூற்றத்துக்கு வழி வகுக்கும். உயரிய பாதையின் இரண்டாவது கூறு நல்லூற்றம். இது தீய எண்ணங்களை விலக்கவும் நல்லெண்ணங்களை வளர்க்கவும் உதவுகிறது. இச் சரியான சிந்தனை மூவகைப்படும். அவையாவன,

(i) நேக்கம்ம — பற்று, சுயநலம், வாஞ்சை முதலியவற்றுக்கு எதிரான உலக இன்பங்களைத் துறத்தல் அல்லது தன்னலமற்ற தன்மை.

(ii) அவ்யாபாத — பகை, தீய எண்ணம், வெறுப்பு முதலியவற்றுக்கு எதிரான அன்பு, இரக்கம், நல்லெண்ணம் அல்லது அறம் முதலியன.

(iii) அவிஹிம்ஸா — கொடுமை, உணர்ச்சியற்ற தன்மை முதலியவற்றுக்கு எதிரான தீங்கு செய்யாமை அல்லது கருணை.

3. நல்வாய்மை — நல்லூற்றம் மூன்றுவது அம்சமான நல்வாய்மைக்கு வழிகாட்டும். இது பொய்ம்மை, அவதூறு, சுடுசொல், வீண்பேச்சு முதலியவற்றை விலக்குவதைக் குறிக்கும்.

4. நற்செய்கை — நான்காவது காரணியான நற்செய்கை, நல்வாய்மையைப் பின்தொடரும். இது கொலை, களவு, காமதுர்நடத்தை முதலியவற்றைத் தவிர்ப்பதைக் குறிக்கும்.

5. நல்வாழ்க்கை — தன்னுடைய மனம், வாக்கு, காயம் முதலியவற்றைத் தூய்மையாக்கிய ஒரு ஆத்மீக யாத்திரீகன் தன்னுடைய வாழ்க்கையைச் சாதாரண சீடர்களுக்குத் தடைசெய்யப்பட்ட ஐவகை வாணிகத்தைத் தவிர்ப்பதன் மூலம் தூய்மையாக்க முயற்சிக்கின்றான். இவ் ஐவகை வாணிகம் ஆவன:— ஆயுதம், மனிதர், இறைச்சிக்காக மிருகங்கள், போதை தரும் பானம், மருந்து, விஷம், முதலியவற்றில் வியாபாரம் செய்தல்,

பிக்குகளுக்குத் தகாத பிழைப்பு, கபட நடத்தை, துறவறத்துக்குரிய தேவைகளைத் தவருன வழிகளில் பெறுவது முதலியனவாகும்.

6. நன்முயற்சி — இது நால்வகைப்படும்.

(i) ஏற்கனவே எழுந்துள்ள தீமையைக் கைவிட முயற்சித்தல்.

(ii) இதுவரை எழாத தீமையைத் தடுக்க முயற்சித்தல்.

(iii) இதுவரை எழாத நன்மையை வளர்க்கும் முயற்சி.

(iv) ஏற்கனவே எழுந்துள்ள நன்மையை முன்னேற்றும் முயற்சி.

7. நற்கடைப்பிடி — இது உடல், உணர்வு, சிந்தனை, மனப் பொருள்கள் முதலியவற்றை இடைவிடாது கடைப்பிடித்தலைக் குறிக்கும்.

8. நல்லுளத்தோர் தலைப்பாடு — நன் முயற்சியும், நற்கடைப் பிடியும் நல்லுளத்தோர் தலைப்பாட்டுக்கு வழி காட்டும். இது மனதை ஒரு முகப்படுத்தி இறுதியில் ஞானத்தினுல் அல்லது தியானத்தினுல் கிரகிக்கும் அமைதியில் முடிவுபெறும்.

இவ்வுயரிய பாதையின் 8 அம்சங்களில் முதலிரண்டும் விவேகம் (பஞ்ஞா) என்ற தலைப்பின் கீழும், அடுத்த மூன்றும் ஒழுக்கம் (சீலம்) என்றதின் கீழும், கடைசி மூன்றும் ஒருமுகப்படுத்தல் (சமாதி) என்றதின் கீழும் இடம் பெறுகின்றன. ஆனுல் விருத்தியின் வரிசைக் கிரமப்படி பின்வருமாறு ஒழுங்குபடுத்தப்படும்.

| | |
|---|---|
| (i) ஒழுக்கம் (சீலம்) | நல்வாய்மை<br>நற்செய்கை<br>நல்வாழ்க்கை |

(ii) ஒருமுகப் படுத்தல் (சமாதி) — நன்முயற்சி / நற்கடைப்பிடி / நல்லுளத்தோர் தலைப்பாடு

(iii) ஞானம் (பஞ்ஞா) — நற்காட்சி / நல்லூற்றம்

நிர்வாணத்தையடையும் இப்பாதையில் ஒழுக்கமே முதற்படியாகும். எந்த உயிருள்ள பிராணியையும் மனிதன் கொல்லாமலும் வதைக்காமலும், தன் பாதத்தண்டை ஊர்ந்து செல்லும் சிறு பிராணிக்கும் தயவு தாட்சண்யம் காட்டவேண்டும். அவன் களவைத் தவிர்த்துத் தனது காரியங்களிலெல்லாம் நேர்மையுடன் ஈடுபடவேண்டும். மனிதனின் உயர்ந்த மனிதப்பண்பை இழிவுபடுத்தும் காமத் துர்நடத்தையிலிருந்து அவன் விலகி, தூயவனாக இருக்க வேண்டும். அவன் பொய்யினை நீக்கி வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். கவனமற்ற நடத்தையைத் தூண்டும் கேடு விளைவிக்கும் பானங்களைத் தவிர்த்து அவன் அடக்கமாகச் சாதுவாக விடாமுயற்சியுடையவனாக இருக்கவேண்டும். நிர்வாணத்தின் அடிச்சுவட்டிற் கால் வைத்தவனுக்கு இந்த ஆரம்பக் கொள்கைகள் மிக முக்கியமானவை. இவற்றை மீறுவது இப்பாதையில் தடைகளை இடுவதற்கு ஒப்பாகும். இக்கொள்கைகளை அனுசரித்தால் இலகுவாகவும் உறுதியாகவும் இப்பாதையில் முன்னேறலாம்.

தனது பேச்சையும் செய்கைகளையும் கட்டுப்படுத்தும் ஒரு ஆத்மீக யாத்திரிகன் அடுத்தபடியாகத் தனது புலன்களைக் கட்டுப்படுத்த முனையலாம். மட்டான பேச்சு, செய்கை முதலியவற்றோடும் கட்டுப்படுத்தப்பட்ட புலன்களோடும், மெதுவாக ஆனால், உறுதியாக முன்னேறுகின்ற அவனது கன்மவினை உலக இன்பங்களைக் கைவிட்டு, துறவறத்தை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தலாம். அப்போது அவனிடத்தில் இவ்வகையான எண்ணம் எழும்.

"குடும்ப வாழ்க்கை ஒரு சச்சரவுள்ள குகை,
தேவையும் சிரமமும் மிகுந்தது;
வீடுவாசலற்றோர் வாழும் வாழ்க்கை
திறந்த வானத்தைப்போன்று சுதந்திரம் மிகுந்தது".

ஒருவன் தனது குறிக்கோளையடைய ஒரு பிக்குவாகவோ அல்லது பிரம்மச்சாரியாகவோ இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒரு பௌத்தன் ஓர் அரகத்து ஆக முடியுமென்றாலும், பிக்குவானல் அவனது ஆன்மீக வளர்ச்சி துரிதமாகிறது. பரிசுத்த நிலையின் மூன்றாவது படியை அடைந்தபின்பு பிரம்மச்சரிய வாழ்வை மேற்கொள்ளுகிறான்.

முன்னேற்றமடையும் ஒரு யாத்திரீகன் நெறி என்ற தரையில் உறுதியாகக் காலூன்றியபின் மனதின் பண்பையும் கட்டுப்பாட்டையும் தரும் சமாதி என்ற உயர்வான பயிற்சியை மேற்கொள்கிறான். இப்பாதையின் இரண்டாவது கட்டம் இது.

சமாதி, மனதின் ஒரு நிலையான தன்மை எனப் பொருள்படும். அது, மற்றத் தேவையில்லா விஷயங்களை ஒதுக்கி ஒன்றிலேயே மனதை ஒருமுகப்படுத்துவதைக் குறிக்கும்.

தனிப்பட்டவர்களின் மனப்பாங்குக்கேற்ப அவர்கள் தியானிக்கும் விஷயம் வேறுபடுகின்றது. மிகச் சுலபமாக மனதின் ஒருநிலைத் தன்மையைப் பெறச் சுவாசித்தலின் மேல் தியானிப்பது, உதவுகிறது. அன்பு இரக்கம் போன்றவற்றின்மேல் தியானிப்பது, மன அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் துணைபுரிவதால் மிகுந்த நன்மையைத் தரும்.

அன்பும் இரக்கமும் (மெத்தா), கருணை (கருணா), பரிவான களிப்பு (முதித), அமைதி (உபேக்கா), ஆகிய நான்கு உயரிய பாவனைகளைப் பேணி வளர்ப்பது மெச்சத்தக்கது.

ஆழ்ந்த சிந்தனைக்குரிய விஷயத்தை நன்றாக ஆராய்ந்து பின் தனது மனதிற்கேற்ற ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டும். இப்படி ஒரு திருப்திகரமான முடிவுக்கு வந்ததன் பின் மனதை அதில் குவியச்செய்ய இடைவிடாது முயற்சிக்க வேண்டும். இம்முயற்சியை, இது காரணமாகவே மற்றச் சிந்தனைகளெல்லாம் ஒதுக்கப்பட்டு, அவன் தனது விஷயத்தில் ஒன்றி அதில் அக்கறை காட்டும்வரை கடைப்பிடிக்க வேண்டும். முன்னேற்றத்துக்குத் தடையாகவுள்ள புலன்-இச்சை, குரோதம், சோம்பல்-அசதி, அமைதியின்மை-விசனம், ஐயப்பாடு என்ற ஐந்தும் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இறுதியில் கழிபேருவகையான ஒருமுகப்படுதலையடைந்து, அவனது விவரிக்க முடியாத களிப்புக்கு, ஞானத்தினால் சூழப்பட்டு, ஒரு நிலையான மனதின் அமைதியையும், சாந்தத்தையும் அநுபவிக்கின்றான்.

இப் பரிபூரணமான ஒருமனப்படுத்தலை அடையும்போது ஐந்து அசாதாரண சக்திகளையும் (அபிஞ்ஞா) ஒருவன் பெறமுடியும். அவையாவன, திவ்ய கண் (திப்ப சக்கு), திவ்ய செவி (திப்ப சோத), முற்பிறப்பை நினைவு கூறல் (புபெணிவாசானு சததி-ஞானம்), சிந்தனை வாசிப்பு (பரசித்த-விஜாநன), வேறான மனோசத்திகள் (இத்திவிதா). பரிசுத்தமாவதற்கு இவை அத்தியாவசியம் என எவரும் எண்ணக்கூடாது.

மனம் இப்போது தூய்மையாக்கப்பட்டாலும், அவனுள் இச்சைகளுக்கு இடம் கொடுக்கும் தன்மை உறங்கிக் கொண்டிருக்கும் (விபஸ்ஸனா பஞ்ஞா). ஏனெனில் ஒருமுகப்படுத்தலினால் இச்சைகள் தற்காலிகமாக நித்திரையில் ஆழ்த்தப்பட்டுள்ளன. அவை எதிர்பாராத சந்தர்ப்பங்களில் வெளிப்படக்கூடும்.

கட்டுப்பாடு, ஒருமுகப்படுத்தல் என்ற இரண்டும், இப்பாதையிலுள்ள தடைகளை நீக்க உதவுகின்றன. ஆனால் நுண்புலன் (விபஸ்ஸனா-பஞ்ஞா) மட்டுமே பொருள்களின்

உண்மைநிலையை அறிய உதவும். இறுதியில் சமாதியினல் கட்டுப்படுத்தப்பட்ட இச்சைகளை முற்முக அழித்து, குறிக்கோளான நிர்வாணத்தையடைய வழிவகுக்கின்றது. இது நிர்வாணத்தையடையும் பாதையின் மூன்றுவதும் இறுதியுமான நிலையாகும்.

வாழ்வைப்பற்றிய சரியான படத்தைப் பெற, பளபளக்கப்பட்ட முகக் கண்ணடியை ஒத்திருக்கும் தனது ஒருமுகப்படுத்தப்பட்ட மனதைக் கொண்டு உலகைப் பார்க்கிமுன். எங்கு திரும்பினுலும் அவன் மூன்று இயல்புகளை வெட்ட வெளிச்சமாகக் காண்கிமுன். இம் மூன்று இயல்புகளாவன அனிச்ச (மாற்றம்), துக்க (துக்கம்). அனுத்மா (ஆத்துமமற்ற தன்மை) முதலியன. வாழ்வு இடைவிடாது மாறிக் கொண்டிருக்கிறதென்றும் எல்லா வரையறுக்கப்பட்ட பொருள்களும் நிலையற்றவை யென்றும் அவன் புரிந்துகொள்கிமுன். இம்மையிலோ அல்லது சொர்க்கத்திலோ அவன் உண்மையான இன்பத்தைக் காணமுடியவில்லை. ஏனெனில் ஒவ்வொரு இன்பமும் துன்பத்தின் முன்னேடியாக இருக்கிறது. ஆகவே நிலையற்ற தெல்லாம் துன்பமானவை; எங்கு மாற்றமும் துயரமும் மேலோங்கியுள்ளதோ அங்கு ஒரு நிலையான இறவாத ஆத்துமா இருக்கமுடியாது. ஆகவே இம் மூன்று இயல்புகளில் அவன் தனக்கேற்றதைத் தேர்ந்தெடுத்து, நுண்புலனைக் கவனமாக வளர்க்கிமுன். அதன் மூலமாக அவன் மூன்று விலங்குகள் எனப்படும் தன் மாயை (சக்காய தித்தி) ஐயம் (விசிகிச்சா) பிழையான சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் ஈடுபாடு (சீலப்பத்த பராமாச) முதலியவற்றை அழித்து, ஒரு சுபதினத்தில் முதன் முதலாக நிர்வாணப் பேற்றைப் பெறுவான்.

இக்கட்டத்தில் அவன் சோதாபன்ன (அருவியை அடைந்தவன்) - அதாவது நிர்வாணத்தை அடையும் அருவியை நுழைந்தவன் என அழைக்கப்படுகிமுன். எல்லா விலங்குகளையும் களைந்தெறியாதபடியால் அவன் கூடியது ஏழுமுறை பூமியில் மீண்டும் பிறப்பான்.

நிர்வாணத்தின் இக் கணநேரத் தோற்றத்தின் விளைவாகப் புதிய தைரியத்தை வரவழைத்துக் கொண்டு யாத்திரீகன் துரித முன்னேற்றமடைந்து ஆழ்ந்த நுண்புலனை வளர்த்து (சகதாகாமி) புலன்-இச்சை (காமராக) தீயஎண்ணம் (படிக்க) என்ற இன்னு மிரண்டு விலங்குகளைத் தளர்த்துவதால் ஒரு சாக்கதா காமி (ஒருமுறை திரும்புபவன்) ஆகிறான். அவன் அரகத் துத் தன்மையை அடையாவிட்டால் மீண்டும் ஒரு முறை தான் பூமியில் பிறப்பான் என்றதனாலேயே இவ்வாறு அழைக்கப்படுகின்றான்.

பரிசுத்தநிலையின் மூன்றாம் கட்டத்தில்தான் அனகாமி-ஒருபோதும் திரும்பிவராதவன்- தோன்றுகிறான். இப்போ அவன் முன் கூறப்பட்ட இரு விலங்குகளையும் முற்றாகத் தகர்க்கின்றான். அதன்பின் புலனுணர்ச்சி இன்பங்களின் மேல் அவனுக்கு நாட்டமில்லாதபடியால் மீண்டும் பூமிக் குத் திரும்புவதில்லை. மேலுலகங்களில் பிறப்பை எதிர் பார்ப்பதுமில்லை. இறப்புக்குப்பின் அவன் "தூய இருப் பிடங்கள்" (சுத்தா-வாச) என்ற சாதகமான பிரம்ம தலத் தில் மீண்டும் பிறந்து அரகத்து நிலையை அடையும்வரை இருப்பான்.

இப்போது இப்புனித யாத்திரீகன் தனது முயற்சி யின் எதிர்பாரா வெற்றியினால் உந்தப்பட்டுத் தனது கடைசி அடியை எடுத்து மற்ற விலங்குகளையும் தகர்த் தெறிய முற்படுகின்றான். உருவங்களின் ராச்சியம் (ரூப ராக) உருவமற்ற ராச்சியம் (அரூபராக) இறுமாப்பு (மான) அமைதியின்மை (உத்தச்ச), அறியாமை (அவிஜ்ஜா) என்பவையே இதில் எஞ்சிய விலங்குகளாகும். இவைகளை அழித்து அவன் ஒரு பரிபூரண ஞானி - ஒரு அரகத்து - ஒரு மேம்பட்டவன் - ஆக மாறுகிறான்.

நிறைவேற்ற வேண்டியவை யெல்லாம், நிறைவேற்றப் பட்டன என்பதை அவன் இப்போ உணர்கிறான். அதோடு துன்பம் என்ற பெரிய பாரம் குறைந்ததை

யும், எவ்விதமான பற்றுக்களும் முற்றாக அழிக்கப்பட்டதையும், நிர்வாணப் பாதையைக் கடந்து விட்டதையும் உணர்கிறான். இம் மேம்பட்டவன் தெய்வீகத்தையடைந்தும் உயர்ந்த நிலையில் உலகின் கிளர்ச்சியான இச்சை, தீமை முதலியவற்றிலிருந்து வெகு தூரம் விலகியும், நிர்வாணத்தின் அளப்பரிய பேருவகையை உணர்ந்தும், திகழ்கின்றான் அப்போது முந்திய அரகத்துக்களைப்போல் இவ் வெற்றிக் களியாடலை நினைவு கூருகிறான்.

"நல்லெண்ணம், விவேகம், ஒழுங்கு, பயிற்சிக்கப்பட்ட மனம் நன்னெறியை அடிப்படையாகக் கொண்ட உயர்நடத்தை இவைதாம் உயிர்களைப் பரிசுத்தமாக்குவனவே யன்றிச் செல்வமும் உயர் பதவியுமல்ல".

மேலைத்தேயக் கருத்தில் டி. எச். ஹக்ஸ்கி "பௌத்தம் கடவுள் இல்லாதது; மனிதனுக்கு ஆன்மா ஒன்றில்லை எனக் கூறுகிறது; இறவாத்தன்மை பற்றிய நம்பிக்கையைத் தவறு என்கிறது. வழிபாட்டுக்கும், தியாகத்துக்கும் எவ்வித பயனிறைவையும் மறுக்கிறது; கடைத்தேறலுக்குத் தன்னைத்தவிர வேறெதையும் நம்பாதே எனக் கூறுகிறது. உலகியல் சார்ந்தவற்றிலிருந்து எவ்வித உதவியையும் எதிர்பார்க்காதது. அதன் தொடக்கத் தூய்மையில் பணிவை வேண்டாதது. ஆயினும் அது உலகின் ஒரு பகுதியில் வியக்கத்தக்க வேகத்தோடு பரவியது. இன்றும் பௌத்தம் மனித குலத்தின் ஒரு பெரும் பகுதியினரின் மிகமுக்கிய சமயமாக உள்ளது".

முற்றும்.

# அநுபந்தம்

## சுவாசித்தலின்மேல் ஒருமுகப்படுத்தல்

### ஆனுபான சத்தி

ஆனுபான சத்தி சுவாசித்தலின்மேல் கவனம் செலுத்தல் என்று அர்த்தப்படும். ஆன என்பது மூச்சை உள்ளே எடுப்பது; அபான என்பது மூச்சை வெளியே விடுவதைக் குறிக்கும்.

மூச்சுவிடும் செய்முறையில், ஒருமுகப்படுத்தல், ஒரு மனநிலைப்படுத்தலுக்கும், இறுதியில் பரிசுத்தம் அல்லது அரகத்து நிலையைப் பெற உதவும் நுண்புலனுக்கும், இட்டுச் செல்கிறது. ஞானம் பெறமுன் புத்தர் சுவாசித்தலின்மேல் ஒரு முகப்படுத்தலை மேற்கொண்டார். இத்தீங்கற்ற ஒரு முகப்படுத்தல் எச்சமயத்தோராலும் மேற்கொள்ளப் படலாம்.

ஒரு வசதியான நிலையில் அமர்ந்து, உடம்பை நிமிர்த்திக்கொள். வலது கையை இடது கையின்மேல் வை. கண்கள் முற்றாக, அல்லது பாதி, மூடிய நிலையில் இருக்கலாம்.

கிழக்கத்தியர் பொதுவாகக் கால்களை மடக்கி, உடம்பை நிமிர்த்தி வைத்து உட்காருவர். அவர்கள் வலது பாதத்தை இடது தொடையிலும் இடது பாதத்தை வலது தொடையிலும் வைத்து அமருவார்கள். இதுதான் முழுநிலை எனப்படுவது. சிலசமயம் அவர்கள் பாதிநிலையிலும் அதாவது வலது அல்லது இடது பாதத்தைமட்டும் மற்றத் தொடையில் வைத்து உட்காருவர்.

முக்கோண நிலையை மேற்கொள்ளும்போது உடம்பு சரியான சமநிலையிலிருக்கும். கால் மடக்கிய நிலையை

மிகக் கஷ்டமெனக் காண்பவர் ஒரு நாற்காலியில் அல்லது வேறு ஒரு ஆசனத்தில் காலைத் தரையில் வைக்கக்கூடிய உயரத்தில் உட்காரலாம். இலேசாகவும் வசதியாகவுமுள்ள எந்நிலையையும் மேற்கொள்ளலாம். தலை குனிந்திருக்கக்கூடாது. கழுத்து, நாசி, நாபியிலிருந்து வரும் செங்கோட்டில் இருக்கத்தக்கதாக நிமிர்த்தப்பட வேண்டும்.

புத்தர்கள் பொதுவாகப் பத்மாசன நிலையையே மேற்கொள்கிறார்கள். அவர்கள் பாதி மூடிய விழிகளோடு மூன்றரை அடிக்கு மேற்படாத தூரத்தைமட்டுமே பார்த்துக்கொண்டு இருப்பர். இப்பயிற்சிக்கு முன் சுவாசப் பையிலிருக்கும் அசுத்தக் காற்றை வாயின்மூலம் மெல்ல வெளியேற்றியபின் வாயை மூடிக்கொள்ளவேண்டும்.

இப்போது நாசித் துவாரங்களின்மூலம் சாதாரணமாக வலு இன்றியும் அழுத்தம் இன்றியும் மூச்சை உட்கொள்ளவேண்டும். மனதில் ஒன்று என எண்ணுக; வெளிமூச்சு விட்டு இரண்டு என எண்ணுக; உள்மூச்சையெடுத்து மூன்று என எண்ணுக; இப்படியாக வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் பத்துவரை எண்ணுக. இப்படிச் செய்யும்போது ஒருவனின் மனம் அலையக்கூடும். ஆனால் அதன் காரணமாக மனந் தளர வேண்டாம். படிப்படியாக ஒருவன் பத்து எண்களடங்கிய ஐந்து கோவைகளுக்கு அதிகரிக்கலாம்.

பிறகு ஒருவன் உள்மூச்சையெடுத்துச் சிறிது தாமதித்து, எண்ணாமல் உள்மூச்சில் மட்டும் கவனம் செலுத்தலாம். வெளிமூச்சை விட்டு ஒரு கணம் தாமதிக்கவும். இப்படியாகச் சுவாசித்தலில் ஒருமுகப்பட்டு உள்மூச்சையும் வெளிமூச்சையும் மேற்கொள்க. சிலர் எண்ணுவதை விரும்புகின்றனர்; சிலர் விரும்புவதில்லை. ஒருமுகப்படுத்தல்தான் முக்கியமே தவிர எண்ணிக்கை அல்ல. அது துணையானது.

இவ்வொருமுகப்படுத்தலைச் செய்யும்போது ஒருவன் மிகுந்த அமைதியையும் மன-உடல் பாரமின்மையையும் உணர்கின்றான். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இதை மேற்கொண்டபின், அவன் இவ்வுடல் வெறும் மூச்சில் மட்டும் தங்கியிருப்பதையும், மூச்சு நிற்கும்போது உடல் மடிந்து போகும் என்பதையும் உணருவான். அவன் நிலையற்ற தன்மையை முற்றாக உணர்கிறான். எங்கு மாற்றமிருக்கிறதோ அங்கு ஒரு நிலையான பொருளோ அல்லது ஒரு இறவாத ஆன்மாவோ இருக்க முடியாது. பின்னர் நுண்புலன், அரகத்து நிலைக்கு வளர்க்கப்படலாம்.

இச் சுவாசித்தலின் மேல் ஒருமுகப்படுத்துவது ஒரு மனநிலையைப் பெறுவதற்காக மட்டுமன்றித் துன்பத்திலிருந்து விடுதலையளிக்க உதவும் நுண்புலனைப் பெறுவதற்குமாகும். சில உரையாடல்களில் இந்த எளிய, தீங்கற்ற சுவாசச் செய்முறை பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

“கவனத்தோடு அவன் உள்மூச்சு எடுக்கிறான், கவனத்தோடு அவன் வெளிமூச்சு விடுகிறான்.”

1. “நான் நீண்ட உள்மூச்சையெடுக்கிறேன்” என்பதை நீண்ட உள்மூச்சு எடுக்கும்போது அறிகிறான். நீண்ட வெளிமூச்சை விடும்போது அவன் “நான் நீண்ட வெளிமூச்சை விடுகிறேன்” என்பதை அறிகிறான்.

2. “நான் குறுகிய உள்மூச்சை யெடுக்கிறேன்” என்பதைக் குறுகிய உள்மூச்சு எடுக்குப்போது அறிகிறான். குறுகிய வெளிமூச்சு விடும்போது அவன் “நான் குறுகிய வெளிமூச்சை விடுகிறேன்” என்பதை அறிகிறான்.

3. முழுச் சுவாசச் செய்முறையை (ஆரம்பம், நடுப்பகுதி, முடிவு) தெளிவாக உணர்ந்தறிந்து, “நான் உள்மூச்சு எடுக்கிறேன்.” இப்படியாக அவன் தன்னைத்தானே பயிற்றுவிக்கிறான். தெளிவாக முழுச்சுவாசச் செய்முறையை உணர்ந்தறிந்து, நான் வெளிமூச்சு விடுகிறேன்;”

இப்படியாக அவன் தன்னைத்தானே பயிற்றுவிக்கிறான்.

4. சுவாசத்தை மட்டுப்படுத்தி, "நான் உள்மூச்சு எடுக்கிறேன்" இப்படியாக அவன் தன்னைத்தானே பயிற்றுவிக்கிறான். சுவாசத்தை மட்டுப்படுத்தி, "நான் வெளிமூச்சு விடுகிறேன்" இப்படியாக அவன் தன்னைத்தானே பயிற்றுவிக்கிறான்.

---

## ௯ண-இரக்கம் மேல் தியானம்

### (மெத்தா)

அசையாமல் அமைதியாக இரு.

மும் முறை சொல் — நமோ புத்தாய (புத்தருக்கு அஞ்சலி)

மும் முறை சொல் — அரஹம் (பரிசுத்தமானவன்)

உரத்துச் சொல் —

புத்தம் சரணம் கச்சாமி (நான் புத்தரிடம் சரண் புகுகிறேன்)

தம்மம் சரணம் கச்சாமி (நான் தம்மத்திடம் சரண் புகுகிறேன்)

சங்கம் சரணம் கச்சாமி (நான் சங்கத்திடம் சரண் புகுகிறேன்.[1])

◦ ◦ ◦

---

1. அன்னியமதத்தவர் இந்த மூகவுரையைத் தவிர்க்லாம்

இப்படியாக நினை.

என் மனம் எல்லா களங்கங்களிலிருந்தும் விடுவிக்கப் பட்டுத் தற்காலிக தூய்மையையுடையது: வேட்கை வெறுப்பு, அறியாமை என்பவற்றிலிருந்தும் விடுவிக்கப் பட்டது; எல்லாத்தீய எண்ணங்களிலிருந்தும் விடுவிக்கப் பட்டது; என் மனம் தூய்மையாகவும் துப்பரவாகவுமுள் ளது. மினுக்கப்பட்ட முகக் கண்ணுடியைப்போல் கறை யற்றது.

ஒரு துப்புரவான, கலியாண பாத்திரம் தூயநீரினால் நிரப்பப்படுவதுபோல நான் எனது துப்புரவான இதயத் தையும் தூய மனதையும் எல்லையற்ற அன்பான கனிவு, பொங்கி வழியும் கருணை, பரிவான களிப்பு, பரிபூரண அமைதி முதலியவற்றைப் பற்றிய உயரிய அமைதியான சிந்தனைகளால் நிரப்புகிறேன். நான் இப்போது கோபம், தீய எண்ணம், கொடுமை, அட்டூழியம், பொருமை, ஆசை, வெறுப்பு, என்பவற்றை என் இதயத்திலிருந்தும் மனத்திலிருந்தும் கழுவிவிட்டேன்.

பத்துத்தரம் நினை.

நான் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பேனுக! நான் துன்பம், பிணி, அவலம், கவலை, கோபம் முதலிய வற்றிலிருந்து விடுவிக்கப்படுவேனுக!

நான் திடகாத்திரமாக, தன்னம்பிக்கையுள்ளவனுக உடல் நலத்துடன் அமைதியாக இருப்பேனுக!

இப்படியாக நினை.

இப்போது நான் எனது தொகுதியின் ஒவ்வொரு துணிக்கையையும் எல்லையற்ற அன்பு, கனிவு, கருணை பற்றிய சிந்தனைகளால் நிரப்புகிறேன். என் முழு உடம் பும் அன்பான இரக்கம், கருணை முதலியவற்றுல் நிரப்பப்

யட்டுள்ளது. இவற்றின் ஒரு கோட்டையாக, ஒரு அரசுக நான் இருக்கிறேன். நான் அன்பான கனிவு, கருணையைத்தவிர வேறொன்றில்லை. நான் என்னை உயர்த்தி மேம்படுத்தி மாட்சிமையுடையவனுக ஆக்கியுள்ளேன்.

பத்துத்தரம் நினை.

நான் ² நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பேனுக! நான் துன்பம், பிணி, அவலம், கவலை, கோபம் முதலிய வற்றிலிருந்து விடுவிக்கப்படுவேனுக!

நான் திடகாத்திரமாக, தன்னம்பிக்கையுள்ளவனுக உடல் நலமாக, அமைதியாக இருப்பேனுக!

இப்படியாக நினை.

மனதுக்குரிய ரீதியில் நான் அன்பான கருணையின் ஒளிவட்டத்தை என்னைச்சுற்றி உருவாக்குகிறேன். இவ் வொளிவட்டத்தின் மூலமாக நான் எல்லா எதிர்மறை யான சிந்தனைகளையும் எதிரான அதிர்வுகளையும் வெட்டி யெறிகிறேன். மற்றவர்களின் தீய அதிர்வுகளால் நான் பாதிக்கப்படவில்லை. நான் தீமைக்கு நன்மையும், கோபத் துக்கு ஈனஇரக்கமும், கொடுமைக்குக் கருணையும் பொறு மைக்குப் பரிவான களிப்பையும் தருகிறேன். நான் அமை தியையும் நல்ல சமநிலையான மனதையும் உடையவன்.

இப்போது நான் ஈன இரக்கத்தின் அரசுகவும் நல் லொழுக்கத்தின் கோட்டையாகவும் இருக்கிறேன். நான் பெற்ற பலன்களை இப்போது மற்றவர்களுக்கு அளிக்கி றேன்.

உன்னுடைய உற்ருர் உறவினரை தனித்தனியாக அல்லது கூட்டம் கூட்டமாக நினைத்து, அவர்களை அன்

---

2. இதில் 'நான்' என்னும் சொல் மரபுரீதியாக உபயோ கிக்கப்பட்டுள்ளது.

பான கனிவு நிறைந்த, சிந்தனைகளால் நிரப்பி "எல்லா உயிர்களும் நலமாக மகிழ்ச்சியாக இருப்பதாக" என்ற சுலோகத்தை மீண்டும் உச்சரித்து, அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க அவர்களை வாழ்த்து. பிறகு எல்லாக் காணப்படும் உயிர்கள், காணப்படாத உயிர்கள், அண்மையிலிருப்பவை, சேய்மையிலிருப்பவை, ஆண், பெண், விலங்குகள் நாற்றிசைகளிலும் மேலும் கீழும் உள்ள எல்லா உயிர்கள் ஆகிய அனைத்தையும் நினைத்து அவைகளிடம் அன்பான கனிவைப் பகைமையின்றியும் தடங்கலின்றியும், சமயம், நிறம், பாலின வகுப்புப் பேதமின்றியும் செறியச்செய்.

வாழ்வு என்ற சாகரத்தில் எல்லோரையும் சகோதர சகோதரிகளாகவும், சக உயிர்களாகவும் நினை. நீ எல்லாரோடும் ஒன்றியிரு. நீ எல்லாரோடும் ஒன்றுபட்டவன்.

"எல்லா உயிர்களும் நலமாகவும் சந்தோஷமாகவும் இருப்பனவாக," என்றதை பத்துத்தடவை உரத்துச் சொல்லி அவர்கள் அமைதியாக மகிழ்ச்சியாக இருப்பதற்கு வாழ்த்து.

உன்னுடைய அன்றாட வாழ்வில் உன் சிந்தனைகளை நடைமுறையில் சந்தர்ப்பத்திற்கேற்பச் செயல்படுத்து.

# முழுநிறைவானவை

(பாரமி)

1. நான் தான தர்மமுடையவனாகவும் உதவியளிப்பவனாகவும் இருப்பேனாக! (தான—பெருந்தன்மை)

2. நான் நல்ல கட்டுப்பாடுடையவனாகவும் மேன்மையான ஒழுக்கத்தையுடையவனாகவும் இருப்பேனாக! நான் எனது காரியங்களில் தூய்மையாகவும் துப்பரவாகவும் இருப்பேனாக! எனது மனம், வாக்கு, காயம் பரிசுத்தமாக இருக்கட்டும்! (சீல—ஒழுக்கம்)

3. நான் சுயநலக்காரனாகவும், தன்னுடையாளனாகவும் இருக்காமல் தன்னலமற்றவனாக இருப்பேனாக! நான் மற்றவர்களுக்காக எனது சுகங்களைத் தியாகம் செய்யக் கூடியவனாக இருப்பேனாக! (நேக்கம்ம—துறத்தல்)

4. நான் விவேகமுள்ளவனாகவும் பொருள்களின் உண்மை - நிலையை அறியக்கூடியவனாகவும் இருப்பேனாக! நான் மெய்யொளியைக்கண்டு மற்றவரை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு இட்டுச் செல்வேனாக! நான் மெய்யறிவு பெற்று மற்றவரை மெய்யறிவு பெறச் செய்வேனாக! எனது அறிவின் பலன்களை மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடியவனாக இருப்பேனாக! (பஞ்ஞா—ஞானம்)

5. நான் சுறுசுறுப்பாகவும், வீரியமாகவும், விடா முயற்சியோடும் இருப்பேனாக! நான் எனது குறிக்கோளை அடையும்வரை விடாமுயற்சியோடு பாடுபடுவேனாக; நான் அபாயங்களைப் பயமில்லாமல் எதிர்த்து, எல்லாத் தடைகளையும் துணிவோடு வெல்லுபவனாக இருப்பேனாக! நான் மற்றவர்களுக்கு எனது திறமைக்கேற்றபடி திறம்பட பணியாற்றுவேனாக! (வீரிய—வீரியம்)

6. நான் எப்போதும் பொறுமையாக இருப்பேனாக; நான் மற்றவர்களின் தவறுகளைப் பொறுத்திருந்து தாங்குவேனாக! நான் எப்போதும் சகிப்புத்தன்மை மிக்கவனாக இருந்து எல்லாவற்றிலும் நன்மையையும் எழிலையும் பார்ப்பேனாக! (க்ஷந்தி—பொறுமை)

7. நான் உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பேனாக! இங்கிதத்துக்காக உண்மையை மறக்காமல் இருப்பேனாக! நான் என்றும் உண்மை எனும் பாதையிலிருந்து புரளாமல் இருப்பேனாக! (ஸச்ச—உண்மை)

8. நான் வலுவாகவும், மன உறுதியாகவும் இரும்பைப் போன்ற திடகாத்திரம் உடையவனாகவும் இருப்பேனாக! நான் மலரைப்போன்று மென்மையாகவும் பாறையைப் போன்று உறுதியாகவும் இருப்பேனாக! நான் என்றும் உயர் கொள்கைகளை உடையவனாக இருப்பேனாக! (அதித்தான—உறுதிப்பாடு)

9. நான் என்றும் கனிவாக, அன்பாக, கருணையாக இருப்பேனாக! நான் எல்லோரையும் எனது சகோதர, சகோதரிகளாகவும் எல்லாரோடும் ஒன்றுபட்டும் வாழ்வேனாக! (மெத்தா-கருணை- இரக்கம்)

10. நான் என்றும் அமைதியாக, சாந்தமாக, சமாதானமாக, கலக்கமின்றி இருப்பேனாக! நான் ஒரு சமநிலையான மனதைப் பெறுவேனாக; நான் பரிபூரண உள்ளமைதி உடையவனாக இருப்பேனாக! (உபேக்க—உள்ளமைதி) நான் பரிபூரணமாகத் தொண்டாற்றுவேனாக! தொண்டாற்றப் பரிபூரணமாக இருப்பேனாக!

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE
LIBRARY
46.
JAF...

Printed for
The Buddhist Publication Society, Kandy,
at The Saiva Prakasa Press,
450, Kankesanturai Road, Jaffna. J/49-71